www.tamilarangam.net

சரிநிகர்
SARINIHAR
# சரிநிகர்
சரிநிகர் சமானமாக வாழ்வமிந்த நாட்டிலே - பாரதி.

**நிறுத்திப்பின் பேசலன்றோ நெறி!**

அப்பா தொடக்கிவைத்த அம்மா மடிவளர்ந்த
இப்போதிவர் நடத்தும் இனக்கொலையை – தப்பாது
நிறுத்துவதுன் தர்மமென்றாய்! நீதியெனிற் போரை
நிறுத்திப்பின் பேசலன்றோ நெறி!

– ஈழமோகம்

இதழ் 56 செப். 29 - ஒக். 12 1994 விலை 7.00

## சமாதானத்தின் முதற்படி

# யுத்த நிறுத்தமே!

வடக்கு கிழக்கு இனப்பிரச்சினையை தீர்க்குமுகமாக நடைபெறவுள்ள உத்தேச பேச்சுவார்த்தைக்கான ஆரம்ப நடவடிக்கைகள் பூர்த்தியாகி விட்டன; புலிகள் தரப்பில் பேச்சுக்களில் கலந்து கொள்வோரது பெயர்கள் ஏற்கனவே அறிவிக்கப்பட்டு விட்டன; அரசு தரப்பில் முதலில் யாழ் செல்ல விரும்புவர்களின் பெயர்களும் அறிவிக்கப்பட்டு விட்டன; புலிகள் பேச்சுவார்த்தைக்கான நாட்குறிப்பதே பாக்கி என்று அரசு தரப்பில் தெரிவிக்கப்படுகிறது.

ஆயினும் இப்பேச்சுவார்த்தைகள் நடை பெற்றுக் கொண்டிருக்கும் போதே யுத்தமும் நடந்து கொண்டு தான் இருக்குமென்றே தெரியவருகிறது. யுத்த நிறுத்தமில்லாத ஒரு பேச்சுவார்த்தை 'பேச்சுவார்த்தை சுமுகமாக நடப்பதற்கான சூழலை இல்லாமல் செய்து விடும்' என்ற பிரபாகரனின் அறிவிப்பை யாரும் கணக்கிலெடுத்ததாக தெரியவில்லை.

யுத்தநிறுத்தத்தின் அவசியத்தை பிரபாகரன் சொன்னார் என்பதற்காகவே அதை நிராகரிப்பவர்கள் யதார்த்த நிலையைப் பார்க்கத் தவறுபவர் ஆவர்.

புலிகளின் மன்னார் தாக்குதல் போன்ற சம்பவங்களோ, மட்டக்களப்பில் நடந்த இராணுவத்தின் நடவடிக்கைகள் போன்ற சம்பவங்களோ தொடருமானால் இப் பேச்சுவார்த்தையை இடையில் முறித்துக் கொள்ள வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்படும் வாய்ப்பு உண்டு.


தெற்கிலே சிங்கள இனவாதிகள், இராணுவவாதிகளுடன் சிங்களத் தேசியப் பத்திரிகைகளும் சேர்ந்து கொண்டு பேச்சுவார்த்தைக்கு எதிரான கருத்துக்களை தீவிரமாகப் பிரச்சாரம் செய்வதில் இறங்கியுள்ளன. யுத்தசூழல் நிலவுகையில் நடைபெறும் ஒவ்வொரு சம்பவமும் பேச்சுவார்த்தை சிறப்பாக அமைய விடாது 'தடுக்கக் கூடும் என்பதையும், பேச்சுவார்த்தைக்கு எதிரான இருதரப்பிலும் இருக்கக் கூடிய சக்திகளை பலப்படுத்தக்கூடும் என்பதையும் அரசு கணக்கிலெடுக்கத் தவறியுள்ளதாகவே தோன்றுகிறது.

ஒருபுறம் யுத்தம், இன்னொரு புறம் பேச்சுவார்த்தை என்பது நடைமுறையில் காலத்தை இழுத்தடித்து மக்களை ஏமாற்ற வழிவகுக்குமேயன்றி பயனுள்ள எந்த முடிவையும் தரப்போவதில்லை. நிபந்தனையற்ற பேச்சுவார்த்தை என்ற பேரால் யுத்தம் தொடர்வது பேச்சுவார்த்தையை நோக்கமற்ற ஒன்றாகிவிடும் ஆபத்தைக் கொண்டுள்ளது.

யுத்தத்தை நிறுத்திவிட்டு, பேச்சுவார்த்தையை நடாத்துவதையே வடக்கு கிழக்கு மக்கள் மட்டுமல்ல, ஏதாவது நல்லது நடக்க வேண்டும் என்று விரும்பும் இலங்கையின் அனைத்து மக்களும் விரும்புகிறார்கள்.

ஏனென்றால் யுத்தத்தால் பாதிக்கப்படுபவர்கள் புலிகளை விடவும் அதிகமாக மக்களே. எனவே யுத்த நிறுத்தம் பயனுள்ள பேச்சுவார்த்தைக்கு மிகவும் அவசியமானது.

இதை செய்யவேண்டியது அரசே.
செய்யுமா?



'யுத்த-சமா'தானம்!

-ரஞ்சன்-

## பச்சையிலிருந்து நீலத்துக்கு

## பரிநிர்வாணமடைந்த சாமி!

ஓகஸ்ட் மாதம் 7ம் திகதி ஞாயிற்றுக்கிழமை. மட்டக்களப்புக் கச்சேரியில் ஓர் அவசரக்கூட்டம். அரசாங்க அதிபர் மோனகுருசாமி தலைமை தாங்க - மாவட்டத்தின் பனிரெண்டு பிரதேச செயலாளர்களும் கூட்டத்திற்கு பிரசன்னமாகியிருந்தனர். இவர்களுடன் மட்டக்களப்பில் குறிப்பாக முஸ்லீம் பகுதிகளில் பேரும் புகழும்(?) பெற்ற பிரபல நொத்தாரிசு சாமிநாதன் அவர்களும் கூட்டத்திற்கு வருகை தந்திருந்தது நடைமுறை நிர்வாகத்தில் சில செயலாளர்களுக்குப் புதுமையாகயிருந்தது.

முன்னாள் மட்டு மாவட்ட ஐக்கிய தேசியக் கட்சியின் அமைப்பாளரும் இந்நாள் பொ.ஐ.முன்னணியின் தீவிர ஆதரவாளருமாக 'பரிநிர்வாணம்' அடைந்துள்ள அரசாங்க அதிபர் மோனகுருசாமி அவர்கள் உரையாற்றும் போது உங்களின் மேலான நன்மையின் பொருட்டே உங்களையெல்லாம் இந்தக் கூட்டத்திற்கு அழைத்துள்ளேன். பொருளாதார ரீதியில் கஷ்டப்படும் நீங்களெல்லாம் அரசாங்கம் தென்னைச் செய்கைக்காக வழங்கும் மானியத்தைப் பெற்றுக் கொள்ளுங்கள். வாகரையில் எனது தென்னந் தோட்டத்திற்கருகில் (வாகரையில் அதிபருக்கும் ஐம்பது ஏக்கர் காணியுண்டு) ஆயிரக் கணக்கான ஏக்கர் முடிக்குரிய நிலமுண்டு. அவற்றில் ஆளுக்கு பத்து ஏக்கர் காணிக்கு உறுதி முடித்துக் கொள்ளுங்கள். இதோ நொத்தாரிசு சாமிநாதன் மிகு இலகுவாக அதை முடித்துத் தருவார். உறுதிச் செலவாக ரூபா 1500/=மட்டும் நீங்கள் ஒவ்வொருவரும் கொடுத்தால் போதும். 10 ஏக்கர் காணிக்கும் எப்

–2

## வதந்தி பரப்பும் கிழட்டு யானைகள்!

தேர்தல் பரபரப்புகள் ஓய்ந்து செல்லும் மட்டக்களப்பு மாவட்டத்தில் புதிதாக இப்போது பரவி வரும் வதந்திகள் பரபரப்பை ஏற்படுத்தி வருகின்றன.

ஓட்டமாவடியின் காட்டுப் பகுதிகளுக்கு கொள்ளி வெட்டச் சென்ற முஸ்லீம்களை புலிகள் அடித்து விரட்டியதாகவும் அப்பகுதியில் மேய்சலுக்குச் சென்ற 150 மாடுகளைப் புலிகள் சாய்த்துக் கொண்டு போய் விட்டதாகவும் காத்தான்குடியிலுள்ள ஒரு புடைவைக் கடையில் புலிகள் பணம் செலுத்தாமல் 50 சாறன்களை எடுத்துச் சென்றதாகவும் பலவாறாக வதந்திகள் அடிபடுகின்றன.

குறித்த இடங்களுக்குச் சென்று விசாரித்துப் பார்த்ததில் மேற்படி வதந்திகளில் சிறிதளவும் உண்மையில்லை என்பதை அறிய முடிந்தது.

மேலும் இவ்விடயத்தை ஊடுருவி ஆராய்ந்த போது இம்மாவட்டத் தமிழ் முஸ்லீம் மக்களிடையே ஏற்பட்டு வரும் நல்லுறவையும் பொ.ஐ.மு அரசு இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வொன்றைக் காண்பதில் காட்டி வரும் அக்கறையையும் சகித்துக் கொள்ள முடியாத ஐ.தே.கவினரின் வேலையே இது என்பது தெரிய வந்தது.

இனப்பிரச்சினைக்கு தீர்வு காணப்பட்டு புலிகள் ஆட்சிக்கு வந்து விட்டால் கிழக்கு மாகாண முஸ்லீம்களும் வடமாகாண முஸ்லீம்களைப் போன்று இரவோடிரவாக பிறந்த மண்ணிலிருந்து 'ஷொப்பிங் பேக்'குடன் வெளியேறிட வேண்டிய

→2

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# வடக்கிலிருந்து வெளியேற்றப்பட்ட முஸ்லிம்கள் மீளக் குடியேறுவது எப்போது?

இன்றைய நாட்கள் மாற்றங்களை உள்வாங்கியும் எதிர்பார்த்துமே நகர்ந்து கொண்டிருக்கின்றன. இலங்கை அரசியலில் ஏற்பட்டுள்ள மாற்றமே இவ்வாறான நிகழ்வுப் போக்கிற்கான முக்கிய காரணியாகும். எப்போதும்,மேல்மட்டங்களில், மக்களின் எதிர்பார்ப்புக்களுடன் கூடிய மாற்றங்கள் நிகழும் போது சகல துறைகளிலும் மாற்றங்கள் ஏற்படுவது அரசியலில் ஒரு நிகழ்வுப் போக்கே. மிகவும் பிரச்சினைகள் சூழ்ந்த இலங்கை அந்தப் பிரச்சினைகள் சார்ந்தே இந்த மாற்றங்களை உள்வாங்கி வந்துள்ளது. இப்போதைய இந்த மாற்றம் மிகவும் கவனத்திற்குரிய ஒன்றாக மாறியிருப்பதற்கு முக்கிய காரணம் அது பல சந்தர்ப்பங்களை ஏற்படுத்தித் தந்திருப்பதாகும். இந்த சந்தர்ப்பங்கள் 'எரியும்' நாட்டில் 'அணைக்கும் தண்ணீரைப்' போன்று தேவையானவையும் கட்டாயமானவையுமாகும். அதேவேளை இந்தச் சந்தர்ப்பங்கள் - பலதரப்பிலும் எவ்வாறு எதற்காக ஏற்படுத்தப்படுகின்றன என்பதும் கேள்விக்குரிய விடயங்களாகும்.

புலிகளிலிடமிருந்து சமாதான சமிக்ஞைகள் கிடைப்பதாகவும், இங்கிருந்தும் அதே சமிக்ஞைகள் காட்டப்படுவதாகவும் பத்திரிகைச் செய்திகள் பக்கம் பிடித்துக் கொண்டன. சந்திரிகா 'இந்தியா ருடே'க்கு அளித்த பேட்டியிலும் பிரபாகரன் பீ.பீ.சிக்கு அளித்த பேட்டியிலும் இந்த சமிக்ஞைகள் பற்றி பிரஸ்தாபிக்கப்பட்டுள்ளது. இந்தக் கருத்து வெளிப்பாடுகளுக்குள் மக்கள் விழித்துப்பார்த்துக் கொண்டிருப்பது ''பூனைக்கு யார் மணி கட்டப் போகிறார்கள்'' என்பதையே.

பரஸ்பர சமாதானப் பரிமாறலகளுக்கிடையே மட்டக்களப்புப் பகுதியில் புலிகள் மீதான அரச தாக்குதல்களும், மன்னார் கடற்பகுதியில் இடம்பெற்ற இலங்கையரசு கடற்படையினர் மீதான புலிகளின் தாக்குதலும், இன்னும் சில சம்பவங்களும் மக்களின் எதிர்பார்ப்பில் மண் அள்ளிக் கொட்டிக் கொண்டிருக்கின்றன. முக்கிய சக்திகளான அரசு - புலிகளைப் பொறுத்தவரை இவை அவர்கள் சம்பந்தப்பட்ட அவர்களின் பலம், பலவீனங்களைக் காட்டுகின்ற ஒன்றாக இருக்கலாம். ஆனால் அவை இரண்டும் (அரசு - புலிகள்) தாம் நிலை கொண்டுள்ள பெரும் மக்களை மறந்து போவதும் அவர்களின் எதிர்பார்ப்பிற்கு மாறாக நடப்பதும் மக்கள் பார்வைக்கு துயரமளிப்பதே. ஏனெனில் இந்தப் போராட்டங்கள் எந்த மக்களுக்காகத் தொடங்கப்பட்டனவோ அந்த மக்களும், எந்த மக்களைக் காப்பாற்றுவதற்காகத் எதிர் யுத்தம் தொடங்கப்பட்டதாகக் கூறப்படுகின்றதோ அந்த மக்களும் இன்று எதிர்பார்ப்பது யுத்தம் நீக்கி, பிரச்சினைகள் தீர்ந்த ஒரு தேசத்தையே எனவேதான் இந்தச் சந்தர்ப்பங்களின் பெறுமதியான பயன்பாடு அவதானத்திற்குரிய ஒன்றாக இருக்கின்றது.

இந்த சந்தர்ப்பத்தை அரசு நடத்தவிருக்கின்ற ஜனாதிபதித் தேர்தலிலும் தன்னைப் பலப்படுத்திக் கொள்வதற்காக பயன்படுத்துகின்ற ஒன்றாகவே கையாள்வதாக பேச்சுக்கள் அடிபடுகின்றன. அதுபோல் புலிகளும் இந்தச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தித் தங்கள் நிலையை மீளவும் பலப்படுத்திக் கொள்ளப் பயன்படுத்துவதாகவும் கதைபடுகின்றன. அதேவேளை இந்தச் சந்தப்பத்தை எதிர்க்கட்சிகள் அரசுக்கு எதிரான பிரச்சாரத்தை மேற்கொள்ளவும் பயன்படுத்துகின்றன. சிறுபான்மைக் கட்சிகள் இந்தச் சந்தர்ப்பத்தை அரசு பயன்படுத்துவது தங்களிலும் தங்கியிருப்பதாக கூறிக் கொள்கின்றன.

ஆக இவ்வாறான சூழ்நிலைகளால் இந்தச் சந்தர்ப்பம் தீர்மானங்களுக்கு உட்படாத ஒன்றாகவும் வழமைபோல் நழுவிப் போகப்பார்க்கிறதுமான ஒன்றாகவுமே இருக்கப் போகின்றதா என்ற அச்சம் எல்லார் மனதிலும் எழுந்துள்ளது.

யுத்தம் முற்றாக நிறுத்தப்படவேணடும் என்ற கோரிக்கை தென்னிலங்கை மக்களிடையே குறிப்பாக புத்திஜீவிகளிடையே நீண்ட காலமாகவே இருந்து வந்துள்ளது. அவர்களும் இப்போது ஏற்பட்டிருக்கும் சந்தர்ப்பத்தை அவர்களின் கோரிக்கையை மீண்டும் நம்பிக்கையுடன் முன்னெடுக்க பயன்படுத்திக் கொண்டிருக்கிறார்கள். யுத்தம் முற்றாக நிறுத்தப்படுவதைத் தான் எல்லோரும் விரும்புகிறார்கள். ஆனால் அந்த யுத்தம் நிரந்தரத் தீர்வுகளின்றி நிறுத்தப்படுவது சாத்தியமில்லை என்பதும் மறந்து விடப்படக்கூடிய ஒன்றன்று. இந்தச் சந்தர்ப்பத்தில் அன்டன் பால சிங்கத்தின் அறிக்கை கொஞ்சம் அவதானிப்பிற்குரியது. பிரிந்து போகும் தனிநாட்டுக் கோரிக்கையைக் கைவிட்டு வடக்கு கிழக்கு மக்களின் சுயநிர்ணய உரிமையுடன் கூடிய ஒரு மாற்றுத் திட்டத்தை அது சர்வதேச அளவில் ஏற்றுக் கொள்ளப்பட்டதாக இருக்கின்ற வேளை தாமும் ஏற்றுக் கொள்வதாகக் கூறியிருக்கின்றார்.

இப்போதைய பிரச்சினை புலிகள் - அரசை மையப்படுத்திய ஒன்றாகவே இருப்பதால் இவர்களின் இந்த விட்டுக் கொடுப்பு, சந்தர்ப்பங்களை சரியாகப் பயன்படுத்தும் போது சுமூகமான தீர்வுக்கு சாத்திய மாகலாம். ஆக எல்லாம் சந்தர்ப்பங்களின் சரியான பயன்பாட்டிலேயே தங்கியுள்ளது.

இந்தச் சந்தர்ப்பத்தில் நல்லதொரு பயனை எதிர்பார்த்துக் கொண்டிருக்கும் ஒரு மக்கட் கூட்டம் இருந்து கொண்டிருக்கிறது. வடக்கிலிருந்து முற்றாக விரட்டியடிக்கப்பட்ட முஸ்லீம் சமூகமே அந்த மக்கட் கூட்டம். அவர்கள் இந்தச் சந்தர்ப்பம் தங்களுக்கு நல்லதொரு விடிவைப் பெற்றுத் தரும் என்று நம்பிக் கொண்டிருக்கிறார்கள். வருகிற ஒக்டோபர் மாதத்துடன் அவர்கள் விரட்டப்பட்டு நான்கு வருடங்கள் பூர்த்தியாகின்றன. இந்த வேளையிலும் அவர்கள் நடந்த துர்பாக்கியங்களை மறந்து மன்னித்து தாம் சொந்த இருப்பிடங்களில் முன்னைப்போல் அமைதியாகவும், சமாதானமாகவும் வாழ விரும்புகிறார்கள். இவர்களின் இந்த எதிர்பார்க்கை இரு சக்திகளின் சந்தர்ப்பப் பயன்பாட்டிலேயே தங்கியுள்ளது. புலிகள் இவர்கள் மீளக் குடியேறலாம் என்றும் அதற்கான சந்தர்ப்பம் அரசு தரப்பிலிருந்து முற்றாக நம்பிக்கையுடன் கிடைக்கும் அமைதி நடவடிக்கையில் தான் தங்கியுள்ளது என்றும் தெரிவித்துள்ளார்கள்.

ஆக இந்த மாற்றம் உருவாக்கியுள்ள சந்தர்ப்பங்கள் எவ்வாறு பயன்மிகு முறையில் கையாளப்படுகின்றன என்பதில் தான் இன்றைய அரசியல் தங்கியிருக்கிறது. மக்களின் எதிர்பார்ப்புகள் எல்லாமே அதுதான்.

இறுதியாக ஒன்று சொல்லாம். சந்தர்ப்பங்களை ஏற்படுத்துவது ஒன்றும் சாதனையல்ல. சந்தர்ப்பங்களை சரியான முறையில் பயன்படுத்துவதே சாதனை அதுவும் இலங்கை போன்ற ஒரு நாட்டில் பயன்படுத்துவது மகா சாதனை!

**-பாதுஷா**

## பச்சையிலிருந்து...

படியும் 150,000/= மானியமாகக் கிடைக்கும். மற்றவையெல்லாம் நான் பார்த்துக் கொள்ளுவேன். ஆனால் தோட்டங்களுக்கு நல்ல பெயர்களையும் "GREEN LAND" போன்று சூட்டிக் கொள்ளுங்கள்'' என்று புத்தி வேறு சொல்லி முடித்தார்.

சாமியின் திடீர் அன்பிலும் கரிசனையிலும் சந்தேகம் கொண்ட, சாமியின் இப்படியான நடவடிக்கைகளில் ஒத்துழைக்காத பிரதேச செயலாளர்கள் சிலர் பின்வாங்கவே, கள்ள உறுதிக்கு மானியம் பெறும் கைங்காரியம் பிசுபிசுத்துப் போய் விட்டதாக அறிகிறோம்.

அரசாங்கக் கஜானா எப்படியெல்லாம் கொள்ளை போகிறது என்பதற்கு இது ஒரு சிறு உதாரணம்.

மட்டக்களப்பு மாவட்ட அரசாங்க அதிபர் மோனகுருசாமி அவர்கள் கடந்த காலங்களில் தன்னை ஓர் அரசாங்க அதிபர் என்று சொல்வதை விடவும்- ஐக்கிய தேசியக் கட்சியின் ஆத்மார்த்தமான ஓர் ஆதரவாளன் என்பதிலேயே பெருமை கண்டவர். கடந்த பொதுத் தேர்தல் காலங்களில் கட்டுப்பணம் செலுத்தும் தினத்திற்கு முதல் நாள் கூட தானும் ஐ.தே.க. வேட்பாளர் என்ற மாதிரியே போக்குக் காட்டினார். அதிலும் குறிப்பாக ஐக்கிய தேசியக் கட்சி வேட்பாளரான மௌலானா அவர்களையே தமது நட்சத்திர நாயகனாய் வேறு புகழ்ந்தார்.

தேர்தல் முடிவுகள் வரத் தொடங்கி பொ.ஐ.முன்னணி ஆட்சியமைத்த மறுகணமே சாமி அவர்கள் வேறு வேடம் பூண்டார்கள். வாக்கு எண்ணும் தினத்தன்று முகம் கொடுத்துப் பேசாத அரசாங்க அதிபர் அவர்கள் முடிவுகள் வெளியாகிய மறுநாளே முஸ்லீம் காங்கிரஸ் வேட்பாளர்கள் அனைவரையும் பார்க்க ஆசைப்பட்டவராக தொலைபேசியில் குழைந்தார். 21-08-1994 ஞாயிறன்றும் தான் கச்சேரியில் காத்திருப்பதாக வேறு கரிசனை காட்டினார்.

ஒரு காலத்தில் முஸ்லீம் காங்கிரஸ் என்றால் மூக்கைப் பொத்தியவர் இன்று தானும் ஓர் மௌலா முஸ்லீம் போல் வேடம் பூணுகிறார்.

மட்டு மாவட்ட மன்ற உறுப்பினர் எம்.எல்.ஏ.எம்.ஹிஸ்புல்லா அவர்களையோ அல்லது அவர்களின் கையெழுத்தையோ பார்ப்பதென்பது பாவம் என அரசாங்க அதிபர் அவர்கள் எண்ணிச் செயல்பட்ட காலமும் இருந்தது. ஆனால் இன்றோ நிலைமை வேறு. தம்பி அவர்கள் அமைச்சரானதும் குடும்ப சகிதமே காத்தான் குடிக்குப் போய் விட்டார் மோனகுருசாமி. வாழ்த்துக்களை வாரி வழங்கி விட்டார். பொ.ஐ.முன்னணி அரசாங்கத்தைப் போற்றிப் புகழ்ந்து விட்டார். மட்டு மாவட்டத்தின் நம்பிக்கை நட்சத்திரமாக மௌலானாவை வைத்திருந்த தமது இதய பீடத்தில் -தம்பி ஹிஸ்புல்லாவை பூசிக்கத் தொடங்கி விட்டார். தம்பியும் புகழ் பெருமையென்றால் கொஞ்சம் முழங்குபவர். சாமியின் கடந்த கால நடவடிக்கைகளை மறந்தவராக இன்னமும் மூன்று மாதங்களுக்கு இவரே அரசாங்க அதிபர் எனச் சொல்லி விட்டார். சாமியோ சரணம்!

## நிரப்பப்படாத காசோலையும் பறிக்கப்பட்ட கணக்காளர் பதவியும்!

கடந்த பாராளுமன்றத் தேர்தலில் திருகோணமலை நகரசபை உறுப்பினர்கள் நால்வர் போட்டியிட்டுத் தோற்றாலும் தோற்றனர். ''வெற்றியும் தோல்வியும் வீரனுக்கு அழகு'' என்ற பொன்மொழியை உதிர்த்துக் கொண்டே நகரசபையை ஒரு பாராளுமன்றம் ஆக்கி மகிழத் தொடங்கி விட்டனர்.

இதற்கு முன்னோடியாக கூட்டம் நடைபெறும் அறைக்கு ஒலிவாங்கி வசதி செய்யப்பட்டுள்ளது. இத்தனைக்கும் ஆக்கக்கூடுதலாக உறுப்பினரொருவருக்கும், தலைவருக்கும் இடையே உள்ள தூரம் பத்தடிக்கும் குறைவானது தான். என்றாலும் அடுத்த கட்டமாக தலைவருக்கு மேடை போடுவதென்றும், உறுப்பினர்கள் ஆளும்கட்சியினர் ஒரு வரிசையிலும் எதிர்க்கட்சியினர் மறு வரிசையிலும் அமர்ந்து செயலாற்றுவதென்றும் ஒரு உள்ளகத் தீர்மானம் வேறு இருக்கிறது.

அது மட்டுமல்ல, நகரசபை ''இன்டர்கொம்'' சபையாக மாறி விட்டது. தம்மைப் பெரிய உத்தியோகத்தர் என்று காட்டிக் கொள்ள விரும்பும் அனைவருக்கும் 'இன்டர் கொம்' வசதி செய்து தரப்பட்டுள்ளது. என்றாலும் யாருக்காவது வெளியிடத்திலிருந்து அழைப்பு வந்தால் அல்லது யாராவது உத்தியோகத்தர் வெளியாருடன் தொடர்பு கொள்ள நேர்ந்தால், அந்த உரையாடலை 'ஒட்டுக் கேட்கும்' வசதி கூடத் தலைவருக்கு வழங்கப்பட்டிருக்கிறது. அந்த அளவுக்கு ஊழியர்கள் மேல் தலைவருக்கு நம்பிக்கையாம். பொதுமக்கள் வரிப்பணம் இவ்வாறெல்லாம் பாழாகிறதே என்று கவலைப்பட வேண்டாம். ஏனெனில் இதை விடப் பெரிய கவலை வரியிறுப்பாளர்களுக்கு உண்டு. நிரப்பப்படாத காசோலைகளில் கையெழுத்துப் பெற்றுச் சென்று கொழும்பில் பொருட்கள் கொள்வனவு செய்தார்கள் என்றால் அவர்களின் திறமையை என்னவென்பது?

எழுதப்படாத காசோலையில் கையெழுத்து இட மாட்டேன் என்று கணக்காளர் மறுத்தார், விளைவு கணக்காளர் என்ற பதவியே செயலாளரின் ஆலோசனையின் பேரில் ஒழிக்கப்பட்டு கணக்காளர் காலியாக்கப்பட்டார். செயலாளர் தலைவரின் ஆசியுடன் பொருட்கள் கொள்வனவு செய்யப் போய் இரண்டு லட்சம் வரையில் ஆதாயம் காட்டினாராம். இதனால் கடந்த கூட்டத்தில் செயலாளருக்கு ஒரே புகழ்மாலை.

ஆனால் இக் கொள்வனவில் ஊழல் நடந்திருப்பதாகச் சந்தேகம் கொண்டு, ''கணக்காய்வு'' செய்து பார்த்த பிறகுதான் தலைவர் 'முழி'க்கத் தொடங்கியுள்ளார். பொருட்களின் தரத்திலும் மோசடியாம். விவகாரம் விசாரணையில்.

இந்தமாதம் கூட்டத்திலேயே செயலாளருக்கு ஏக வசைமாரி. நிர்வாகம் தெரியாதவர் என்று உறுப்பினர்கள் தலைவர் மேல் பாய்ச்சல். கூட்டம் நடைபெறும் போது செயலாளர் லீவில்!

திருகோணமலை வரியிறுப்பாளர்கள் அசடர்கள் என்ற தைரியம் இவர்களுக்கு!

- விவேகி

## வதந்தி...

நிலை ஏற்படும் என்பது போன்ற பீதி தரும் ஊகங்களையும் இவர்கள் பரப்பி வருவதை அவதானிக்கக் கூடியதாக இருந்தது.

ஐ.தே.கவின் பயங்கரவாத ஆட்சியில் தீர்த்து வைக்கப்படாமல் போன வட கிழக்குப் பிரச்சினை, பொ.ஐ.மு. அரசில் தீர்த்து வைக்கப்பட்டு விட்டால் இப்பகுதியில் ஐ.தே.கவிற்கு எஞ்சியிருக்கும் அற்ப சொற்ப செல்வாக்கும் இனி இல்லாது போய் விடும் என்ற கவலையே இவர்களை இவ்வாறான வதந்திகளைப் பரப்பும் அளவுக்குத் தள்ளியுள்ளதென்று கூறப்படுகிறது.

யானை படு பாதாளத்தில் விழுந்து கிடப்பதை தென்னிலங்கை ஐ.தே. கவினரே கண்டு கொள்ளாதிருக்கும் போது இங்குள்ள நமது 'கிழட்டு' யானைகள் மட்டுமேன் வாலை முறுக்கிக் கொண்டு திரிகின்றன என்று மக்கள் கேட்கின்றார்கள். தமிழ் முஸ்லீம் கலவரங்கள் உச்சக் கட்டத்தை அடைந்திருந்த 90 களிலிருந்து 'கொழுத்த' இலாபம் சம்பாதித்து வரும் இவர்களது வர்த்தகங்கள் இவ்விரு இனங்களுக்குகிடையிலான நல்லுறவு வலுவடைதால் வீழ்ச்சியுறலாமென அச்சமே இவ்வதந்திகளுக்கான பின்னணி என்றும் பேசப்படுகிறது.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# ஒடுக்கப்படும் தேசிய இனங்களைப் பாதுகாப்பது

# ஜனாதிபதி முறையா? பாராளுமன்ற முறையா?

– சுந்தரலிங்கம்

ஜனாதிபதி முறையா? பாராளுமன்ற முறையா சிறந்தது என்ற விவாதம் மீண்டும் அரசியல் அரங்கில் அடிபடத் தொடங்கியுள்ளது சிங்கள அரசியல் சக்திகளைப் பொறுத்தவரை பாராளுமன்ற முறையையே மீளக் கொண்டு வருதல் வேண்டும் என்ற கோரிக்கையின் விடாப் பிடியான போக்குக் காணப்படுகின்றது. 16 வருட ஜனாதிபதி ஆட்சியின் சர்வாதிகாரத் தன்மை, ஜனநாயக விரோதப் போக்குகள் அவர்களை அப்படியான நிலைக்குக் கொண்டு சென்றுள்ளது. தென் இலங்கையின் பிரதான அரசியற் கோரிக்கையாகவும், ஜனநாயகத் தன்மைக்கு உரமூட்டும் கோரிக்கையாகவும் இன்று இது வளர்ந்துள்ளது.

பிரதான அரசியற் கட்சிகளில் பொதுமக்கள் ஐக்கிய முன்னணி தேர்தல் காலத்தில் இருந்தே ஜனாதிபதி முறையை மாற்றப் போவதாகக் கூறி வருகின்றது. தென்னிலங்கையில் அதை நோக்கி அலை வீசுவதால் ஐக்கிய தேசியக் கட்சியும் ஜனாதிபதி முறையை மாற்றத் தயார் என்று கூறி வருகின்றது.


ஒவ்வொரு அரசியல் மாற்றத்தின் போதும் ஒடுக்கப்படும் தமிழர், முஸ்லீம், மலையகத் தேசிய இனங்களின் கருத்துகளை கேட்காதது போல இது விடயத்திலும் இவ்விரு கட்சிகளும் இவற்றின் சம்மதத்தைப் பெறுவதைப் பற்றி அலட்டிக் கொள்ளவில்லை. இவ்வொடுக்கப்படும் தேசிய இனங்களின் தலைவர்களும் கூட மேலோட்டமாக இது பற்றிப் பத்திரிகைகளுக்கு அறிக்கை விடுவதோடு தமது கடமைகளை முடித்துக் கொண்டனர்.

ஆனால், ஒடுக்கப்படும் தேசிய இனங்களைப் பொறுத்தவரையிலோ இவ் விடயம் ஓர் பாரதூரமான விடயமாகும். ஜனாதிபதி முறை ஒரு தனிமனிதனின் சர்வாதிகாரத்திற்கு வழி கோலுகின்ற போதும் அதன் தெரிவு முறை ஒடுக்கப்படும் தேசிய இனங்களுக்குச் சாதகமாக உள்ளது. ஒரு குறிப்பிட்ட பகுதி மக்களால் அல்லாது நாடு முழுவதிலும் உள்ள மக்களால் அவர் தேர்ந்தெடுக்கப்படுகின்றார். அதுவும் அவர் 50%த்துக்கும் அதிகமான வாக்குகளைப் பெறவும் வேண்டும். இதனால் ஒடுக்கப்படும் தேசிய இனங்களின் நலன்களை முற்று முழுதாக அவரால் ஒதுக்கி விட முடியாது. ஒடுக்கப்படும் தேசிய இனங்களைப் பொறுத்தவரை இந்நிலைமை அவர்களது ஒரு சில கோரிக்கைகளையாவது வென்றெடுக்கச் சாதகமானதாகும்.


ஆனால் பாராளுமன்ற முறையில் இதற்கு அவசியமில்லை. அங்கு அரசின் தலைவரான பிரதமர் எல்லா மக்களாலும் தேர்ந்தெடுக்கப்படுகின்ற ஒருவர் அல்லர். இதனால் இப்போதுள்ள அரசாங்கம் மாதிரி அரசாங்கக் கட்சிகளுக்கு அறுதிப் பெரும்பான்மை கிடைக்காத சந்தர்ப்பங்களைத் தவிர ஏனைய சந்தர்ப்பங்களில் ஒடுக்கப்படும் தேசிய இனங்களின் நலன்களைப் பற்றி அக்கறைப்பட வேண்டிய தேவைஎதுவும் பிரதமருக்கு இருக்கப் போவதில்லை. கடந்த கால பாராளுமன்ற முறை வரலாற்று அனுபவங்களே இதற்குச் சான்று. அதுவும் பேரினவாத அரசியல் அடித்தளம் இன்றும் தென்னிலங்கையில் ஆதிக்கம் வாய்ந்ததாக இருக்கும் போது பிரதமர் ஒடுக்கப்படும் தேசிய இனங்களின் கோரிக்கைகளை நிராகரிப்பதற்குச் சந்தர்ப்பங்கள் அதிகம்.

எனவே இந்நிலையில் பேரினவாத சக்திகளை சொற்ப அளவிலாவது வழிக்குக் கொண்டு வருவதற்கு அரசியலமைப்பு ரீதியாக ஒடுக்கப்படும் தேசிய இனங்களுக்கு கிடைத்திருக்கும் ஒரேயொரு துருப்புச் சீட்டு இந்த ஜனாதிபதி முறைதான். இதையும் இழந்தால், பேரினவாத சக்திகள் தம் இஷ்டப்படி தலை தூக்கி ஆடலாம்.

ஆனால் மறுபக்கத்தில் இந்த ஜனாதிபதி முறை ஓர் சர்வாதிகார ஆட்சிக்கு வழிகோலுகின்றது என்ற குற்றச்சாட்டையும் புறக்கணிக்க முடியாது. தனி ஒருவரிடம் அதிகாரங்கள் கையளிக்கப்படுவதும், அவர் யாருக்கும் பொறுப்புச் சொல்லாமலிருப்பதும், சட்டத்திற்கு அப்பாற்பட்டவராகக் கருதப்படுவதும் இயல்பாகவே அவரை சர்வாதிகாரியாக மாற்றிவிடும். இவ்வதிகாரத்தைப் பயன்படுத்தி ஜனநாயக விரோத செயற்பாடுகளில் இறங்குவதும் அவருக்கு சுலபமாக இருக்கும். கடந்த 16வருட ஜனாதிபதி ஆட்சிமுறை அந்த அனுபவத்தையே எமக்குத் தந்துள்ளது.







எனவே, ஜனாதிபதி முறை தொடர்பாக எதிர் எதிராக கிடைக்கும் இரண்டு பெறுபேறுகளையும் எம்மால் உதாசீனம் செய்து விடமுடியாது. ஒன்றுக்கு முக்கியத்துவம் கொடுப்பதன் மூலம் மற்றையதைத் தட்டிக் கழிக்கவும் முடியாது. தென் இலங்கை அரசியல் சக்திகள் இம்முறையில் ஒடுக்கப்படும் தேசிய இனங்களுக்கு கிடைக்கின்ற நலன்களைப் புறக்கணித்து விட்டு வரம்பில்லாத அதிகாரத்தை ஜனாதிபதி முறை கொண்டிருப்பதால் ஏற்படும் விளைவுகளுக்கே முக்கியத்துவம் கொடுக்க முற்படுகின்றனர். இதன் அடிப்படையிலேயே ஒடுக்கப்படும் தேசிய இனங்களுடன் எதுவித கலந்துரையாடல்களையும் நடத்தாது ஜனாதிபதி முறையை ஒழிப்போம் என உரத்துக் கத்துகின்றனர். நுணுக்கமாக அவதானிப்பின் இவ்வுரத்த கோசத்தில் மறைமுக இனவாதமும் கலந்திருக்கின்றது. ஆட்சி அமர்வில் ஒடுக்கப்படும் தேசிய இனங்களில் தங்கியிருக்கக் கூடாது என்பதே அதுவாகும்.

எனவே ஒடுக்கப்படும் தேசிய இனங்களைச் சேர்ந்தவர்கள் ஜனாதிபதி முறையின் எதிர் எதிரான இவ்விரண்டு பெறுபேறுகளிலும் ஓர் சமநிலையைப் பேணத்தக்க வகையில் தமது ஆலோசனைகளை வைப்பதே சிறந்ததாக அமையும். இந்த வகையில் இப்போதுள்ள ஜனாதிபதி முறையை தொடர்ந்து பேணுமாறு வற்புறுத்துவதோடு அதன் சர்வாதிகாரத் தன்மையை இல்லாதொழிக்கும் வகையில் சில திருத்தங்களையும் மேற்கொள்ளுதல் வேண்டும் என்பதை முன்வைப்பதே சிறந்ததாக அமையும்.

ஜனாதிபதியின் சர்வாதிகாரத் தன்மையைக் குறைப்பதற்கு பின்வரும் ஏற்பாடுகளை அரசியலமைப்பில் புகுத்துவது சாதகமாக அமையும்.

1 ஜனாதிபதி தனது அனைத்துக் கருமங்கள் தொடர்பாகவும் பாராளுமன்றத்துக்கு பொறுப்புச் சொல்லக் கூடியவராக இருத்தல் வேண்டும்.

2 அமெரிக்காவில் உள்ளது போன்று முக்கியமான நியமனங்கள், ஒப்பந்தங்கள் என்பவை தொடர்பில் ஜனாதிபதி பாராளுமன்றத்தின் அனுமதியைப் பெற வேண்டும். அமெரிக்காவில் இதற்கான அனுமதியைப் பாராளுமன்றமான காங்கிரசின் ஓர் அங்கமான செனற் சபையிடம் இருந்து ஜனாதிபதி பெறுகிறார். (இங்கு மந்திரி சபை அங்கீகாரம் பெறல் என்பது வழக்கிலுள்ளது. ஆயினும் மந்திரிப்பதவி ஜனாதிபதியின் பிச்சையாகவே இருப்பதால் நடைமுறையில் ஜனாதிபதியின் முடிவுகட்கு 'ஆமா' போடுவதே மந்திரிசபை முடிவாக உள்ளது. உண்மையில் மந்திரிசபையைக் கலைப்பது, மாற்றுவது தொடர்பான ஏற்பாடுகள் சமநிலையை பேணுவதற்கான நிலைமையை இல்லாது செய்துவிடுகின்றன.)

3. ஜனாதிபதியை பதவி நீக்கும் நீண்ட சுற்றுமுறை இல்லாதொழிக்கப்பட்டு பாராளுமன்றத்தின் 2/3 பெரும்பான்மையுடன் அவரை பதவி நீக்குவற்குரிய வழி செய்தல் வேண்டும்.

4. பாராளுமன்றத்தைக் கூட்டும், ஒத்திவைக்கும் அதிகாரத்தை ஜனாதிபதியிடமிருந்து நீக்குதல் வேண்டும்.

இவ்வாறு, ஜனாதிபதி முறையைத் தொடர்ந்து பேணுகின்ற போது, இப்போதுள்ள நிலை மாதிரி ஜனாதிபதி ஒரு கட்சியைச் சேர்ந்தவராகவும், பாராளுமன்றத்தில் பெரும்பான்மை இன்னோர் கட்சியைச் சேர்ந்ததாகவும் வரலாம். இந்நிலையில் என்ன செய்வது என்ற கேள்வி எழலாம். இவ்வாறான சந்தர்ப்பங்களில் பேராசிரியர் ஏ.ஜே. வில்சன் குறிப்பிட்டது போல இணக்க அரசியலைப் பின்பற்ற வேண்டியதுதான். ஜனாதிபதி தனது கட்சி அரசியலை விட்டுக் கொடுத்து பாராளுமன்றத்தோடு ஒத்துழைப்பதற்கு முன்வர வேண்டும். அமெரிக்காவில் இவ்வாறு பல தடவை நடந்துள்ளது. அச் சந்தர்ப்பங்களில் கடமையாற்றிய ஜனாதிபதிகள் எல்லாம் இணக்க அரசியலைப் பின்பற்றி வெற்றிகரமாகத் தமது கருமங்களை நிறைவேற்றியுள்ளனர். ஜனாதிபதி ரூஸ்வெல்ற் இதில் முக்கியமானவராக விளங்குகின்றார். 2ம் உலக மகா யுத்த காலத்தில் தன்னுடைய வெளிநாட்டு உடன்படிக்கைகளுக்கு செனற்சபையின் சம்மதத்தையும் பெற்றுக் கொள்ள வேண்டும் என்பதற்காக வெளிநாட்டு விடயங்கள் சம்பந்தமான பேச்சுவார்த்தைகளுக்கெல்லாம் செனற் சபையின் வெளிநாட்டு விவகாரக்குழுவையும் அழைத்துச் சென்றார். முடிவுகளை எடுக்கும் போது அவர்களுடன் இணைந்து முடிவுகளை எடுத்தார். இவ்வாறான செயற்பாடுகளை இலங்கை ஜனாதிபதிகளும் மேற்கொள்வதற்கு முன்வர வேண்டும். கட்சி அரசியல் நன்கு வேரூன்றியிருக்கும் இலங்கையில் இது கொஞ்சம் சிரமமானதாக இருக்கலாம். ஆனாலும் இதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு இது ஒரு அரசியல் கலாசாரமாக வளர்வதற்கு வழி செய்யப்பட வேண்டும்.

இறுதியாக, அரசியல் சக்திகள் அரசியல் திட்ட மாற்றங்களுக்கான சிபார்சுகளை முன்வைக்கும்போது நாட்டில் வாழும் முழு மக்களின் நலன்களிலிருந்து முன்வைக்க வேண்டுமே தவிர பெரும்பான்மை இனத்தின் நலன்களிலிருந்து முன்வைக்கக் கூடாது. அவ்வாறு அவர்கள் முன்வைப்பார்களாயின் வளர்ந்து வரும் இன முரண்பாடு மேலும் கூர்மையடைவதற்கு வழி செய்வார்களே தவிர அதனைத் தணிப்பதற்கு எந்தவித பங்கையும் ஆற்றமுடியாதவர்களாக இருப்பர்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



சரிநிகர்
4 ஜெயரட்ன மாவத்தை
திம்பிரிகஸ்யாய
கொழும்பு -05
தொலைபேசி: 584380

# பண்டாரநாயக்கா: மறுவார்ப்பே தேவை!

பண்டாரநாயக்கா நினைவு நாளான செப்டெம்பர் 26ம் திகதியை மீண்டும் விடுமுறையாக்கியுள்ளது அரசு. 17 ஆண்டுகளுக்குப் பிறகு பண்டாரநாயக்கா மீண்டும் முன்னுக்குக் கொண்டு வரப்பட்டிருக்கிறார்.

புதுயுகத்தின் சிற்பி, தேசியத்தின் தலைவர் என்றெல்லாம் புகழாரம் சூட்டுகின்றனர் அரச, பிற பத்திரிகைகள்.

இதே பத்திரிகைகள் தான் முன்னாள் ஜனாதிபதி பிரேமதாசாவையும் அவரது கட்சியையும் கூட இது போன்றவார்த்தைகளால் புகழாரம் சூட்டின என்பது வரலாறு.

இவ்வாறான பத்திரிகைகள் எப்போதும் ஒரே கொள்கையில் உறுதியாக இருந்து வந்திருக்கின்றன. (கொள்கை தவறா குன்றங்கள் இவை) அதுதான் எப்போதுமே ஆளும் கட்சிக்கு ஆதரவு செய்வது- தொண்டமானைப் போல!

எமது நாட்டின் எல்லா Mainsteam பத்திரிகைகளதும் பத்திரிகா தர்மமிது. வரலாறு குறித்த எந்த விதமான விமர்சன பூர்வமான பார்வையையும் இவை கொண்டிருப்பதில்லை.

இப்போது மறைந்த பண்டாரநாயக்கா அவர்களை உயிர்ப்பிக்கும் முயற்சியில் இவை இறங்கியிருக்கின்றன. அந்த வகையில் அவர்கள் தம்மால் இயன்ற 'பணி'யைச் செய்யட்டும். அவர் தேசியத் தலைவரா இல்லையா என்ற விவாதமும் நமக்கு முக்கியமானதல்ல.

ஒருவகையில், இந்த நாட்டின் அதிகாரப் பகிர்வுக்கான வழியாக சமஷ்டி முறையை முதன் முதலில் முன்மொழிந்த தீர்க்கதரிசி என்ற முறையில் இத்தகைய பாராட்டுகள் அவருக்குப் பொருத்தமானவையே.

ஆனால் அதே தீர்க்கதரிசிதான் 1956இல் தாம் வெற்றி பெறப் போவது நிச்சயமானதல்ல என்று உணர்ந்தவுடன் 24 மணிநேரத்தில் சிங்களத்தை அரச மொழியாகக் கொண்டு வருவேன் என்று சூளுரைத்தார்; வெற்றி பெற்றார்; நடாத்தி முடித்தார்!

தேர்தலில் வெற்றி பெறவேண்டும் என்ற ஒரே நோக்கத்திற்காக மற்றைய இனங்களுக்கு எதிராகத் தான் இயங்குகிறேன் என்ற தயக்கம் ஏதுமின்றி ஒரு குறுக்கு வழியைக் கையாண்ட 'பெருமை'யும் அவருக்குரியதுதான்.

இந்தத் தேர்தலுடன்தான் அதிகமாக இனவாதம் பேசும் தலைவர் வெல்வதும், அவரது கட்சி ஆட்சியைக் கைப்பற்றுவதுமான போக்கு ஆரம்பமாயிற்று.

என்றோ ஒருநாள் என் தந்தையில் வழி தொடர்வேன் என்று பள்ளிப் பராயத்தில் கூறிய சந்திரிகா இன்று பிரதமராகி விட்டார்.

தந்தையின் வழி தொடரும் அதிகாரமும் வாய்ப்பும் அவருக்குக் கிட்டிவிட்டன.

எனவே இப்போது இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வு காணவேண்டுமென்பதில் அக்கறையாக இருப்பதாகக் கூறும் பொ.ஐ.முன்னணி அரசு சிங்கள மக்கள் மத்தியில் பண்டாரநாயக்கா பற்றிய பிரதிமைகளை மீள்விப்புச் செய்வதில் நிதானமாகச் செயற்படுவது அவசியம்!

சிங்களச் சட்டத்தைக் கொண்டு வந்த பண்டாரநாயக்காவின் பிரதிமைகளை முன்நிறுத்துவது அவர் மீதான -அவரது கருத்துகள் மீதான எந்த விமர்சனமுமற்று அதனை வார்த்தெடுப்பது என்பது பொ.ஐ.மு அரசு உருவாக்க விரும்புவதாக கூறும் அரசியல் தீர்வுக்கான சூழலுக்கு உதவப் போவதில்லை என்பதை இங்கே சுட்டிக் காட்ட வேண்டியதாய் இருக்கிறது.

ஏனென்றால் பொஐ.முன்னணியானது ஏற்கனவேயான அரசியலமைப்பில் இயைபின்மைகளைச் சுட்டிக் காட்டி தாம் ஆட்சிக்கு வந்தால் அரசியல் அமைப்பைச் சீர்திருத்தம் செய்வோம் என்று கூறித் தேர்தலில் போட்டியிட்டது மட்டுமல்லாமல், வெற்றி பெற்று ஆட்சியமைத்தவுடன் அரசியலமைப்பை சீர்செய்வதற்கான பாராளுமன்றத் தெரிவுக்குழு ஒன்றையும் உருவாக்கி இருக்கிறது.

ஏற்கனவே 1970இல் சுதந்திரக் கட்சி தலைமையிலான ஐக்கிய முன்னணி அரசாங்கத்தினது -இதில் இலங்கையின் மாபெரும் இடதுசாரிக் கட்சிகளும் இணைந்திருந்தன- அரசியலமைப்பு மாற்றத்தில் சிறுபான்மையினர் காப்பீடுகள் அனைத்தையும் நீக்கியதையும், சிங்கள பௌத்தத்தை முதன்மைப்படுத்தியதையும் இந் நாட்டின் ஏனைய இனக் குழுமங்கள் மறந்திருக்கமாட்டா. அன்றைய காலத்திலும் பண்டாரநாயக்கா இப்போது போல திரும்பத் திரும்ப நினைவு கூறப்பட்டு வந்தார்!

இந்நிலையில் பொதுஜன முன்னணி அரசின் மீது ஏனைய இனக் குழுமங்கள் நம்பிக்கை கொள்ள வேண்டுமானால் பண்டாரநாயக்காவை முன்னிறுத்துவதல்ல அவசியமானது. அவர் இனவாத அரசியலினுள் தஞ்சம் புகுவதற்கு முன்பாக -அரசியலில் கால்வைத்த காலத்தில் குறிப்பிட்ட சமஷ்டித் தீர்வை முன்னிறுத்துவதே அவசியமானது.

அவரது காலத்தில் வளரத் தொடங்கி இன்று பலமாக அரச மதமாக வேரூன்றியுள்ள பௌத்த மத ஆதிக்கத்தை இல்லாதொழிப்பதும்

திறந்த பொருளாதாரக் கொள்கைக்குள் மனிதாபிமானத்தை தேடுவதை விடுத்து அவர் அடிக்கடி குறிப்பிட்ட 'ஐந்து சக்திகளை' அடிப்படையாகக் கொண்ட தேசிய பொருளாதாரத்தைக் கட்டியெழுப்புவது எப்படி என்று சிந்திப்பது என்பனவே முக்கியமானவையாகும்.

வரலாறு, புதிய சகாப்தத்தில் காலடி வைக்க விரும்புகிற ஒவ்வொரு கணமும் வரலாற்று ஞாபகங்கள் திரும்பத் திரும்ப உயிர்ப்பிக்கப்படுவது புதுமையல்ல.

ஆனால், இந்த உயிர்ப்பிப்பு வெறும் மறுபிறப்பாக இருந்தால் நடந்து முடிந்த இடைக்காலத்தைப் புரிந்து கொள்ளாத வரலாற்றுக் குருட்டுத்தனமே மேலோங்கும்.

பண்டாரநாயக்காவை மீள நினைவு கூர விரும்பினால் பொ.ஐ.மு செய்ய வேண்டியது, அவரை மறுவார்ப்புச் செய்வதே!

இன ஐக்கியத்தை, சமாதானத்தை உருவாக்கவல்ல மறுவார்ப்பையே!

# ஆணலை கவிதையின் கடைசி வரிகளுக்கு களம் தந்தவர் யாரோ?

சரிநிகர் 54வது இதழை வாங்கிப் பிரித்து சிறுகதை இல்லாத ஏமாற்றத்துடன் ''ஆணலை'' கவிதையை படித்து முடித்த போது உள்ளே தீ பற்றிக் கொண்டது.

எரிச்சல். பத்திரிகையை மடித்து வைத்து விட்டேன். படிக்க தோணாத குழப்பம். மறுநாள் கவிதையை ஒதுக்கி விட்டு ''எமக்கு வெட்கமாக இருக்கிறது. எவ்வளவு இனவாதிகளாக இருந்திருக்கிறோம்'' என்ற வெளிச்சத்தை வாசித்துக் குளிர்ந்து போனேன்.

சில வேளைகளில் முரண்படுகின்ற உங்கள் பாத்திர மாற்றத்தை விளங்கப்படுத்த நேரிடுகிறது. என் நெஞ்சத்தை நெரிடும் விடயங்கள் தொடர்பாகச் சில குறிப்புகள் இவை:

54வது இதழில் ஆத்மா என்ற கவிஞரின் **ஆணலை** என்ற கவிதையை வாசித்தேன். ''அனைத்து இனங்களுக்குமிடையிலான சகோதரத்துவ'' இயக்கம் பற்றி அறியத் தந்த கவிஞர் சேரனா இந்தக் கவிதையின் கடைசி வரிகளுக்குக் களம் தந்தார்.

கவிஞர்கள் கூட கோபத்தில் கல்லறையாவார்களோ? சிங்கள பௌத்த இனவாதிகளை விட நாம் ஒரு படி மேலே போய் விட்டோமோ?

***''காக்கிச் சட்டை சிங்கள நாய்களிடம் தோற்றுத்தான் போனேன் காண் இன்று''*** என்று விடிகிற வேளையில் இருளாய் உதிக்க எப்படி முடிகிறது. தரமான அந்தக் கவிதை நமது சோகத்தை மீட்டிய படி போய்க் கடைசியில் இப்படி ஜுவாலையை கொப்பளிப்பது மோசமானது/அசிங்கமானது.

காக்கிச் சட்டைக் காரர்களெல்லாம் சிங்களவர்கள் தானா? அப்படிப் பட்ட சிங்கள பொலிஸ் பிரிவுக்குள் மனிதாபிமானிகளே இல்லை என்ற வற்புறுத்தவா இந்த வரிகள்?

நாய் என்ற சொல் இழிவையே குறிக்கிறது. குறிப்பிட்ட ஒரு பிரிவை இழிவுபடுத்தி கவிதை செய்வது தானா தரமான முற்போக்குச் சிந்தனை?

புலிகளை விழித்து ''தமிழ் நாய்கள்'' என்றால் எம்மால் ரசிக்க இயலுமா? இதை உணர்வுபூர்வமான படைப்பு என்றுதான் பாராட்ட முடியுமா?

ஒரு அற்புதமான படைப்பாளியின் படைப்பை நுகரும் ஒருவன் இருட்டை வீசி சூரியனை ஏந்த வேண்டும்.

***''என் செய்யுள் ஒன்றை விதைத்தேன்***
***வாளொன்றை அறுவடை செய்தான்''*** என்ற மகாகவி அல்லாமா இக்பாலின் வரிகளை குறிப்பிட விரும்புகின்றேன்.

கோரத்தனமான மனிதாபிமானமற்றவர்கள் சிங்களவர்கள் என்று உணரவோ, உணர்த்தவோ முற்படுவது உயர்வாகி விட முடியாது. ஒரு பிரிவிற்குள் சில தீவிரவாதிகள்: மனிதாபிமானமற்றவர்கள் இருக்கலாம். அதற்காக இந்த இனத்தையை/பிரிவையே நாய்கள் என்று இழிவு செய்வது காத்திரமான ஒரு பத்திரிகையின் பண்புக்கு முரணானது.

நல்ல மனிதனைத் தேடும் இந்த யுகத்தில் இலக்கியப் போராளிகள் கூட வசையினின்றும் விடுபட்டு விசை கொள்வதே ஆரோக்கியமாய் அமையும் என்பது எனது பணிவான கருத்து.

**எம்.எச்.எம்.ஜவ்பர்**
**டிக்கோயா**

# தில்லுமுல்லுகளை வெளிப்படுத்தினேன் என்னை வெளியேற்றினார்கள்!

நான் கடந்த 22வருட காலமாக மட்டக்களப்பு நெடுஞ்சாலைகள் திணைக்களத்தில் லிகிதராகவும் பின்னர் பிரதம லிகிதராகவும் கடமையாற்றி வந்துள்ளேன். இந்தக் காரியாலயம் முதலில் நெடுஞ்சாலைகள் திணைக்களம் என்றும், பின்னர் வீதி அபிவிருத்தி அதிகார சபை என்றும், ஈற்றில் வீதி அபிவிருத்தி திணைக்களம் என்றும் பெயர் மாற்றப்பட்டாலும் ஒரே காரியாலயம்தான். நான் இக்காரியாலயத்தை விட்டு மாற்றலாகிப் போக பலமுறை முயன்ற போதும் எனது திறமை காரணமாக என்னை விடுவிக்க அப்போதிருந்த உயரதிகாரிகள் விரும்பவில்லை. இதனால் நான் இக்காரியாலயத்தில் பலகாலமாக வேலை செய்ய வேண்டிய நிலைமை ஏற்பட்டது.

நெடுங்சாலைகள் திணைக்களம் வீதி அபிவிருத்தி அதிகாரசபையாகியதைத் தொடர்ந்தது நானும் எனது ஒய்வூதியக் கையளிப்பினை நிறுத்தி வீதி அபிவிருத்தி அதிகார சபையில் சேர்ந்தேன். பின்னர் 1.2.90ல் இருந்து இந்தக் காரியாலயம் வடக்கு கிழக்கு மாகாணசபைக்கு பாரமளிக்கப்பட்டது. அன்றிலிருந்த இக்காரியாலயம் வீதி அபிவிருத்தி திணைக்களமாக மாற்றப்பட்டது. இதிலும் நான் பிரதம லிகிதராக கடமையாற்றினேன். 1.5.93ல் நான் 55வயதை அடைந்ததும் எனது நிற்பாட்டி வைத்த ஓய்வூதியத்தை பெறலானேன். ஓய்வூதியம் பெறத்தொடங்கியதும் 1.5.93ல் இருந்த மீள்சேவையில் சேர்க்கப்பட்ட நான் முன்னர் இருந்த பதவியிலேயே அமர்த்தப்பட்டேன். காரணம் என்னைப் போன்ற அனுபவம் மிக்க ஒரு ஊழியர் தேவை என்றபடியாலேயே எனக்கு இந்தப் பதவியைத் தந்தார்கள்.

திடீரென 11.4.94இல் எனக்கு எனது திணைக்களத் தலைவரிடமிருந்து ஒரு கடிதம் வந்தது. அதில் என்னை உடனடியாக திருகோணமலைக்கு மாற்றம் செய்யப்பட்டுள்ளதாக குறிப்பிடப்பட்டிருந்தது. நான் உடனே தொலைபேசியில் எனது தலைமைக் காரியாலயத்திற்கு தொடர்பு கொண்டு இது தொடர்பாகக் கேட்ட போது, இது ஒரு அரசியல் இடமாற்றம் என்றும், களுவாஞ்சிக்குடி ஐ.தே.க அமைப்பாளர் திரு.தவராசா என்பவர் வடக்குக் கிழக்கு மாகாண ஆளுநர் திரு.லயனல் பெர்ணாண்டோவுக்கு விடுத்த வேண்டுகோளை அடுத்து நான் இடமாற்றம் செய்யப்பட்டுள்ளதாக அறிந்தேன்.

இது சம்பந்தமாக நான் கூறவேண்டியது என்னவென்றால்

1. மட்டக்களப்பில் வேலை செய்யும் என்னைப் பற்றி களுவாஞ்சிக்குடி ஐ.தே.க அமைப்பாளர் என்ன தெரிந்து வைத்திருக்கிறார்?

2. வடக்குக் கிழக்கு மாகாண ஆளுநர் ஒரு நிர்வாக அதிகாரியாக இருந்தும் ஒரு சாதாரண அரசியல் கட்சி அமைப்பாளரின் வேண்டுகோளை ஏற்று எனது திணைக்களத் தலைவரிடம் இருந்து என்னைப் பற்றி ஒரு அறிக்கையாவது கோராமல் என்னை இடம் மாற்றியது சரியானதா?

இதிலுள்ள உண்மையென்னவென்றால் நான் அந்தத் திணைக்களத்தில் வேலை செய்வதால் தங்கள் தில்லுமுல்லுகள் வெளியே வருகின்றன என்று பயம் கொண்ட இரு வெளிக்கள உத்தியோகத்தர்கள் தமது உறவினரான களுவாஞ்சிக்குடி ஐ.தே.க அமைப்பாளரை கொண்டு நடத்திய நாடகம் தான் இது.

இதனால் நான் 22வருடகாலமாக கௌரவமாக வேலை செய்த இடத்தை திடீரென காலிசெய்தேன். இது எனக்கு பெரும் மன உழைச்சலையும், கௌரவக்குறைவையும் ஏற்படுத்தியுள்ளது. எனக்கு நியாயமான தீர்வு கிடைக்க வழி செய்ய முடியுமா?

**சி.சிவலிங்கம்**
**மட்டக்களப்பு**

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



பாலம்

# புதிய பேச்சுவார்த்தைக்கு முன்னுரையாக விடுதலை புலிகளுக்கு ஒரு வேண்டுகோள்!

## எமது சகோதரப் பத்திரிகையான "யுக்திய"விலிருந்து நிஷாந்த எழுதுகிறார்

இப்போதெல்லாம் நாட்டின் அரசியல் நிகழ்ச்சிகள் மிகவும் வேகமாக நடைபெறுகின்றன. மாலை ஒலிபரப்பப்படும் செய்திகளுடன் ஒப்பிடுகையில் காலை ஒலிபரப்பப்பட்ட செய்திகள் பழைய செய்திகளாகி விடுகின்றன. அவ்வளவு வேகம்! புதிய அரசாங்கம் பதவிக்கு வந்ததை அடுத்து, பொ.ஐ.மு. தனது தேர்தல் கால வாக்குறுதிகளில் ஒன்றான இனப்பிரச்சினைக்கு தீர்வுகாணும் முயற்சியில் இறங்கியுள்ளதால் கடந்த சில தினங்களாக இந்த நிலைமையே நிலவுகிறது.

யாழ்ப்பாணத்திற்கு தெற்கேயும், கிழக்கிலும் வாழ்கின்ற பெரும்பான்மையான மக்க்ள், புதிய அரசின் பதவியேற்புக்குப் பிறகான புலிகளின் நடவடிக்கைகள் பொதுவாக நம்பிக்கை தருவதாகவே கருதுகின்றனர். இவ்வாறே, அரசும் புலிகளும் ஒரு உடன்பாட்டுக்கு வருவதன் மூலம் இந்த நாட்டில் யுத்தம் மறைந்து சமாதானம் உதிக்கும் என்ற நம்பிக்கையும் விருப்பமுமே தெற்கிலுள்ள முழு மக்களிடமும் நிலவுகின்றன. இந்த விருப்பங்களை நடைமுறைக்கு கொண்டு வர இருபகுதியினரும் தமது சந்தேகங்களையும் கோபங்களையும் மறந்து ஒருவரோடு ஒருவர் திறந்த மனதுடனும், நம்பிக்கையுடனும் சரியான, மனப்பூர்வமான உணர்திறனுடனும் (INSIGHT) கலந்துரையாட வேண்டும். கோபம் உண்மையை மறைக்கிறது; ஒருவர் முகத்தை நேர்மையான முறையில் நோக்க அனுமதிப்பதில்லை.

பயன்மிக்க கலந்துரையாடலுக்கு, இருதரப்பாரும் இரு அடிப்படையான விடயங்களில் உடன்பாட்டுக்கு வருவது ஒரு முன்நிபந்தனையாகும். அவையாவன:

1. கலந்துரையாடலுடன் சம்பந்தப்பட்ட எல்லா விடயங்களும் உண்மைக்கான பாதையை திறந்துவிடும் தேடலிலிருந்து எழவேண்டும்.
2. கலந்துரையாடல்கள் நம்பிக்கைக்கும், அபிப்பிராயங்களுக்கும் வழிதிறந்து விடுதல் அவசியம் என்பதற்கு உரிய கவனிப்பும், மரியாதையும் கொடுக்கப்பட வேண்டும்.

கலந்துரையாடலில் ஈடுபடும் இரு பகுதியினரும் இவ்விரண்டு வழிப்படுத்தும் கோட்பாடுகளிலும் விஷேட முக்கியத்துவம் தரவேண்டும். வெறும் நம்பிக்கை மட்டுமே ஒரு நல்ல முடிவுக்கான உறுதியான அடித்தளத்தைத் தரப்போவதில்லை. வெறும் நம்பிக்கைகளை மட்டுமே கொண்டு எழுதப்பட்ட பண்டார நாயக்கா-செல்வநாயகம் ஒப்பந்தமும் சரி (26 யூலை 1957), டட்லி சேனநாயக்க-செல்வநாயகம் ஒப்பந்தமும் சரி (மார்ச் 1965), இலங்கை இந்திய ஒப்பந்தமும் சரி (29 யூலை 1987) எல்லாமே இறுதியில் தோல்வியிலேயே முடிவடைந்தன.

தெற்கிலுள்ள மிகப் பெரும்பான்மையான மக்களது அபிப்பிராயத்திற்கு உரிய மதிப்புக் கொடுக்கும் அதே நேரத்தில் நான் ஒரு விடயத்தை இவ்விடத்தில் குறிப்பிடக் கடமைப்பட்டுள்ளேன். அதாவது இன்றைய காலகட்டம் தான், எல்லோரது மனதிலும் உறுத்திக் கொண்டிருக்கும் இனப்பிரச்சினைக்கு ஒரு உறுதியான தீர்வைக் காண்பதற்கான எல்லாவிதமான வாய்ப்பான கருமங்களையும் ஆற்ற வேண்டிய காலகட்டமாகும்; இப்போது வடக்கை வதைத்துக் கொண்டிருக்கும் யுத்தத்தை முடிவுக்கு கொண்டுவர வேண்டும்.

இறுதி ஆய்வில் இலங்கை அரசாங்கத்தினதும் சரி, விடுதலைப் புலிகளதும் சரி இருவரதும் நோக்கங்களும் ஒன்றாகவே இருப்பதாக எனக்குத் தோன்றுகிறது. வேறு வார்த்தைகளில் சொன்னால். நாம் பிரதிநிதித்துவப்படும் மக்களுக்கு பதில் கூறவேண்டிய பொறுப். இருதரப்பினருக்கும் இருக்கின்றது என்ற உண்மை இருவருக்கும் பொதுவானதே. வடக்கிலுள்ள தமிழ் மக்களது ஏகப்பிரதிநிதிகளாக புலிகள் தம்மைக் கூறுகின்ற அதே வேளை சிங்கள மக்களது பாரம்பரியத்தை மட்டுமே பாதுகாக்கின்ற பொறுப்பைக் கொண்ட நிறுவனமாகவே அரசாங்கம் இயங்கி வருகிறது. அரசாங்கம் கொலனித்துவ காலத்துக்கு முன்பும் கூட ஓரளவுக்கு இதே நிலைதான் இருந்தது என்ற போதும் 1956ல், அரசியலமைப்புச் சட்டத்தின் 33வது சரத்து பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டபின் தான் அது தெளிவாக தெரிய ஆரம்பிக்கிறது.

ஆனால் உண்மையில் சட்ட விதிகளினால் உருவாக்கப்பட்டுள்ள உயர்மட்ட அமைப்பான அரசாங்கமானது மக்களது வாழ்க்கையையும் அவர்களது சமூக பழக்கவழக்கங்களையும் ஒழுங்கு செய்வதற்கான சட்டத்தையும் விதிமுறைகளையும் அறிவிக்க வேண்டியதாக உள்ளது. இந்த அடிப்படையில், அரசின் கட்டுப்பாட்டுப் பகுதியில் ஒழுங்கையும் சட்டத்தையும் பேணுவதற்குப் பொறுப்பானவர்களைக் கொண்ட ஒரு அமைப்பாகவே அரசாங்கம் உள்ளது.

ஆகவே, ஒரு அரசினது பிரதான பொறுப்பு என்னவென்றால் தான் எந்தவொரு குறிப்பிட்ட தேசிய இனத்திற்கோ மதக்குழுவிற்கோ மட்டும் சொந்தமான தனிப்பட்ட பிரதிநிதியல்ல என்று நிரூபிப்பது மட்டுமல்ல. தான் எல்லா இனக்குழுக்களதும் பிரதிநிதி என்றும் காட்ட வேண்டும். அரசாங்கங்களின் இப்பாகுபாட்டுத் தன்மை காரணமாக விடுதலைப்புலிகள், ஒரு இனத்தின் குரலையும், அபிலாசைகளையும் பிரதிநிதித்துவப்படுத்தும் ஒரு அமைப்பாக உள்ளனர்.

விடுதலைப் புலிகள் ஒரு பாசிச இயக்கமா இல்லையா என்பது இக் கலந்துரையாடல்களில் விவாதிக்கப்பட வேண்டியளவு முக்கியமான விடயம் என நான் நினைக்கவில்லை. விடுதலைப் புலிகளைப் போலவே பிற தமிழ் இயக்கங்களும் தம்மை அதி தீவிரவாத நடவடிக்கைகளில் ஈடுபடுத்திக் கொண்டவை என்பது குறிப்பிடத்தக்கது.

இவ்வெல்லா இயக்கங்களிலும் விடுதலைப் புலிகளே மிகவும் அதிகளவு பாசிசப் போக்குகளை கொண்டிருந்த இயக்கம் என்பது உண்மைதான். ஆயினும் பிரபாகரனோ அவரது இயக்கமோ இப்படி ஆகிப் போவதற்கான காரணம் என்ன என்பது அவ்வாறே வெளிப்படையானதே. எனவே இது தொடர்பான விவாதத்தை விடுத்து, நல்ல தீர்வை பெறுவதற்கு ஏற்ற விதத்தில் இருதரப்பினரதும் வரலாற்றைப் பற்றிய விழிப்புணர்வுடன் நிதானமாக இரு தரப்பாரும் பேச்சுவார்த்தைகளில் ஈடுபட வேண்டும்.

வழமையான, விளம்பர நடவடிக்கைகளால் -யுத்த நிறுத்தம், பிரதமர் யாழ்ப்பாணம் போதல், பிரபாகரன் கொழும்பு வருதல் போன்ற கதைகளால்- சலிப்படைந்திருக்கும் மக்களை ஏமாற்றிவிட முடியாது. அவர்கள் பயனுள்ளதாக, உருப்படியானதாக ஏதாவது நடக்க வேண்டும் என்று எதிர்பார்க்கிறார்கள்.


சிங்கள மக்கள் மத்தியிலிருந்து நிறைய உதாரணங்களை காட்ட எனக்கு முடியும். ஆனாலும், நான் இப்பத்தியை ஐரோப்பிய நாடொன்றில் அகதியாக வாழும் எனது தமிழ் நண்பரொருவரின் கடிதத்தின் ஒரு பகுதியை மேற்கோள் காட்டி முடிக்க விரும்புகிறேன். அதிலுள்ள செய்தி விடுதலைப் புலிகள் தலைவர் பிரபாகரனும் பிற அரசியல் வாதிகளதும் காதுகளில் விழும் என்று நம்புகின்றேன்.

''இலங்கையில் எல்லாமே வேகமாக மாறிக் கொண்டிருக்கின்றன. எனது பயம் என்னவென்றால், இதே வேகத்தில், எல்லாம் தலைகீழாக மாறி பழைய இடத்துக்கு வந்து விடக்கூடாது என்பதுதான். அப்படி ஒன்று நடந்தால் என்ன நடக்கும்? நானும், என்னோடு இங்கு அகதிகளாக வாழ்கின்ற மற்றையோரும் எமது நாட்டுக்கு திரும்பி வர விரும்ப மாட்டோம். அப்படி வந்தோமானால், அழிவும், கொலைகளும் நிறைந்த ஒரு சூழலுள் நாம் வீழ்த்தப்பட்டவர்களாவோம். 1956ல் இருந்து இந்தப் பயங்கரத்தை நான் அனுபவித்திருக்கிறேன். எனது வாழ்நாளின் இறுதிக் காலத்தை நான் அடிமை போல வாழ்ந்து கழிக்க விரும்பவில்லை. பேசப்போகும் இரு தரப்பாரது கலந்துரையாடல்களும் எமது உணர்வுகளையும் புரிந்து கொண்டு பேசப்படும் கலந்துரையாடல்களாக அமைய வேண்டுமென்றே விரும்புகின்றேன்''


நிஷாந்த

# நாடோடிகள்

('வானமே எல்லை' கவிதைப் போட்டியில் மூன்றாம் இடத்தைப் பெற்றுக் கொண்ட கவிதை.)



சிகரெட்டின் புகைவளையங்கள்
அவனது படுக்கையிலிருந்து, மேசையிலிருந்து, அறையிலிருந்து
அவனைச் சுற்றிச் சுற்றி வெளியேறின.
யன்னலைத்தாண்டி கொய்யா மரத்தையும் கிளிசேரிரா மரத்தை
யும் தாண்டி
மப்புக் கொண்ட காலையில்
குடிமனைகளின் ஊறிய கருஞ்சிவந்த கூரையையும் கடந்து
அவை போயின.
அவனும் ஊதல்காரர்களும் நம்பினார்கள்
அவை துயரத்தைச் சுமந்த நாடுநகர்
காடு தலங்களைத் தாண்டி விடுவதாக.....
ஆனால் எப்போதாவது
கடற்கரையில் நண்பர்களுடன் கிரிக்கெட் விளையாடுவான்.
அலை வந்து பந்தை நனைக்க
விக்கெட்டுக்களை சரித்துவிட்டுப் போக
மறுபடியும் நட்டு
இருண்ட பிறகு பந்து தொலைந்து போகும் வரையும்
கடற்கரை ஒழுங்கையால் நண்பர்களுடன் திரும்புவான்.
அதுபோல தொடர்ந்து இருக்க முடியவில்லை
கவிதைகள்செத்துக் கொண்டு போகிறது
தற்கொலையைப் பற்றியும்
சஞ்சலம், கிலேசம், மனஅழுத்தம்
இவை பற்றியும் கவிதையில் வந்தால்
அவன் கவிஞனாக இருக்க விரும்பவில்லை.
தண்டவாளத்தில் தலையை வைத்து
குருதி தரித்து மரித்துப் போவான்
நெடுவான் பறந்தும் திரவியம் தேடப் போயினர் நண்பர்
அவன் இங்கிருப்பதா? பரதேசம் போவதா?
வடநாட்டிற்குப் போவதா?



-நட்சத்திரன் செவ்விந்தியன்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



## எதிலிருந்து தொடங்குவது - 11

# போயின போயின காலங்கள் !

**அ.டேவிட் நந்தகுமார்**

முதலில் வந்த செய்தி முஜிபுர் ரகுமான் கொல்லப்பட்டதே. இராணுவச் சதியொன்றினால் அவர் கொல்லப்பட்டார். பங்களாதேஷின் முதலாவது பிரதமர். குளியலறைக்குள் ஒளிந்திருந்த அவரது சிறு வயதுப் பேரனையும் இழுத்தெடுத்து சுட்டுக் கொன்றது இராணுவம். அதாவது பங்களாதேஷில் முஜிபுர் ரகுமானின் எச்ச சொச்சங்கள் கூட இல்லாமல் அழிக்கப்பட்டது.

நமக்கு பத்து வயது முடிந்திருக்கிற பருவம். 1971 ஆம் ஆண்டு.

இலங்கையின் சிங்களப்பகுதியில் சேகுவேராப் புரட்சி நடந்து முடிந்திருந்த காலம். (அப்போது ஜே.வி.பி கிளர்ச்சி 'சேகுவேராப் புரட்சி' எனவே அறிமுகப்படுத்தப்பட்டிருந்தது).

சேகுவேராப் புரட்சி பயங்கரமானது. நம் பிஞ்சு மனங்களில் கொடூரமான சித்திரத்தையே சேகுவேராப் புரட்சி தந்திருந்தது. சேகுவேராப் புரட்சியின் மிக முக்கியமான அம்சமென நாம் அறிந்தது இதுதான். ஐம்பத்தைந்து வயதடைந்தவர்கள் யாவரும் கொல்லப்படுவார்கள். சேகுவேராப் புரட்சி நடந்தால் இது நடக்கும். நமக்குப் பயங்கரத்தைத் தந்த செய்தி இதுதான். நாம் இறைவனை வேண்டுவதில் இதுவும் ஒன்று. சேகுவேராப் புரட்சி வெல்லக்கூடாது.

சேகுவேராப் புரட்சியையிட்டு இன்னொரு செய்தியும் இருந்தது. தமிழர்களைக் கண்டால் சேகுவேராக்கள் கொல்வார்கள். நம் பயப்பீதி அதிகரித்தது.

சிங்களப் பகுதியிலிருந்து ஒரு செய்தியும் நமக்குக் கிடைக்கிற பாடாக இல்லை.

ஊரடங்குச் சட்டம் போட்டிருந்தார்கள். நிறைய நாட்களாக ஊரடங்குச் சட்டம். என் வாணாளில் முதல் அறிந்த ஊரடங்குச் சட்டம் அதுதான். ஐயா, என் கை பிடித்து ஊரடங்குச் சட்டம் என்றால் என்னவென்று விளங்கப்படுத்தினார்.

நம் குடிசையின் முற்றத்திற்கு வரவே அஞ்சினேன்.

''இந்த நேரத்திலை றோட்டிலை பொலிஸ் எங்களைக் கண்டால் சுடுவான்கள்'' ஐயா சொன்னார்.

இரவில் மாத்திரமே முற்றத்தை எட்டிப் பார்த்தேன். பகலில் வீட்டுக்குள் அடங்கிப் போனேன்.

றோட்டில் இடைக்கிடை ஜீப் ஓடிக் கொண்டிருந்தது. ஜீப் சத்தம் கேட்கிறபோது குலை நடுங்கியது.

'ஒண்டுக்கிருக்க' பனைவெளிக்குள் சென்ற செல்லத்துரை பொலிஸிடம் அகப்பட்டுக் கொண்டார். பனையைக் கட்டிப் பிடித்தபடி நடுங்கினார். ''ஐயா இனி வரமாட்டன்...''

பின்னேரங்களில் விளையாட வந்த சிவம் 'ஆறுமணிச் சட்டம்' என்றவுடன் போகப்பயந்த போது ஐயா கூட்டிச் சென்றார். ஐயா வரும்வரை அம்மாளை நேர்ந்தேன். ஐயாவும் றோட்டை எட்டிப் பார்க்காமல் பனை வடலிக்குள்ளால் வீடு வந்து சேர்ந்தார்.

ஏழு மணிக்கெல்லாம் கை விளக்கை நூர்த்து விடுவோம். விளக்கு வெளிச்சம் தெரிந்து பொலிஸ் வந்தால்...?

இரவு பலாலி ஆமிக் காம்பிலிருந்து வானவெளிக்கு டோர்ச் லைற் பிடிப்பது போல் வெளிச்சம் அடிப்பார்கள்.

சேகுவேரா என்றால் எமக்கு பூதம் போல. கிடு நடுக்கம்.

ஆனால் பிறகு ஒரு மாதத்தின் பின் மாத்தளையில் வேலை செய்த தில்லைநாதன் மாமாவும் சுதா மாமியும் ஊருக்கு வந்த போது எல்லாம் பொய்யென்று தெரிந்தது. தில்லைநாதன் மாமா கண்ணாடியையும் சுழட்டிச் சுழட்டிச் சொன்னார். சுதா மாமி முகத்திலும் செந்தளிப்பு.

''அவங்கள் எவ்வளவு நல்லவங்கள். சேகுவேரா இயக்கமெண்டால் அவங்கள் மோசமில்லை. எங்களுக்கு இவ்வளவு நாளும் சாப்பாடு போட்டது அவங்கள்தானே? ஆர் சொன்னது அவங்கள் தமிழாக்களைக் கொல்லுவாங்களெண்டு? நாங்கள் தமிழாக்கள் எண்டு தெரிஞ்சாப் பிறகுதானே எங்களை இவ்வளவு நாளும் வைச்சுக் காப்பாத்தி சாப்பாடும் தந்தவங்கள். அவங்களே சாப்பாட்டுக்குக் கஷ்டப்படுகிறாங்கள். காட்டுக்கைதான் அவங்கன்ரை சீவியம். ஆனால் எங்களுக்கு ஒரு குறையும் விடேல்லை. தங்கமெல்லே அவங்கள். இந்த அரசாங்கம்தான் அங்கை எவ்வளவு பேரை அழிக்குது...''

நாங்கள் வாயைப் பிழந்து கேட்டுக் கொண்டிருந்தோம். ஐயா அதனை நம்ப முடியாதவர் போல தலையசைத்தார்.

தில்லை நாதன் மாமா கண்ணாடியைக் கழட்டிக், கழட்டி அந்த மேமாத வெய்யிலில் முகத்தைத் துடைத்துத் துடைத்துச் சொன்னார். சுதாமாமிக்கு பெருமிதச் சிரிப்பு. தில்லை நாதன் மாமா வீட்டில் சனம் குவிந்தது. அவர் வெற்றி வீரர் போல உலா வந்தார். அவருக்கு இது நல்ல அனுபவம்தான். அட, அரும்பொட்டில தப்பி வந்திருக்கிறார்.

எல்லாவற்றிலும் விடத் துயரம் இதுதான்;

நம்மூர் அம்மாள், பிள்ளையார் கோயில் திருவிழாக்கள் பிரசித்தம். அம்மாள் கோயில் என்றால் நாலாம் திருவிழாவில் கூத்து நடைபெறும். அனேகமாக வி.வி.வைரமுத்துவின் காங்கேசன்துரை வசந்தகான சபா வழங்கும் சம்பூர்ண அரிச்சந்திரா, அரிச்சந்திர மயான காண்டம், பூதத்தம்பி என்று கூத்துக்கள். பிறகு ஆறாம், ஏழாம், எட்டாம், ஒன்பதாம், பூங்காவனத் திருவிழாக்கள் நடைபெறும். இத்தகைய திருவிழாக்களில் சிகரம், சப்பறம் இவற்றுடன் மேளச்சமா, சின்னமேளம் கட்டாயம் இருக்கும். விலாசினி செற், லிங்கம் செற் என்று வருவார்கள். பகல் திருவிழாவில் விலாசினி செற்றிலிருந்து வந்த பெண்கள் ''நீயே கதி ஈஸ்வரி'' என்று பாடி விட்டுப் போவார்கள். இரவில் மடத்தில் வந்து மேக்கப் போட்டு விட்டு டான்ஸ் ஆடுவார்கள். ஆர்மோனியம் பொன்னுச்சாமியண்ணை அண்டாக்கணக்காக வாயைத் திறந்து பாடுவார். ஒரு பிடி மணலை அள்ளி வாய்க்குள் போடலாம். குறத்தி நடனம், பாம்பு நடனம்; பைலா நடனம் என்று பல நடனங்கள். ''நாங்க புதுசா கட்டிக்கிட்ட சோடி தானுங்க'' என்றொரு பாட்டு. விடிகிற போது அம்மாள் வீதி வலம் வருகிற போது இந்தப் பாட்டு நடக்கும் எழுந்து குண்டி மண்ணைத் தட்டி விட்டு வீட்டை போக வேண்டியது தான்.

இந்தத் திருவிழாக்களில் முக்கியமாக நடைபெறுகிற ஒன்று வாண வேடிக்கைகள். நம்மூரில் சுருட்டுக் கொட்டிலடியில் ஐயர் இருந்தார். வாணம் செய்வதற்கு அவர்தான். விதம் விதமான வாணங்கள். ஊரில் யார் 'குசு' விட்டாலும், மூக்கைத் தூக்கியெறிகிற மணமாக இருந்தாலும், 'ஐயற்றை வாணத்தை ஆரோ விட்டிட்டாங்கள்' என்பார்கள்.

பூப்பூவாகக் கொட்டுகிற வாணங்கள். பல நிறங்கள். எத்தனையோ விதமான அவிட்டுகள். பகலில் மூலை வெடி சரம்சரமாகக் கொளுத்துவார்கள். மூங்கில் குழாய் வைத்து, அதனுள்ளே பந்து போல வெடி வைத்து, திரியை வெளியே விட்டுக் கொளுத்த, அப்பந்து மூங்கில் குழாயை விட்டுப் புறப்பட்டு அதி உயரமாக மேலெழுந்து வெடிக்கும். எட்டு ஊருக்குக் கேட்கும் வெடி. இரவிரவாக பூப்பூவாக வாணங்கள், அவிட்டுகள். விடிகிற போது, அம்மாள் வடக்கு வீதிக்கு வருகிற போது எல்லாவற்றிலும் உச்சமாக எலி வாணம் கொளுத்தப்படும்.

வண்டில் சில்லெடுத்து அதனைச் சுற்றி மருந்தடைத்து, காட்டுத் தடியில் அதனைக் கொழுவி வைத்திருப்பார்கள். ஒருவர் தன்மீது ஈரச் சாக்கைப் போர்த்துக் கொண்டு, காட்டுத் தடியை நிமிர்த்திப் பிடித்துக் கொண்டு, அம் மருந்திற்கு நெருப்பு வைத்து வண்டில் சில்லை சுற்றி விடுவார். சுற்றிச் சுற்றி எரிந்து கொண்டிருக்கிற வண்டில் சில்லிலிருந்து இடைக்கிடை எலிகள் போல நெருப்புப் பந்தங்கள் ஓடி வந்து மனிதர்களிடையே புகுந்து கொள்ளும். எலி வாணம் என்பார் இதனை. ஐயரின் ஸ்பெசல் இது.

ஆனால் எல்லாவற்றையும் விடத் துயரம் இதுதான்; சேகுவேராப் புரட்சிக்குப் பிறகு இப்படியான வாண வேடிக்கைகளை நம்மூர்க் கோவில்களில் தரிசிக்க முடியாமற் போய்விட்டது. அப்புறம் நிறையக் காலங்களின் பின் வாண வேடிக்கைகள் பலவற்றைப் பார்த்தோம். ஆன்னால் அவை கோயில்களில் அல்ல.





இச் சேகுவேராப் புரட்சி முடிந்து சிறிது காலத்தினுள்ளேயே பங்களாதேஷ் பிரிந்தது. என் வாணாளில் நான் முதலில் அறிந்த, பிரிந்த புதிய நாடு பங்களாதேஷ், 'பூட்டோவின் மனசைப் புட்டுப் புட்டென' உடைத்து எழுந்த நாடு.

போரென்றால் என்னவென்று முதலில் அறிந்த காலம். ஊரெல்லாம் உதுவே கதை. மேற்குப் பாகிஸ்தான் அதிபர் பூட்டோ, கிழக்குப் பாகிஸ்தானை மேற்குப் பாகிஸ்தானிலிருந்து பிரிக்க வேண்டுமென்று போராடிய முஜிபுர் ரகுமானைச் சிறையில் அடைத்து வைத்திருக்கிறார். முஜிபுர் ரகுமானின் சிறையின் முன்னால் முஜிபுர் ரகுமானுக்கு புதைகுழியும் வெட்டப்பட்டாயிற்று.

உக்கிரமான போர். கிழக்குப் பாகிஸ்தானிற்காக இந்தியா. அதற்குச் சார்பாக ரஷ்யா. மேற்குப் பாகிஸ்தானிற்காகச் சீனா. அத்துடன் அமெரிக்கா. போரில் அமெரிக்கா நேரடியாகத் தலையிட்டால் தானும் போரில் இறங்குவேன் என ரஷ்யா அமெரிக்காவை வெருட்டுகிறது. நாளாக, நாளாக இந்தியாவின் வெற்றி நிச்சயமாகிறது.

வீட்டுக்கு விளையாட வருகிற, அரசியல் தெரியாத சிவத்திடம் ''நீ தான் அமெரிக்கா, நான் தான் ரஷ்யா'' என்று போர் விளையாட்டு விளையாடுவேன். என்றாலும் இறுதியில் அவன் ஒரு வசன்ம் பேசி என்னைத் தோற்கடித்து விடுவான். ''அமெரிக்கா தானே சந்திரனுக்கு றொக்கற்றை அனுப்பினது''.

போரில் இந்தியா வென்று விட்டது. கிழக்குப் பாகிஸ்தான் பிரிந்து விட்டது. பங்களாதேஷ் என அதற்குப் பெயர் சூட்டினார்கள். சிறையிலிருந்து முஜிபுர் ரகுமான் விடுதலையாகி ஆட்சிப் பொறுப்பை ஏற்றார்.

கிழக்குப் பாகிஸ்தான் விடுதலைக்காகப் போராடிய 'முக்திபாஹினி' இயக்கம் பற்றி எல்லோரும் பெரிதாகப் பேசிக் கொண்டார்கள். சுதந்திரம் பெற்ற பிறகு கதை இல்லை.

முக்திபாஹினி இயக்கம் பிறகு என்ன ஆனது சேகுவேரா இயக்கம் போல இதுவும் அழிந்து போய் விட்டதா? எனது நிரந்தரக் கவலைகளில் இதுவும் ஒன்றானது.

இப்போரில் ஆறுமுகம் எனும் தமிழனின் வீரம் பற்றியும் பெருமையாகக் கூறிக் கொண்டார்கள். ஆறுமுகம் தனி ஒருவனாக மூன்று பாகிஸ்தான் இராணுவத்தினரைக் கொலை செய்தான் என்று.

நம் தோள்கள் புடைத்தன. பங்களாதேஷின் முதலாவது பிரதமர், பரம்பரையுடன் அழிக்கப்பட்டு விட்டார்.

-வரும்-

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net





# ஸ்ரீபாத கல்லூரி : நோக்கத்திலிருந்து விலகி...

## பெருந்தோட்ட தமிழ்ப் பாடசாலைகளின் ஆசிரியர் பற்றாக்குறையும் கல்வி வீழ்ச்சியும்

— டி.அய்யாத்துரை

பெருந் தோட்டத் தமிழ்ப் பாடசாலைகளின் கல்வி வளர்ச்சியானது மிகவும் பின்தங்கிய நிலையிலேயே உள்ளது. இது எதார்த்தரீதியாக நோக்குமிடத்து நன்கு தெளிவாவது மட்டுமல்ல, ஆய்வறிக்கைகள் மூலமும் தெளிவாக்கப்பட்டுள்ளது.

இதற்குப் பல்வேறு காரணங்கள் கூறப்பட்டபோதும், அதன் பிரதான காரணம், ஆசிரியர் பற்றாக்குறையும், அக்குறைறையைப் போக்க மலையகத்தில் போதிய கல்வித் தகைமையுடையவர்கள் தெரிவாவதில் ஏற்பட்டுள்ள முட்டுக் கட்டையுமே ஆகும்.

மலையகப் பாடசாலைகளில் கல்வித் தரம் வீழ்ச்சியடைந்துள்ள காரணத்தினாலேயே அப்பாடசாலைகளில் கல்வி பயிலும் மாணவர்களின் கல்விப் பெறுபேறுகளும் வீழ்ச்சியடைந்துள்ளன.

கடந்த பத்தாண்டுகளில் பல்வேறு சமூக ஸ்தாபனங்கள், தொழிற்சங்க அமைப்புகள் போன்றவற்றின் கரிசனையினாலும், சமூக உணர்வுள்ள ஆசிரியர்களின் ஒத்துழைப்பினாலும் கல்வித் தரத்தில் ஓரளவு மாற்றத்தைக் காணக்கூடியதாக இருக்கிறது. பாடசாலைகளில் நிலவியுள்ள ஆசிரியர் பற்றாக்குறையை நிவர்த்தி செய்ய ''தொண்டர் ஆசிரியர்'' நியமனம் அறிமுகம் செய்யப்பட்டது. இதனடிப்படையில் தமிழ்ப் பாடசாலைகளில் கல்வித் தகைமை பெறாத பலர் தொண்டர் ஆசிரியர்களாக சேர்க்கப்பட்டார்கள். இதன் காரணமாக பத்தாண்டுகள் கடந்த பின்பும்கூட, பலர் ஆசிரியர் பதவியை வகிப்பதற்கான தகைமையைப் பெற்றிருந்தாலும், அதற்கான சான்றிதழையோ, நிரந்தரமான சேவையையோ பெற முடியாமல் இருப்பதைக் காணலாம்.

தொண்டர் ஆசிரியர்கள் என்ற புதிய திருப்பத்தின் காரணமாக ஆசிரியர் பதவிக்கான தகைமையைப் பெற்ற பலர் இன்று தொண்டர் ஆசிரியர்களாக கல்வி அதிகாரிகள் மூலம் அனுமதி பெற்று சேவையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளார்கள். இது இவர்களுக்கு ஓர் பயிற்சி முகாமாக அமையுமே தவிர, இதன் மூலம் ஆசிரியர் பற்றாக்குறையை நீக்கக்கூடிய வாய்ப்பு ஏற்படாது.

அண்மையில்கூட, மத்திய மாகாணசபையில் கல்வி அமைச்சர் அறிக்கை ஒன்றை வெளியிட்டார். அவ்வறிக்கையானது, மத்திய மாகாணத்திற்கு மாத்திரம் 2342 தமிழ் ஆசிரியர்கள் உடனடியாகத் தேவைப்படுகிறார்கள் என்பதாகும். இந்த கணக்கெடுப்பானது 1.6.93 வரைக்குமானது என்றும் அவ்வறிக்கையில் குறிப்பிடப்பட்டிருந்தது.

மத்திய மாகாணத்திற்கு உட்பட்ட தமிழ் பாடசாலைகளுக்கு 2342 ஆசிரியர்கள் தேவைப்படுகின்றனர். அத்தேவை பூர்த்தி செய்யப்படாத நிலையிலேயே அங்குள்ள தமிழ் மாணவர்களின் தரம் உள்ளது. இவ்வாசிரியர்கள் ஒரு நாளைக்கு எட்டு வேளை பாடங்களை படிப்பிக்க வேண்டும். அப்படியானால், 2,342X8 = 18,736 பாட வேளைகள் வீணாக்கப்படுகின்றன. இதன்படி, ஒரு வகுப்பில் 40 மாணவர்களாயின், 18,736X40 = 7,49,440 மாணவர்களின் கல்வி நாள்தோறும் வீணாக்கப்படுகின்

**மலையகத்தின் கல்வி வசதிகளை விரிவாக்குவது, பெருந்தோட்டங்களில் உள்ள தமிழ் மொழிமூல பாடசாலைகளுக்குத் தேவையான ஆசிரியர்களை உருவாக்குவது, இவ்ஆசிரியர் தெரிவில் இப்பிரதேச தமிழர்களுக்கு முதலிடம் வழங்குவது என்ற நோக்குடன் ஸ்தாபிக்கப்பட்ட ஸ்ரீபாத கல்விக் கல்லூரி தனது இக்கொள்கையில் இருந்து வழி தவறிவிட்டது. இதன் பயனாக இன்று இக்கல்லூரி நிர்வாகச் சீர்கேட்டிற்கும், மாணவர்களைச் சேர்த்துக் கொள்வதில் ஏற்பட்டுள்ள முட்டுக் கட்டைகளுக்கும் ஆட்பட்டுள்ளதோடு பயிற்சி பெற்ற ஆசிரியர்களை உருவாக்கும் தன்மையையும் இழந்துவிட்டது.**

தோட்டப் பாடசாலைகள் அபிவிருத்திக்காக சுவீடன் (SIDA) மற்றும் ஜேர்மன் (GTZ) ஆகிய நாடுகள் உதவிகளை வழங்குகின்றன. இவை தோட்டப் பாடசாலை அபிவிருத்தித் திட்டம் (Plantation School Development Programme) என்ற திட்டத்தின் கீழ் தோட்டப் பாடசாலைகளை அபிவிருத்தி செய்கின்றன. ஆசியர்கள் சம்பந்தமாக தோட்டப் பாடசாலை ஆசிரியர் திட்டம் (Plantation School Teacher Programme) என்ற திட்டமும் வகுக்கப்பட்டுள்ளது.

தோட்டப் பாடசாலை ஆசிரியர் திட்டம் (Plantation School Teacher Programme) என்ற திட்டத்தின்கீழ் இரண்டுமுறை ஆசிரியர்கள் சேர்த்துக் கொள்ளப்பட்டுள்ளார்கள். 1000 பேர் வீதம் ஆசிரியர்களை நியமிக்க முயன்ற போதிலும், 2000பேருக்கு பதிலாக சுமார் 1500 பேர் நியமனம் பெற்றனர். ஏனெனில், 1988ம் ஆண்டில் மிகக் குறைவான தொகையினரே மலையகத்தில் உயர்கல்வியிலும் க.பொ.த.சாதாரண தரத்தில் சித்தியடைந்திருந்தனர்.

கடந்த ஆறு வருடங்களாக பெருந்தோட்டப் பாடசாலைகளின் கல்வித் தரம் பின்னடைந்து வருவதற்கான காரணம், இப்பாடசாலைகளுக்கு போதிய ஆசிரியர்கள் நியமிக்கப்படாமையே என்பதை உணர்ந்து, இப்பாடசாலைக்கு போதிய ஆசியர்களை நியமனம் செய்யும் நோக்கத்துடன் ஆசிரியர்களை பயிற்றுவிக்கும் நல்லெண்ணத்துடன் ஜெர்மன் (GTZ) நாட்டு உதவியோடு பெருந்தோட்ட கல்வி வளர்ச்சியை கருத்திற் கொண்டு கட்டப்பட்டதே ஸ்ரீபாத கல்விக் கல்லூரி. ஆனால், அந்தக் கல்லூரியில் கூட கடந்த இரண்டு ஆண்டுகளாக மாணவர்கள் சேர்த்துக் கொள்ளப்படவில்லை. இது மாணவர்களின் கல்வி வளர்ச்சிக்குப் பெரும் பாதிப்பை ஏற்படுத்தியுள்ளது.

ஸ்ரீபாத கல்விக் கல்லூரி இரண்டு வகையான நோக்கத்தின் அடிப்படையில் ஆரம்பிக்கப்பட்டதை இங்கே நாம் கவனத்தில் கொள்ள வேண்டும்.

முதலாவது: கடந்தகால அலட்சியம் காரணமாக கவனிப்பாரற்று விடப்பட்ட கல்வி வசதிகளை விரிவாக்குவதும், சீராக்குவதும், பெருந் தோட்டப் பிரதேசங்களில் உள்ள தமிழ் மொழி மூல பாடசாலைகளுக்கு தேவையாகவுள்ள ஆசிரியர்களை வழங்குவது.

இரண்டாவது: கடந்தக் காலத்தில் பெருந்தோட்டப் பாடசாலைகளுக்கு தெரிவு செய்யப்பட்ட தமிழ் ஆசிரியர்களில் பெரும்பான்மையானோர் பெருந்தோட்டத்திற்கு வெளியேயிருந்து தெரிவானவர்கள் என்பதை கருத்திற் கொண்டு, பெருந் தோட்டப் பிரதேச தமிழ் மொழிமூல பாடசாலைகளுக்கு போதிய ஆசிரியர்களை நியமனம் செய்யும் முகமாக அப்பிரதேசங்களிலுள்ள தமிழர்களுக்கு முதலிடம் வழங்குவது.

| பாடவகை | வெற்றிடங்கள் |
|---|---|
| 1) ஆரம்ப கல்வி | 1393 |
| 2) விஞ்.கணிதம் | 342 |
| 3) ஆங்கிலம் | 308 |
| 4) பட்டதாரிகள்-கலை | 48 |
| பட்டதாரிகள் வர்த்தகம் | 12 |
| பட்டதாரிகள் விஞ்ஞானம் | 16 |
| 5) விவசாயம் | 20 |
| 6) மனையியல் | 26 |
| 7) சங்கீதம் | 26 |
| 8) இந்து சமயம் | 48 |
| 9) கலை | 36 |
| 10) சமூகக்-கல்வி | 30 |
| 11) தமிழ் | 38 |
| மொத்தம் | 2343 |

**மத்திய மாகாணத்திற்கு உட்பட்ட தமிழ் பாடசாலைகளுக்கு 2342 ஆசிரியர்கள் தேவைப்படுகின்றனர். அத்தேவை பூர்த்தி செய்யப்படாத நிலையிலேயே அங்குள்ள தமிழ் மாணவர்களின் தரம் உள்ளது. இவ்வாசிரியர்கள் ஒரு நாளைக்கு எட்டு வேளை பாடங்களை படிப்பிக்க வேண்டும். அப்படியானால், 2,342X8 = 18,736 பாட வேளைகள் வீணாக்கப்படுகின்றன. இதன்படி, ஒரு வகுப்பில் 40 மாணவர்களாயின், 18,736X40 = 7,49,440 மாணவர்களின் கல்வி நாள்தோறும் வீணாக்கப்படுகின்றன.**

இந்த இரண்டு கொள்கைகளையும் நிறைவேற்றும் நோக்கத்துடன் ஸ்தாபிக்கப்பட்ட இந்த ஸ்ரீபாத கல்விக் கல்லூரியானது, தனது கொள்கையை கடைப்பிடிக்கத் தவறி விட்டது. இதன் பலனாக இன்று இக்கல்லூரி நிர்வாக சீர்கேட்டிற்கும், மாணவர்களை சேர்த்துக் கொள்வதில் ஏற்பட்டுள்ள முட்டுக்கட்டைகளுக்கும் ஆட்பட்டுள்ளதோடு, பயிற்சி பெற்ற ஆசிரியர்களை உருவாக்கும் தன்மையையும் இழந்துவிட்டது.

இந்தக் கல்லூரி மாணவர்களை சேர்த்துக் கொள்வதில் ஒரு கொள்கையை வகுத்து, மலையக பெருந்தோட்டப் பிரதேசத்திற்கு 50% வீதமும், ஏனைய பிரதேச தமிழர்கள் 25% வீதமும் ஊவா மாகாணத்தைச் சேர்ந்த சிங்கள மொழி பேசுபவர்கள் 25% வீதமும் என்று நிர்ணயம் செய்தது.

ஆனால், இதுவரை இக்கல்லூரியில் முதலாம் ஆண்டு நேர்முகப் பரீட்சையின் மூலம் தெரிவு செய்யப்பட்ட மாணவர்களைத் தவிர்த்து, கடந்த இரண்டு ஆண்டுகளாக நேர்முகப் பரீட்சையில் தெரிவு செய்யப்பட்ட எந்தவொரு மாணவர்களும் சேர்த்துக் கொள்ளப்படவில்லை. இதன் மூலம் ஆசிரியர்களை தோற்றுவிக்கும் பொறுப்பிலிருந்து இக்கல்விக் கல்லூரி விடுபட்டுள்ளதென்றே கருத வேண்டியுள்ளது.

இது மலையக தமிழ் மக்கள் மத்தியில் ஓர் சலிப்புத் தன்மையை உருவாக்கியுள்ள அதேவேளை மலையக தமிழ் மாணவர்கள் முற்றாக ஒதுக்கப்பட்டு விடுவார்களோ என்ற அச்சத்தையும் தோற்றுவித்துள்ளது.

இந்த கல்லூரி தொடர்பான நிர்வாகத்தை மத்திய அரசே செய்கிறது. மாகாணசபை இதில் தலையிடும் நிலை இல்லாதிருப்பதால், இக் கல்லூரி பற்றி எவருமே அக்கறை கொள்வதாகத் தெரியவில்லை. ஆனால் இத்தகையதோர் நிலை மேலும் தொடர்வதை வெறுமனே பார்த்துக் கொண்டிருக்க முடியாது என்ற காரணத்தினால், மத்திய மாகாணசபை தமிழ் உறுப்பினர்கள் இந்தக் கல்விக் கல்லூரியின் நிலைப்பாட்டை அறிந்து மத்திய அரசுக்கு முறைப்பாடு செய்ய குழுவொன்றை அமைக்க வேண்டுமென்று மத்திய மாகாணசபை கல்வி அமைச்சருக்கு கோரிக்கையொன்றை விடுத்துள்ளது.

மத்திய மாகாணசபையின் கீழ் இயங்கும் தமிழ் பாடசாலைகளுக்கு 2342 ஆசிரியர்கள் கீழ் கண்ட அடிப்படையில் தேவைப்படுகின்றனர்.(பார்க்க அட்டவணை)

அட்டவணையில் குறிப்பிட்ட எண்ணிக்கையின் அடிப்படையில் பெருந்தோட்டப் பாடசாலைகளில் நிலவியுள்ள ஆசிரியர் பற்றாக்குறையை நிவர்த்தி செய்ய மலையக, குறிப்பாக மத்திய மாகாண தமிழ் மாணவர்களின் கல்வித் தரத்தை உயர்த்த அரசாங்கமும், மத்திய மாகாணசபை கல்வி அமைச்சும் பின்வரும் நடவடிக்கையை மேற்கொள்ள வேண்டியது அவசியமாகிறது.

→15

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# அம்பாறை : கௌரவத்துக்



"வருவார்கள், கேட்பார்கள், போவார்கள் எமக்கு மட்டும் ஒன்றுமே கிடைக்காது"

பாராளுமன்ற தேர்தல் நடப்பதற்கு இரண்டு வாரங்களுக்கு முன் அம்பாறை மாவட்டத்தின் நிலைமைகள் பற்றிய செய்திகளை திரட்டச் சென்றிருந்த எமது கட்டுரையாளரால் எழுதப்பட்ட கட்டுரை இது. பல்வேறு காரணங்களால் இது தாமதமாகவே பிரசுரமாக வேண்டி ஏற்பட்டுள்ளது. இடையில் நடைபெற்ற ஆட்சிமாற்றம் நிலைமைகளில் எந்த மாற்றத்தையும் இன்னமும் கொண்டுவராததால் இக்கட்டுரையை அப்படியே வெளியிடுகின்றோம். இதில் வரும் 'அரசு' ஐ.தே.க அரசே என்பதை சொல்ல வேண்டியதில்லை.

புதிய அரசின் புனர்வாழ்வு அமைச்சராக அஷ்ரப் அவர்கள் நியமிக்கப் பட்டிருப்பதால், நிலைமைகளில் மாற்றம் ஏற்படும் என்ற எதிர்பார்ப்பு இம்மக்கள் மத்தியில் நிலவுகின்றதை பிறகு கிடைக்கும் செய்திகள் தெரிவிக்கின்றன.

'அமைச்சர் தயாரத்னவுக்கு அம்பாறையை பாதிக்கப்பட்ட பிரதேசமென்று அறிவிப்பது கௌரவப்பிரச்சினையாக இருந்தது. ஆனால் அஷ்ரப்பிற்கு அப்படி இல்லைத்தானே' என்கிறார்கள் இவர்கள்.

அம்பாறை மாவட்டத்தினுள் நுழையும் போதே சிங்கள குடியேற்றக் கிராமம் ஒன்றினூடாகத்தான் நுழைய வேண்டியிருந்தது [illegible] கிராமத்தி[illegible] காவல் அ[illegible] ஒன்றுமே [illegible] கொண்டன. இக்காவல் அரண்களில் பயணிகள் நிறுத்தப்பட்டு சோதிக்கப்படுகின்றனர். சொந்த மண்ணிலே [illegible] சோதிக்கப்படுவதா? [illegible] சலையும் கையாலாகாத்தனத்தால் வரும் வேதனையையும் ஒருங்கே தரும் இந்தச் சோதனைகள் போகும் இடமெல்லாம் இருந்தன. அனேகமாக ஒவ்வொரு சோதனைச் சாவடிகட்குமருகில் ஒரு அரச மரமும், அதனருகில் புதிதாக கட்டப்பட்ட பௌத்த கோவிலும் இருந்தன.

இது போன்ற புதிய சிங்கள குடியேற்றங்கள், இரத்தினபுரி வீதியால் செல்லும் பொழுது சியாம்லாந்துவ, தகத்தகனுவ, தமண, கல்மடுவ, தீபவாவி, இங்கிரான, அம்பாறை நகரம் ஆகிய இடங்களிலும், கண்டி வீதியால் செல்லும் பொழுது பதியத்தலாவ, மாஓயா, மங்களகம, அறந்தலாவ ஆகிய இடங்களிலும் இருப்பதைக் காணலாம்.

அம்பாறை நகரம் முற்றுமுழுதான சிங்கள மக்களின் நகரமாகவே காட்சியளிக்கின்றது. உண்மையில் இன்று அது ஒரு சிங்கள மக்களின்நகரமே. சில ஆவணங்களைப் பெற்றுக் கொள்ளும் நோக்கத்துடன் கச்சேரிக்குப் போவதாக முடிவு செய்தோம். கச்சேரியை நாம் சென்றடைந்த போது 1மணி 30நிமிடமாயிருந்தது. மதிய உணவு முடிந்து ஒரு மணிக்கு வரவேண்டிய ஊழியர்கள் தமது கடமைக்கு அப்பொழுதும் திரும்பியிருக்கவில்லை. 2.30மணியாகியும் அவர்களது இடங்கள் காலியாக இருக்கவே நாம் கச்சேரியை விட்டுப் புறப்பட்டோம்.

## மின்சாரம் தேவை:

இங்கிருந்து மீளக்குடியேற்றப்பட்ட பிரதேசங்களான வலதாப்பிட்டிக்கும், மல்வத்தைக்கும் போனோம். இந்த இரு பிரதேச மக்களும் 1990ல் பிரசசினை ஆரம்பமாகிய போது இராணுவத்திற்குப் பயந்து காரைத்தீவு மற்றும் தமிழ் பிரதேசங்களுக்கு அகதிகளாகச் சென்றவர்கள். இப்பொழுது மீளவும் தமது இடங்களில் குடியேறியுள்ளார்கள். வலதாப்பிட்டி மக்கள் யூலை முதல் வாரத்திலும், மல்வத்தை மக்கள் 94ம் ஆண்டு ஜனவரி மாதத்திலும் மீளக்குடியேற்றப்பட்டனர்.



ஆனால் இவர்கள் வாழ்வதற்கு தேவையான எந்தவித அடிப்படை வசதிகளும் இதுவரை செய்து கொடுக்கப்படவில்லை. வீடுகள் கட்டுவதற்கான பணம் அரசாங்கத்தால் இன்றுவரை கொடுக்கப்படவில்லை. மீளக் குடியேற்றும் வரை அது தரு[illegible] [illegible] மீளக் குடியேற்றிய [illegible] [illegible]மை மறந்து விட்டதாக [illegible] குடியேறிய பிரதேச மக்கள் கூறினர். இந்த மக்கள் தங்களுக்கு ஒரு மாதிரிக் கிராமமே வேண்டும் எனக் கேட்கின்றனர்.

'நாம் நாளாந்தம் [illegible] வேலை செய்து உழைத்து வாழ்பவர்கள். எங்களது நாளாந்த உணவுக்கும், பிள்ளைகளின் கல்விக்கும் செலவு செய்யவே எமக்குக் கிடைக்கும் கூலி காணாது. இந்த நிலைமையில் எப்படி ஒரு வீடு கட்டுவதும், கிணறு வெட்டுவதும் மற்றும் தேவைகளை நிறைவேற்றிக் கொள்வதும் சாத்தியம்?' எனக்கேட்கிறார்கள் இப் பிரதேச மக்கள்.

அது மட்டுமில்லை அவசரமான வைத்திய தேவைகளுக்குக் கூட பல மைல்களுக்கு அப்பால் உள்ள அம்பாறைக்கோ, சம்மாந்துறைக்கோ தான் போக வேண்டும். சுற்றி வரக் காடுகள் இருப்பதால் இரவில் யானைகள் வரும் அபாயமும் உண்டு. இதிலிருந்து தம்மைப் பாதுகாக்க மின்சாரம் அவசியமானது எனக் கூறும் இவர்கள் இந்த வரண்ட பிரதேசத்தில் குடிநீர் முக்கியமான பிரச்சினையாக இருப்பதாகவும் தெரிவிக்கின்றனர்.


## அரசின் ஆக்கிரமிப்பு:

இந்தப் பிரதேசங்களின் எல்லைகளில் திட்டமிட்ட சிங்களக் குடியேற்றங்கள் வேறு நடைபெற்றுள்ளன; நடைபெறுகின்றன. இந்தக் குடியேற்ற இடங்கள் பல ஆண்டுகளுக்கு முன் காடுகளாக இருந்தவை. இவை தமிழ், முஸ்லீம் மக்களால் வெட்டியழிக்கப்பட்டு சேனைப் பயிர்ச் செய்கைக்காகப் பயன்படுத்தப்பட்டன. ஆனால் இன்று அரசாங்கத்தால் ஆக்கிரமிக்கப்பட்டு, சிங்கள மக்களுக்கு பகிர்ந்தளிக்கப்பட்டு சிங்களமக்கள் குடியேற்றப்படுகிறார்கள். இவை சிங்கள மக்களின் மீளக் குடியேற்றமென அரசங்கத்தால் கூறப்பட்ட போதும், அதை மறுக்கும் இப்பிரதேச மக்கள் இதை சிங்கள மக்களின் புதிய குடியேற்றம் என்றே சொல்கின்றனர்.


மல்வத்தை விபுலானந்த மகா வித்தியாலயத்தின் ஒரு சாதாரண மண்டபம் ஒன்றும், சிறிய அலுவலக அறையும், [illegible] அருகில் உள்ள சா[illegible] ஒன்றுமே [illegible] உள் [illegible] கல்வி [illegible] ஆண்டு [illegible] பதி[illegible] மாணவர்கள் [illegible] மசை இல்லை. [illegible] டங்களே இவர்களுக்கு இல்லாத போது, தளபாட வேலைகளைப் பற்றிக் கதை[illegible] தான் என்ன? [illegible] வர்களின் வ[illegible] ழல்கள் [illegible] காட்சியளிக்கின்[illegible].

கரைத் தீவுச் சந்தியில் விசேட அதிரடிப் படையினரின் சோதனை முடிந்த பின்னர், கரைத்தீவுப் பிரதேசத்துள் சென்றோம். இங்கு விதவைகள் சிலரைச் சந்தித்தோம். நூற்றுக்கும் மேற்பட்ட விதவைப் பெண்கள் இப் பிரதேசத்தில் உள்ளனர். இப் பெண்கள் கணவன்மாரை மட்டும் இழக்கவில்லை, மகன், மகள் ஆகியோரையும் இராணுவத்திற்குப் பலி கொடுத்துள்ளனர் என்கிறார் ஒரு விதவைத் தாய்.

இவர்களுக்கு பல அரச சார்பற்ற நிறுவனங்கள் உதவி செய்தாலும், நாட்கூலி வேலை செய்து வாழுமிவர்கள் நிலைமை மிகவும் கவலைக்கிடமானதாக உள்ளது.



போகும் இடம் ஏது?




## தாய்க் கிராமம்:

அம்பாறை மாவட்டத்தின் தமிழர்களின் தாய்க் கிராமம் என கரைத்தீவை இப் பிரதேச மக்கள் அழைக்கின்றனர். ஏனெனில், இப் பிரதேசத்தில் வசிக்கின்ற தமிழ் மக்கள் எந்த நெருக்கடிகளையும் எதிர்நோக்கும் போதும் அடைக்கலம் தேடி நம்பிக்கையுடன் தஞ்சம் புகுவது கரைத்தீவு கிராமத்தில் தானாம். இங்குள்ள பாடசாலை மைதானத்தில் அம்பாறை மாவட்டத்தின் எல்லை புறத்தைச் சேர்ந்த 275 குடும்பங்கள் அகதிகளாக 90ம் ஆண்டில் இருந்து இருக்கின்றனர். இவர்களில் அனேகர் நகர சுத்தித் தொழிலாளர்களும், கூலி வேலை செய்பவர்களுமே. இந்த அகதி முகாமுக்குள் சென்ற போது மாலை ஆறுமணி ஆகிவிட்டிருந்தது. வானம் இருட்டத் தொடங்கி கடும் காற்றுடனான மழை பெய்யத் தொடங்கியது. அகதிகள் வசிக்கும் சிறு கொட்டில்கள் அனைத்தும் பள்ளத்திலிருந்ததால் வெள்ளத்தில் அகப்பட்டன. காற்றுக்கு ஈடு கொடுக்க முடியாத குப்பி விளக்குகள் அணைந்தன. தாய்மார் தமது கைக்குழந்தைகளை கைகளில் தூக்கிக் கொண்டு, கொட்டிலினுள் மழை ஒழுகாத இடத்தில் ஒதுங்கிக் கொண்டனர்.

இதுவரை ஒரு சிலரைத் தவிர வேறு எந்த அரசியல் தலைவர்களும் தம்மை வந்து பார்த்து ஆறுதல் கூடக் கூறவில்லை. ஆனால் இனி மேல் தேடி வருவார்கள். எலெக்ஸன் வருகுது தானே என்றனர் நம்பிக்கையுடன்.

அந்தப் பெருமழையில் எமக்கு ஒதுங்கி நிற்பதற்கு இடம் கிடைக்கவில்லை. ஒருவாறு அங்கிருந்து அகன்றோம். மழை இருட்டு. நேரமோ 6.30மணி. முஸ்லீம் நண்பர்கள் இருவர். ஒரு வீட்டில் வந்து எமக்காகக் காத்திருப்பதாகக் கூறினர். அவ்வீட்டில் சென்று நாம் விசாரித்தபோது, ''இருண்ட பின் இங்கு நிற்பது சரியல்ல நாங்கள் போகிறோம்'' என எமக்கு அறிவிக்கச் சொல்லி விட்டு, அவர்கள் சென்றிருந்தனர். அதற்கான காரணத்தை விசாரித்ததில் தமிழ்க் கிராமங்களில் மாலை 6மணிக்குப் பின் யாரும் -முஸ்லீம் சமூகத்தைச் சேர்ந்தவர்கள்- இருப்பதை இராணுவம் அறிந்தால், பிடித்துக் கொண்டு போகுமாம். என்னதான் அமைதி நிலவிய போதும் இரு சமூகத்திலும், மனப்பயம் இருக்கின்றது. அதுவும் தமிழர்களுக்கு சற்று அதிகமாகவே இருக்கின்றது.

## அஷ்ரஃப்பிடம் கேளுங் கள்:

நிந்தவூரிலுள்ள மன்னார் முஸ்லீம் அகதிகள் தங்கியிருக்கும் அகதிகள் முகாமிற்குப் போனோம். இவர்கள் நானாட்டான், இலந்தப்பேட்டை போன்ற பிரதேசங்களில் இருந்து வந்தவர்கள். ''உங்கள் தலைவர் அஷ்ரப்பிடம் போய் ஒரு நாட்டைக் கேட்டு வாழுங்கள்'' என்று கூறி புலிகள் தம்மை விரட்டி விட்டதாக கூறுகின்றார்கள் இவர்கள்.

இங்கு வந்த முதல் வருடம் பல நிறுவனங்கள் உதவி செய்தன. பின்னைய மூன்று வருடங்களும் எந்த நிறுவனமும் உதவி செய்யவில்லை இவ்வூர் மக்களும் எம்மைப் புறக்கணிக்கின்றனர் என்று ஒரு இளைஞர் ஆவேசத்துடன் கூறினார்.

எம்மூருக்குப் போக எமக்கு விருப்பம்தான். ஆனால், பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வு இல்லாமல் போய், மீண்டும் அகதிகளாகத் திரும்பி வந்து வாழ முடியாது என்கிறார் ஒருவர். இவ்வூர்ப் பிரதேசச் செயலாளரிடம் ஏதாவது உதவி கேட்டுப் போனால் பாய்ந்து விழுகிறார் எம்மேல் எ[illegible]
னார்.
இங்கிருந்து [illegible]
தைக்கா நக[illegible]
முக்குச் செ[illegible]
காமம், ஒட்[illegible]
சங்களில் இ[illegible]
பங்களைச் [illegible]
ருக்கின்றன[illegible]
ளுக்கு மே[illegible]
முகாமில் [illegible]
எம[illegible] உத[illegible]
கடிதங்களை[illegible]
அனுப்பியே[illegible]
முறைதானு[illegible]
எதிர்க் கட்சி[illegible]
துக்காக ஒ[illegible]
சென்றார்கள[illegible]
றையை ெ[illegible]
கள்.

இனி எம்ம[illegible]
எமது வ[illegible]
தேவையா[illegible]



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net






அவர் சொன்
ப் பற்றிலுள்ள
ம் அகதி முகா
மன்னார், உரு
ஆகிய பிரதே
வந்த 83 குடும்
வர்கள் இங்கி
ரு வருடங்க
ந்த அகதிகள்
ம் நாங்கள்,
ருக்கு பல
ம் தடவைகள்
அதற்கு ஒரு
ம் வரவில்லை.
, சம்பிரதாயத்
வந்து பார்த்துச்
தமது மனக்கு
டார்கள் இவர்
வருவார்கள்.
அவர்களுக்குத்
ங்கள் குறைக

ளைத் தீர்த்து வைக்க வேண்டும். நாம் சொந்த ஊர்களுக்குத் திரும்பிப் போக விரும்பவில்லை. எமக்கு இங்கேயே நிரந்தரமாக வசிக்க வசதிசெய்து தரவேண்டும் என ஒருமித்த குரலில் அங்கிருந்தவர்கள் கூறினர்.

அன்றிரவு அக்கரைப்பற்றிலுள்ள முஸ்லீம் பகுதியில் தங்கியிருந்தோம். ஒரு தமிழ் இளைஞர் முஸ்லீம் பகுதியில் மாலை வேளையின் பின் நிற்பது அரிதிலும் அரிதாம். அருகில் தமிழ் மக்கள் வாழும் பிரிவு இருந்தும் கூட இந்த நிலைமை நிலவுகின்றது. சிலர் எம்மைச் சந்தேகக் கண் கொண்டு பார்த்தாலும், முஸ்லீம் நண்பர்களுடன் நாம் இருந்ததால் யாரும் எதுவும் வித்தியாசமாகக் கதைக்கவில்லை.

### இனங்களைப் பிரிக்கும் பாதை:

அக்கரைப்பற்று தமிழ்ப் பிரிவையும், முஸ்லீம் பிரிவையும், அம்பாறைக்குச் செல்லும் வீதியே பிரிக்கின்றது. இந்த வீதி பதட்டமான காலங்களில் முக்கியமானதாகக் கருதப்படுகின்றது. இவ்வீதியைக் குறுக்கிடும் ஒழுங்கைகள் ஒன்வொன்றிலும் இரு பக்கமும் இரு இனத்தாரும், மற்றவர் வராதபடி காவல் அரண்களை அமைத்து தமது இனத்தைக் காக்க முயற்சி எடுப்பார்கள். அப்படியான இந்த வீதியில், இரு இனத்தாரும் கைகோர்த்து ஆடிப்பாடி குதூகலிக்கும் நாள் ஒன்றுக்காக இரு இனத்தையும் சேர்ந்த சில இளைஞர்களும், முதியவர்களும் உழைக்கின்றார்கள்.

இன்று! இரு இனங்களுக்குமிடையில் அமைதி நிலவுகின்றது.

முஸ்லீம் பிதேசங்களில் உள்ள வீடு கட்டுதல், மற்றும் கூலி வேலைகளைத் தமிழப் பிரதேசங்களில் இருக்கின்றவர்களே வந்து செய்வார்கள். தமிழர்களின் நெற்களை வாங்குவதும் முஸ்லீம் வியாபாரிகளே. இப்படியான ஒரு பொருளாதார உறவு இவ்விரு சமூகங்களுக்கும் இடையில் நீண்டகாலமாகவே நிலவி வருகின்றது. இப்பொழுதும் கூட.

''ஆனால், சில அரசியல் தலைமைகள் தமது நலன்களுக்காகப் புதிய எல்லைகளை உருவாக்கி தமிழ்ப் பிரிவொன்றையும், முஸ்லீம் பிரிவொன்றையும் உருவாக்கி உள்ளார்கள். இதனால் மேற்கூறிய அம்பாறைக்குச் செல்லும் வீதியின் இடப் புறம் தமிழ்ப் பிரதேசமும், வலது புறம் முஸ்லீம் பிரதேசமுமாக இருக்கின்றது. ஆனால் தமிழ்ப் பகுதியில், முஸ்லீம்களுக்குச் சொந்தமான நிலங்கள் மட்டுமல்ல தேவையான பொருட்கள் பலவும் உள்ளன. இவற்றைத் தமிழ்ச் செயலகப் பிரிவின் அனுமதியின்றிப் பெற முடியாது. இதே போல முஸ்லீம் பகுதியிலும் தமிழர்களுக்குச் சொந்தமான நிலங்களும் இருக்கின்றன. இந்த எல்லைகள் -நிர்வாகத்தை- இலகுவாக நடைமுறைப்படுத்துவதன் அடிப்படையில் மீளமைக்கப்படுமாயின் பல பிரச்சினைகளைத் தவிர்க்கலாம்'' என்பதே இரு தரப்பினரதும் அபிப்பிராயமாக உள்ளது.

அக்கரைப்பற்றுத் தமிழ்ப் பிரிவு (ஆலையடி வேம்பு பிரதேசப் பிரிவு) அடிக்கடி இராணுவத்தால் சுற்றிவளைக்கப்படுகின்றது. இதனால் பலர் கைதாகி தடும்பு முகாம்களில் உள்ளனர். இவர்கள் தொடர்பான விபரங்கள், யாருக்கும் சரியாகத் தெரியாது. இத் துர்ப்பாக்கிய நிலைமைக்குப் பிரஜைகள் குழு இயங்காமையும் ஒரு முக்கிய காரணமாகக் கருதப்படுகின்றது. இப் பிரதேசத்திலும் 3 அகதிகள் முகாம்களில் 100 குடும்பத்தினருக்கு மேல் இருக்கின்றனர்.

இங்கிருந்து திருக்கோயில் போகும் வழியில் முன்னைய அரசாங்க வைத்தியசாலை, இன்றைய அதிரடிப்படை முகாமாகக் காணப்பட்டது. அதில் வழமையான சோதனைக்கும் உட்படுத்தப்பட்டோம்.

போகும் வழியில் திம்புலுவில் கிராமம். அங்கே ஒரு பாடசாலை. அங்கும் மாணவர்கள் நிலத்திலிருந்து ஆர்வமாகப் படித்துத் தொண்டிருந்தனர். அதை எமது கமராவுக்குள் உள்வாங்கிக் கொண்டு அப்பால் சென்றோம்.

தம்புலுவில், அக்கரைப்பற்று தெற்கு பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம். இங்கும் ஒரு பிரச்சினை. இரண்டு நாட்களுக்கு முன்பு, சேமிப்பு அறையில் இருந்த சாமான்களைக் காணவில்லையாம். பூட்டு, சாவியினாலேயே திறக்கப்பட்டுள்ளது. சாவி வைத்திருந்தவரிடம், யாரோ இரவு சென்று ஆயுத முனையில் சாவியை வாங்கியுள்ளனர். அடுத்த நாள் புலிகள் சங்கத்தைக் கொள்ளையடித்துச் சென்று விட்டார்கள் என ஊரெல்லாம் பரவலாகக் கதைக்கப்பட்டதாம். அதனால், சாவி வைத்திருந்தவரைப் பொலிசார் விசாரணைக்கு உட்படுத்தியுள்ளார்கள். ஆனால், இது தொடர்பாக இன்னொரு கதையும் உலாவியது. கூட்டுறவுச் சங்கத்திற்கு முன்னாலுள்ள டிரான்ஸ்போமரை பாதுகாக்க எப்போதும் இரு அதிரடிப்படையினர் அதே இடத்தில் காவல் காத்துக் கொண்டிருப்பார்கள். இதனால் புலிகள் வந்து கொள்ளையடித்துச் செல்வது சாத்தியமில்லை எனவும் கதைக்கப்படுகின்றது.

### சொல்வதற்கு ஒன்றுமில்லை:


திருக்கோவில் பிரதேசச் செயலாளரைச் சந்திக்கச் சென்றோம். 30-35 வயது மதிக்கத்தக்கவர். வெள்ளை நிறத்தில் மேற் சட்டையும், நீள்காற் சட்டையும் அணிந்திருந்தார். பத்திரிகையிலிருந்து வந்திருக்கிறோம் என்று கூறியவுடனேயே முகத்தில் பயக்களை தெரிந்தது. ''என்ன வேண்டும்?'' எனக் கேட்டார். நாம் போன காரணத்தைக் கூறினோம். ''இங்கு ஒரு பிரச்சினையும் இல்லை, இங்கு எல்லாம் ஒழுங்காக நடைபெறுகின்றன, அரசாங்கம் நன்றாக உதவி செய்கின்றது. எல்லோரும் நன்றாக வாழ்கின்றனர். நான் சொல்வதற்கு ஒன்றும் இல்லை. நீங்கள் போகலாம்'' என்றார்.

### எமக்கு மட்டும் எதுவும் கிடைக்காது:

நாம், அங்கிருந்து வெளியேறித் திருக்கோவில் அகதிகள் முகாமுக்குப் போனோம். திருக்கோவில் அகதிகள் முகாமில், தங்கவேலாயுத புரம், கஞ்சிக் குடியாறு போன்ற பிரதேசங்களில் இருந்து வந்த 350 குடும்பங்களைச் சேர்ந்த அகதிகள் வாழ்கின்றனர்.

நாம் சென்ற போது ஒரு சிதைந்து போன குடிசைக்கருகில், இன்னுமொரு குடிசையைக் கட்டிக் கொண்டிருந்தனர் சிலர். அதற்காகப் பழைய மூங்கல் தடிகளையும், உக்கிப் போன ஓலைகளையுமே பாவித்துக் கொண்டிருந்தனர். அருகிலிருந்த ஓலைக் கொட்டில் ஒன்றுக்குள் எம்மைச் சென்று பார்க்கச் சொன்னார்கள். போனோம். ஒரு மூலையில் இருந்து சூரிய வெளிச்சம் நன்றாகவே உள்ளே வந்து கொண்டிருந்தது. சட்டி பானைகள் காய்ந்து கிடந்தன. மூங்கில் தடிகள் உக்கி மஞ்சள் தூள்களாக நிலத்தில் கொட்டியிருந்தன. இங்குள்ள கொட்டில்கள் எல்லாம் இந்த நிலைமையிலேயே இருப்பதாக எம்முடன் இருந்த ஒருவர் கூறினார்.





நாம் கொட்டிலை விட்டு வெளியே வந்த போது, வயது போன பெண் ஒருவர் ''யார் வந்திருக்கினம்'' என்று விசாரித்தார். ''பேப்பரிலை இருந்து வந்திருக்காங்க'' என்ற பதில் கிடைத்ததும், வாயைச் சப்புக் கொட்டிக் கொண்டு, சலித்துக் கொண்டவர். ''வருவார்கள், கேட்பார்கள், போவார்கள் எமக்கு மட்டும் ஒன்றுமே கிடைக்காது'' என்றார்.


''எங்கடை தீவ்வியநாதன் எம். பிக்கு நாங்கள் இருக்கிறோமா இல்லையா என்று தெரியுமோ தெரியாது'' என்று அங்கலாய்த்தார் ஒருவர். நாங்கள் முன்பு இருந்த இடமெல்லாம் இப்பொழுது காடாகப் போய் உள்ளது. அதற்கு முன்பு காடாக இருந்ததை வெட்டி, சேனைப் பயிர்ச் செய்கை செய்தோம். இப்போதைய நிலைமையில் நாம் எமது இடங்களில் சென்று வாழ முடியாது என்றனர். இப் பிரதேசங்களில் 90ம் ஆண்டுக்குப் பிறகு ''கொளகொட்டி'' என்ற இனந்தெரியாத ஆயுதந்தாங்கிய நபர்களால், பலர் கைது செய்யப்பட்டு காணாமல் போயுள்ளனர்.

கடைசியாக கல்முனை ஊடாக மருதமுனைக்குச் சென்றோம். இக்கிராமமானது 100% முஸ்லீம் மக்கள் வசிக்கும் பிரதேசமாகும் இங்குள்ள அல்-மனார் மகாவித்தியாலயத்தில் 200 தமிழ் மாணவமாணவிகள் கல்வி கற்கின்றனர். அத்துடன் 15 தமிழ் ஆசிரியர்களும் கற்பிக்கின்றனர். கிழக்கு மாகாணங்களில் தமிழ், முஸ்லீம் கலவரங்களால் ஏற்பட்ட பதட்டமான சூழ்நிலையிலும் இம் மாணவர்களும் ஆசிரியர்களும் பாடசாலைக்குச் சமூகமளித்திருந்தனர். அந்தளவுக்கு மருதமுனை மக்கள் மீது புரிந்துணர்வுடனான நம்பிக்கை வைத்துள்ளனர் என இங்குள்ள ஆசிரியர் ஒருவர் கூறினார்.

மருதமுனை முஸ்லீம் கிராமம், அயலில் பல தமிழ்க் கிராமங்களைக் கொண்டுள்ளதுடன் மட்டுமல்லாமல் இரு இனங்களுக்குமிடையிலான நல்லுறவுப் பாலமாகவும் விளங்குகின்றது. இதற்கான அடிப்படைக் காரணம் முஸ்லீம் மதத் தலைவர்கள் கிராம முன்னோடிகள், ஆசிரியர்கள், மாணவர்கள் மத்தியிலுள்ள புரிந்துணர்வே என்கிறார்கள் எம்மைச் சந்தித்த சிலர். இங்கிருந்து வருடந்தோறும் பல்கலைக் கழகத்தின் பல்வேறு துறைகளுக்கும் மொத்தமாக 40க்கும் அதிகமான மாணவர்கள் செல்கின்றனர் இந்த நிலைமை அக்கரைப்பற்றிலும் நிலவுகின்றது. இது அம்பாறை மாவட்ட முஸ்லீம் மாணவர்களின் முக்கியமான முன்னேற்றங்களில் ஒன்றாகக் கருதப்படுகின்றது.

முஸ்லீம் பிரதேசமாக இருந்த அம்பாறை மாவட்டத்தை மீண்டும் முஸ்லீம் பிரதேசமாக மாற்றக் கூடிய சக்தி புலிகளுக்கு மட்டுமே

→15



வானமே கூரையாக...

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



மலையக மக்கள் மீது பற்றுக் கொண்டவர்களாக இந்த இளைஞர்கள் இருந்தமையினால், இம்மக்களின் அவலநிலைகளைப் போக்க, மக்கள் உள்ளத்தில் அறியாமை என்ற இருளை அகற்ற எண்ணினர். இவர்களின் எண்ணத்திற்கு தி.மு.கவின் கொள்கை மிகவும் பொருத்தமானதாக இருந்தது. எனவே தோட்டங்களில் தி.மு.கவினரின் கருத்துக்களை பரப்ப தி.மு.க என்ற பெயரிலேயே ஓர் அமைப்பை உருவாக்கினர்.

பற்றிய சிறப்புச் செய்திகளை தாங்கி வெளிவந்தது.

மாநாடு நடந்த அன்று, மக்கள் பண்டாரவளை நகரில் திரண்டனர். இனவெறிபிடித்தோர், கற்களை எறிந்து கூட்டத்தைக் கலைத்தனர். பேரூந்துகளில் உணர்வுடனும், உற்சாகத்துடனும், கொடிகளை ஏற்றிவந்த மக்களை அடித்துத் துரத்தினர். அன்று ஏற்பட்ட இந்த அமளி - மலையகத்தில் தி.மு.கவின் அஸ்தமனத்தைக் கோடிட்டுக் காட்டியது. இலங்கையின் இனவாத அரசியலி

வைத்து அதன் சீர்திருத்தக் கருத்துக்களை நாடகம் கலைநிகழ்ச்சிகள் மூலம் பரப்புகின்ற வேலையை அத்தோட்டத்தில் செய்து வந்தனர். மக்கள் மத்தியில் சமூகப்பற்றினையும், ஒற்றுமையையும் ஏற்படுத்த முயன்றனர். மூட நம்பிக்கைகளைச் சாடி மக்களைப் பகுத்தறிவுப் பாதைக்கு அழைத்துச் செல்ல முயன்றனர். இதனை அடுத்து மடக்கும்பரை **''புதுக்காடு''** என்ற தோட்டத்தில் இயங்கிய **'' இளைஞர் மன்றம்'' இணைந்தது. இம் மன்றத்தைச் சேர்ந்த திருவாளர்**

## மலையக அரசியலில் சமூக கலாசார அமைப்புகள்

**திருவாளர்கள் ஏ.இளஞ்செழியன், மணவைத்தம்பி, வேலழகன், மு.நேசமணி** போன்றவர்களே இதனைத் தோற்றுவித்தனர். தோட்டத் தொழிலாளர்களாக கடமை புரிந்த இளைஞர்கள், கல்விகற்ற இளைஞர்கள் எனப் பலரும் இந்த அமைப்பில் இணைந்து செயல்பட்டனர். மலையகத்தில் இவ்வியக்கம் பெரும் பரபரப்புடன் உருவாகி வளர்ந்தது. தி.மு.க

னால் தி.மு.க அமைப்பு இங்கு வளர முடியவில்லை. ஆனால் தி.மு.க கருத்துக்களினால் கவரப்பட்டவர்கள் துணிந்து தோட்டங்களில் மன்றங்கள் அமைத்து தங்களின் எண்ணங்களை நிறைவேற்றிக் கொள்ள முயன்றனர்.

### இளைஞர் தமிழ்ச் சங்கம்:

மலையக சமூகத்தின் அவலத்தை போக்க ஓர் அமைப்பின் மூலம் ஒன்று திரண்டு போராட வேண்டு

**கள் கே.முருகேசு, ஆர்.அழகிரி, எஸ்.தமிழரசு, வி.ரி.தர்மலிங்கம், வி.மாசிலாமணி, எஸ்.ஜோதிலிங்கம்** போன்றோர் தோட்டத்தில் உற்சாகமாக செயற்பட்டுக் கொண்டு இருந்தனர். நாடகங்கள், இரவுப்பாடசாலைகள் நடாத்தினர். மது அருந்தும் பழக்கத்தை தொடர்ச்சியாகக் கொண்டிருந்தவர்களை நல்வழிக்கு திசைதிருப்பினர். மூட நம்பிக்கைகளை வளரவி

# மலையகத்திலும் தி.மு.க அரசியல்

தமிழகத்தில் அசுரவேகத்தில் முன்னேறியதால் இங்கும் அது வளர்ச்சி பெற்று பெரும் சக்தியாக விளங்கும் எனப்பலரும் எதிர்பார்த்தனர். பல இடங்களில் எழுச்சிக் கூட்டங்களையும், சீர்திருத்த மாநாடுகளையும் நடாத்தி வெற்றிவாகை சூடினர்.

இந்த அமைப்பின் சிகரமாக பண்டாரவளையில் இம்மாநாடு நடைபெற்ற வேளையில் ஏற்பட்ட நிகழ்ச்சி மறக்க முடியாத வடுவாக அமைந்தது. இம்மாநாட்டிற்கு மலையகத்தின் பலபகுதிகளிலிருந்து அதிகமான மக்கள் பங்குபற்றுவதற்காக வருகைதந்தனர். மலையகத்தில் தொழிற்சங்கங்கள் நடாத்தும் மாநாட்டிற்கு நிகராக இம்மாநாட்டை அதன் ஏற்பாட்டாளர்கள் ஏற்பாடு செய்திருந்தனர். சீர்திருத்த நோக்கோடு தொழிற்சங்கங்களுக்கு சவால் விடுவது போல் முன்னேறி வந்த இந்த அமைப்பு இலங்கை இனவாதிகளின் கண்களை உறுத்தியது. தொழிற்சங்க நடவடிக்கைகளை தவிர்த்து, சமூக முன்னேற்றத்தை நோக்காகக் கொண்டு மலையகத்தில் அமைத்த முதல் அமைப்பு இதுவேயாகும்.

இனவாதம் தலைவிரித்து தாண்டவமாடிய காலமாதலால் சிங்கள மக்கள் மத்தியில், மலையக மக்களுக்கு எதிராக இனவாதிகள் காழ்ப்புணர்ச்சியை அரசியல் நோக்கத்திற்காக உருவாக்கினர். இனவாதத்தை தூண்டிவிடக் கூடிய பேச்சுக்களுக்கு பெயர் பெற்ற திரு.கே.எம்.பி.ராஜரட்ணவின் பிரதேசமான பண்டாரவளையில் தி.மு.க. மாநாடு நடாத்த எண்ணியது அவர்களின் துணிவைக் காட்டுகின்றது. தமிழக வார ஏடுகளுக்கு நிகராக வெளிவந்த அவர்களின் **''தி.மு.க''** என்ற வார இதழ் இம்மாநாடு

மென சில படித்த இளைஞர்கள் எண்ணினர். அந்த எண்ணத்தின் வடிவமாக 1958ம் ஆண்டில் வட்டகொடையில் 'இளைஞர் தமிழ்ச் சங்கம்' என்ற ஓர் அமைப்பு உருவாகியது. இந்த அமைப்பு தோட்டத் தொழிலாளர்களின் அரசியல் உணர்வுகளைத் தட்டி எழுப்ப; மலையக மக்களுக்கு அரசியல் உரிமையைப் பெற்றுத்தர; தமிழுக்கு சம அந்தஸ்து இந்நாட்டில் கொடுக்கப்பட வேண்டுமென்ற நோக்கங்களைத் தாங்கி இவ்வமைப்பு எழுந்தது.

இவ்வமைப்பினை **திருவாளர்கள் ஏ.வி.மெத்தியூஸ், எல்லாளன், எஸ்.ஜி.குருபரன், வி.ரி.தர்மலிங்கம்** ஆகியோர் தோற்றுவித்தனர். இதன் காப்பாளர்களாக **திரு.சி.கணபதிப்பிள்ளை, தி.ஏ. கருப்பையா** ஆகிய இருவரும் ஏற்றுக்கொள்ளப்பட்டனர். இவர்கள் ஹட்டன் சென் ஜோன் பொஸ்கோஸ் கல்லூரியில் பட்டதாரி ஆசிரியர்களாகக் கடமை புரிந்தனர்.

டாமல் தடுத்தனர். குடும்பங்களில் நடைபெறும் நற்கருமங்கள், துன்ப நிகழ்வுகளுக்கு உதவிக்கரங்களை நீட்டினர். பாடசாலைகளுக்குச் செல்லாத பிள்ளைகளை பாடசாலை சென்று படிப்பதற்கு உற்சாகமூட்டி அதற்குரிய வழிமுறைகளை அறிவுரையாக வழங்கி வழிகாட்டினார்கள். இவர்களின் இப்படியான நற்செயல்கள் மக்களின் மத்தியில் பெரும் செல்வாக்கினைப் பெற்றன.


மேலும் மன்றங்களை ஒன்றிணைக்கும் பணி வெற்றிபெறவில்லை. மன்றங்களை நடாத்தியோர் இளைஞர் தமிழ்ச் சங்கத்திலும் பதவிகளை எதிர்பார்க்கின்ற மனப்பாங்கினை கொண்டவர்களாக இருந்தனர். இணைந்து செயற்படுவதற்கும் பேரம் பேசும் தன்மை அவர்களிடம் காணப்பட்டது. பெரும்பாலும் தனித்து இயங்குவதிலே ஆர்வம் காட்டினர். இந்த மனமாற்றப் போக்கினால் மன்றங்களை இணைத்துச் செயற்படும் எண்ணம்

## வி.ரி.தர்மலிங்கம்

தி.சி.கணபதிப்பிள்ளை யாழ்ப்பாணத்தைச் சேர்ந்தவர். தி.ஏ.கருப்பையா ராகலையைப் பிறப்பிடமாகக் கொண்டவர். இந்த அமைப்பின் நோக்கத்தை வென்றெடுக்க, தோட்டங்களில் உதிரிகளாகச் செயற்பட்ட மன்றங்களை ஒன்றாக இணைத்து செயல்பட நடவடிக்கை எடுக்கப்பட்டது.

இதன் பலனாக மடக்கும்பரை அக்கரை மலைத் தோட்டத்தில் இயங்கிய **''முத்தமிழ் மன்றம்''** முதலில் இணைந்தது. இவ்வமைப்பைச் சேர்ந்த **மணிமாறன் ஏ.எஸ்.சாமி, பிரான்ஸிஸ், மாசிலாமணி** போன்றோர் தி.மு.க கொள்கையில் அமைக்க முடியாத நம்பிக்

வெற்றிபெறவில்லை. இதில் கவனம் செலுத்தி காலத்தை விரயமாக்க அமைப்பு விரும்பவில்லை.



வரும்

## சரிநிகர் நடாத்திய கவிதைப் போட்டியில் 1 வது பரிசு பெற்ற கவிதை





எச்சில் விழுங்கும்
இரவுகள் பற்றி
எச்சரிக்கையாய் இரு.

உன் உயிர்க் கிழிசலின்
எரிகையில்
என் மௌனச் சிதைவுகளையும்
சேர்த்து எரி.

சிதைந்து சிதைந்து
துடிக்கும்
உணர்வுகள் தழைக்க
விழி நீர் கசிய
வழி விடு.

உன் இதய உடைவுகளின்
சிதறல்களிலிருந்து
மீண்டும் மீண்டும்
உயிர்த்தெழு.

வாழ்வின் ஓரமாய்
ஒதுங்கி வா!
ஒரு நொண்டியாய்
நான் காத்திருக்கிறேன்.

எம்.சிராஜ் மஷ்ஹூர்

## 2 வது பரிசு பெற்ற கவிதை

கரையில் மோதிச் சிதறித் தெறித்து
மேலெழுந்துடையும் அலைத்துளிகள்..
அவைபோக
மீதியை உள்வாங்கும் கடல்.

வெகு தூரத்தே
இன்றின் புத்தம் புது டிசைன் வானத்தை
தொட்டுத் திரும்புமோர் வள்ளம்.

சிறு பிள்ளைப் பராயத்தில்
அலையென்றால் கடும் பயமெனக்கு.
கரையினில் நின்றே கால் நனைத்த நாட்களை
எண்ணிச் சிலிர்ப்பேன் ஒரு கணம்.

ஆனாலும்,
அலைகளுக்கு மிகவுந்தான் ஆவேசமின்று
எப்போதும் போல
நண்டுகளை விரட்டி வளையுள் புகுத்தி
கரையைப் புதிசாய்ப் பூசி மெழுகிப் போக வரும்
அலைகளில்லை இன்று.

முன்பொருநாளில்
இவ்வாறே
கரையை அலைகள் பலமாயறைந்து கொண்டிருந்ததோர்
கொடும் வெய்யில் தினத்தன்றுதான்
நிருவாணப் பிணமொன்றை முண்டமாய்
கரையொதுக்கிற்று இவ்வலைகள்.

விபரீத எண்ணங்களில் மனமலைச்சலுற
என்னுள் புரவுமோர் பதட்டம்
காற்றால் குலைந்த முடியை
கோதிச்சரி செய்து
மெல்ல அகல்வேன் நான் அவ்விடம் விட்டு.

என் தேசத்தில்
இன்னும் மீதமாயிருக்கிறவர்களின்
எண்ணிக்கையைக் குறைத்தபடி
இன்னுமோர் பிணத்தையும்
இவ்வார்ப்பரிக்கும் அலைகள்
கரையொதுக்கியிருக்கக் கூடும்
எங்கேயோ!

ஏ.எம்.றஸ்மி

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



**2வது பரிசு பெற்ற சிறுகதை**



# சிலுவை வீடு

என்னைப்பற்றிய அறிமுகம் உங்களுக்குத் தேவைப்படும். நான் யார் என்பதைச் சொல்வதும் மற்றவர்களை நம்பவைப்பதும் இன்றைய நாட்களில் சாத்தியமானதாக இல்லை. விஞ்ஞானிகள் நேர்மையான முறையில் என்னைப் பரிசோதனைக்குட்படுத்துவார்களாயின் எவ்வித தயக்கமுமின்றி நான் மனிதன் தான் என்றே அறிவிப்பார்கள். எனது கைகளிலுள்ள விரல்களின் மொத்த எண்ணிக்கை எட்டு என்பதும், எனது இடதுகால் அரை அங்குலம் குட்டை என்பதும், எனக்கு முடியே வளருவதில்லை என்பதும் நான் மனிதன் அல்ல என்று சொல்வதற்கான நிருபணங்கள் ஆகா.

விஞ்ஞானிகளை மறுப்பது சில சூழ்நிலைகளில் விநோதமான ஒரு தேவையாகிறது. அத்தேவை மிக அவசியம் என்று கருதப்படுகின்ற சூழலிலேதான் வாழ நேர்ந்திருக்கிறது எனக்கு.

இறுதியாகப் பெய்யத் தொடங்கிய மழையால் நான் இருந்த சிறுவீட்டிற்குள்ளும் வெள்ளம் புகுந்ததால் அங்கிருந்து கிளம்ப வேண்டியதாயிற்று. பாதைகளை மூடி நின்ற அவ்வெள்ளக் காட்டின் மேலாக நான் நீந்தத் தொடங்கினேன். சரியாகச் சொன்னால், அப்போதுதான் நான் நீந்தவே கற்றுக் கொண்டேன்.

வெள்ளப்பகுதியை நீந்திக்கடந்த எனக்கு தரைப்பகுதியை நடந்து கடக்க வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டது. நிர்ப்பந்தம் ஒருபுறம் இருக்க, இலக்கு எது என்பது எனக்குப் பிடிபடவேயில்லை. இலக்கை நோக்கியா பூமி நகர்கிறது? எனவே நானும் நடந்தேன். வழியில் வாழ்விலே முதற்தடவையாக அடர்ந்த காடுகள் ஆர்ப்பாட்டமான நதிகள், உயர்ந்த மலைகள், ஆழமான பள்ளத்தாக்குகள், பரந்து நீண்டிருந்த பாலைவனங்கள் போன்றவற்றுடன் எனக்குப் பரிச்சயம் ஏற்பட்டது.

அவையெல்லாமே அசைபோட்டு மகிழ்வதற்குரிய அனுபவங்களாக இல்லை. உதாரணமாக, மலைகளைப் பார்த்த போது என் மார்புக் கூட்டினுள் அசுரப்பறவையொன்று சிறகடிப்பது போன்ற உணர்வு ஏற்பட்டது. பாலைவனங்களினூடாகப் பயணித்த போது என் இரத்தம் சுண்டி ஆவியாகி விடுவது போல் உணர்ந்தேன். ஆனாலும் ஏதோ அவசியம் கருதியும், எனக்குள் இருந்து தொழிற்பட்ட இனம்புரியாத உந்துதல் காரணமாகவும் நான் தொடர்ந்து நடந்தேன்.

இடையிடையே பூமி இவ்வளவு பிரமாண்டமானதா என்ற நகைப்பு எனக்குள் தோன்றியது. இந்நகைப்பு ஏற்படுவதற்கு என் கால் வலிதான் காரணமாக இருந்ததா என்பது தெரியவில்லை. பூமி சிறியதாக இருக்க வேண்டும் என்று என் கால்கள் விரும்பியிருந்தாலும், அது பூமிக்குக் கேட்டிருக்க நியாயமில்லை. வயிற்றைக் குமட்டுகின்ற வியர்வை நாற்றத்துடனும், பாதங்களில் ஏற்பட்டிருந்த காயங்கள் தந்த வேதனையுடனும் நீண்டதூரம் நடந்த பின்னர் சிலுவையின் அமைப்பை ஒத்ததும், முற்று முழுதாக வெள்ளை வர்ணம் பூசப்பட்டதுமான வீடொன்று என் கண்களுக்குத் தட்டுப்பட்டது. அவ்வீட்டினருகே விரைந்து சென்றேன். குளிர் நிறைந்த இளங்காலைப் பொழுதில் அசையாமல் நின்றபடி அவ்வீட்டை நான் அதிசயமாகப் பார்த்தேன்.

எனக்குள் களிப்பு இறங்கியது

அதன் அழகும் அமைதியும் என்னை மிகவும் கவர்ந்தன. அதன் வெள்ளை வர்ணம் பிரத்தியேக சிறப்புடையதொன்றாக எனக்குத் தோன்றியது. அவ்வீட்டில் எனக்கு ஒரு இடமிருப்பதாக என்மனம் உறுதியாகச் சொல்லியது. நிலத்தைப் பிளந்து வெளியே வரும் புதுமுளை போல் என் நெஞ்சில் இறவாநம்பிக்கை ஒன்று முகிழ்த்தெழுந்தது.

என்வியர்வை நாற்றம் நறுமணமானது. என் கால்வலி ஒன்றில் நிலத்தினுள் இறங்கியோ அல்லது, காற்றில் கரைந்தோ காணாமல் போனது. கால் புண்களின் நினைவே எனக்குள் எழவில்லை. சுமாரான உயரத்தைக் கொண்டிருந்த அவ்வீட்டின் மதிற்சுவரை ஏறிக்கடப்பதில் எனக்கு அவ்வளவாக சிரமம் இருக்கவில்லை. மதிலைத்தாண்டி உள்ளே சென்றதும், எனக்குள் ஒரு முழுமையான நிம்மதி பிறந்தது. நீண்டநாட்களின் பின்னர் அக்கணத்திலிருந்து தான் சுகமாக சுவாசிப்பதாக உணர்ந்தேன். என் இரத்த அணுக்கள் புத்துணர்வு பெற்றன.

என்னைப் பீடித்திருக்கக்கூடிய அனைத்து நோய்களுக்கும் மானசீகமாக விடை கொடுத்தபடி வீட்டை நெருங்கி வந்து நின்றேன்.

ஆழமான அன்பிலும், அமைதியிலும், சமாதானத்திலும் அவ்வீடு மூழ்கியிருப்பதாகத் தோன்றியது.
அவ்வீட்டின் வர்ணமே அதற்குச் சாட்சியாய் நின்றது.

பொழுதுவிடியவும் அவ்வீட்டினுள் மெலிதான சத்தங்கள் கேட்டன. சற்றுக்கழித்து என்றுமே கேட்டிராத புரியாத இசையொன்று அவ்வீட்டை நிரப்பிக் கொண்டிருந்தது. கதவைத் தட்டுவதற்குரிய நேரம் இதுதானா என்று நான் யோசித்துக் கொண்டிருந்தேன். அப்போது பெரிய கதவு திறக்கப்பட்டது. வழுக்கை விழுந்த நீண்ட பொன்னிறத்தாடி உடைய ஒரு முதியவர் வெளியே வந்தார். அவர் முகத்தில் ஞானஒளி மின்னிக் கொண்டிருந்தது. பிரபஞ்ச

அருள் சின்னையா

சூட்சுமங்களையெல்லாம் சுக்குநூறாக அவர் உடைத்திருப்பது நிச்சயம் என்று தோன்றியது. அக்காலைப் பொழுதில் அவர் எல்லையில்லாத களிப்பில் இருப்பதை அவதானித்தேன். (அவர் எப்போதுமே அதீத களிப்பில் திகழ்பவர் என்பதை பின்னர் தெரிந்து கொண்டேன்.) நெஞ்சில் நிறைந்திருந்த பூரணதிருப்தியின் நிமித்தமாக அவர் சிரிக்க வேண்டியிருந்தது. சிரித்தபடியே இரண்டு அடிகள் முன்னால் வந்து அவ்வீட்டையும் சுற்றுப்புறத்தையும் பார்வையால் வருடினார்.
அவர் கண்களில் பெருமிதம் குலுங்கியது.
எங்கும் நோக்கிய அவரது பார்வை, நான் கடந்து வந்த மதிற் பகுதியை அடைந்த போது செழுமை மிகுந்த அவரது முகத்தில் ஒரு வாட்டம் தென்பட்டது. அக்கணமே எனக்கும் திகில் ஏற்பட்டது. அவர் திரும்பி கண்களைக் கூர்மையாக்கிக் கொண்டு வீட்டையும் சுற்றுப்புறத்தையும் நிதானமாக நோட்டமிடத் தொடங்கினார். பூச்செடிகளின் பின்னால் சுவருடன் ஒட்டிக் கொண்டிருந்த என்னைக் கண்டுபிடிப்பதில் அவருக்கு சிரமமிருக்கவில்லை. அவர் முன் நோக்கி மெதுவாக நடந்துவந்து பூச்செடிகளின் மேலாக அப்போது அவர் முகத்திலும் வாயிலும் ஏற்பட்ட அசைவுகள் எதைக் குறித்தன என்பதை முன்னால் சரியாக இனங்காண முடியவில்லை. நான் பயத்தின் ஆய்க்கினையை அனுபவித்துக் கொண்டிருந்தேன்.

சிறிது நேரம் என்னை உற்று நோக்கியவர் ''எழுந்து வெளியே வா'' என்று கண்களால் உத்தரவிட்டார். கால்களின் விறைப்பையும் மீறி அவரது உத்தரவுக்குக் கீழ்ப்படிந்து எவ்வாறு நான் வெளியே வந்தேன் என்பது இக்கணத்திலும் எனக்கு ஆச்சரியமாகவே உள்ளது.

அவர் என்னை உற்றுப் பார்த்தாரேயன்றி எதையும் கேட்டாரில்லை. நான் சொல்வதெதையும் நம்பப்போவதில்லை என்னும் பாவனை அவர் முகத்தில் தெரிந்தது. ''எனக்கு எல்லாமே தெரியும், சின்னப் பயலே!'' என்று அவர் கண்கள் கூறியது எனக்குப் புரிந்தது.

''பின்னால் வா'' என்று சைகை செய்துவிட்டு அவர் முன்னால் நகர்ந்தார். நான் அவரைப் பின்தொடர்ந்தேன். நாங்கள் வீட்டிற்குள் சென்றோம்.
வெளியில் இருந்த எளிமை வீட்டின் உள்ளே நிச்சயமாக இல்லை. அதன் உள்ளமைப்பை விளக்குவது சுலபமல்ல. அது சிக்கலானது. வீட்டின் மற்றைய உறுப்பினர்களின் முகங்களில் மெலிதான கலவரத்தின் சாயல் தெரிந்தது அது என்னைப் பார்த்ததனால்தான் ஏற்பட்டதா என்பதை என்னால் சரியாகக் கணிக்க முடியவில்லை. ஆனாலும், அவர்கள் எல்லோருக்கும் நான் அறிமுகம் செய்து வைக்கப்பட்டேன். எனக்காக ஒரு இடம் ஒதுக்கப்பட்டது. பாய், தலையணை, படுக்கை விரிப்பு, உணவுத்தட்டு மருந்து கூடவே கறுப்புநிறத்தில் சேவல் ஒன்றும் எனக்கு வழங்கப்பட்டன.

கணனி இயந்திரம் வைக்கப்பட்டிருக்கிறது என்று நான் சந்தேகிக்கும் ஒரு அறையைத்தவிர வீட்டின் மற்றைய பகுதிகளுக்கெல்லாம் சென்றுவரவும் எனக்கு அனுமதி அளிக்கப்பட்டது. சிலுவை அமைப்பும் வெண்ணிறமுடைய அவ்வீட்டில் இவ்வாறுதான் என் வாழ்க்கை ஆரம்பமானது.

மெதுவாக எனக்கும் அவ்வீட்டிலுள்ளவர்களுக்குமிடையில் ஒரு உறவு வளரத் தொடங்கியது. அவ்வுறவு மேலோட்டமானதா ஆழமானதா, சுமூகமானதா பகையுணர்வுடையதா என்பதில் எனக்கு எப்போதுமே குழப்பம் தான். அல்லது அந்த உறவின் நோக்கமே இக்குழப்ப நிலையை ஏற்படுத்துவதுதானா என்பதும் எனக்குப் பிடிபடுவதில்லை. பெரிய அகலமான கண்களையுடைய கிழவரின் கடைசிப் பேத்தி. இந்த உலகத்தின் மொத்த அவாக்களையும், ஆவல்களையும் ஒருவர் அவளது கண்களுக்குள் நிச்சயமாகப் பார்க்க முடியும். என்னில் அவளுக்கு பலமான ஈடுபாடு. அவளது தலைமுடியின் நீளத்திற்கு கதைகள் சொல்லும்படியாகவோ, பட்டம் கட்டித் தருமாறோ, படங்கள் வரைந்து கொடுக்குமாறோ, விளையாட்டுப் பொருட்கள் வாங்கித் தருமாறோ அல்லது முதுகில் சுமந்து செல்லுமாறோதான் அவள் என்னைக் கேட்கவேண்டும். ஆனால் அவளோ பூமியிலிருந்து நட்சத்திரங்களின் தூரம்பற்றியும், கடலிலிருந்து மலைகள் உருவான வரலாறு பற்றியும் நிலத்தின் கீழ் ஓடும் ஆறுகள் பற்றியும் விசித்திரமான முறையில் கேள்விகள் தொடுப்பாள். என் உயரத்திற்கு நான் அவற்றை தெரிந்து வைத்திருக்க வேண்டும். ஆனால் பதில் சொல்ல முடிவதில்லை.

அவளது கேள்விகளுக்கு விடையாக வெள்ளைப்பூடும் வெங்காயமும் உடம்பிற்கு நல்லது என்று நான் சொல்லவாரம்பிக்க அவள் எழுந்து சென்று விடுவாள்.

பெரியவர்கள் இன்னும் வேடிக்கையானவர்கள். ''குதிரையில் சவாரிசெய்வது எவ்வாறு?'' என்று நான் ஒருமுறை அவர்களைக் கேட்ட போது ஆதரவோடும், மிகத் தெளிவாகவும் எனக்கதை அவர்கள் விளக்கினார்கள். பின்னர், ''குதிரையோட்டம் உனக்கு அவசியமா?'' என்று மெதுவாகக் கேட்டார்கள்.

எனக்குத் தலைவாரத் தெரியாது என்று குறைபட்டுக் கொண்டார்கள். நான் மிகுந்த பிரயத்தனங்களின்பின் சிறப்பாக தலைவாரிக் கொண்டு வந்து நின்ற போது ''இவ்வளவு ஆடம்பரம் உனக்குத் தேவையில்லை'' என்றார்கள். ''மலர் விரிவது, மலர் விரியும் ஓசையை இரசிப்பது அற்புதமான அனுபவம்; தெரியுமா உனக்கு?'' என்று என்னிடம் கேட்டார்கள்.

காலைப் பொழுதொன்றில் மலர்விரியும் அழகையும், அதன் ஓசையையும் இரசிப்பதற்காக மலர்த்தோட்டத்தின் நடுவே தவநிலையில் நான்நின்றபோது, என்னைப்பார்த்து அவர்கள் நகைத்துக் கொண்டார்கள். ஒளியின் துணை கொண்டு கைவிரல்களின் சேர்க்கையால் சிங்கமொன்றின் நிழலை சுவரில் நான் வீழ்த்திய போது, அவர்கள் கண்களை மூடிக் கொண்டார்கள். ''காற்றில் குத்துக்கரணம் அடிக்கும் கலையை பயில விரும்புகிறேன், உதவ முடியுமா?'' என்று கேட்ட போது, ''நிச்சயமாக முடியும்! ஆனால் அதற்கு மூன்றுகால்கள் தேவைப்படுமே!'' என்று புருவத்தை உயர்த்திய வண்ணம் சொன்னார்கள்.

எனது சிரிப்பு அவர்களுக்கு நன்றாகப்பிடித்து விட்டது என்று காரணம் சொல்லி, தமது தோள்களில் என்னை ஏற்றிவைத்து நடனமாடினார்கள். அவர்கள் எதிர்பார்த்ததைவிட வேகமாகவே அவர்களது கால்கள் சோர்வடையத் தொடங்க, என்னைக் கிட்டத்தட்ட நிலத்தில் எறிவதுபோல் இறக்கி விட்டார்கள்.

நான் நீண்டகாலமாக என்னுடன் வைத்திருக்கும் வலம்புரிச்சங்கை மாடத்தில் கொண்டு வந்து வைக்குமாறும், அது மாடத்திற்கு மேலும் அழகு சேர்க்கும் என்றும் அவர்கள் என்னிடம் சொன்னார்கள். அங்கே வைத்தால் அது தொலைந்துவிடும் என்றுகூறி நான் மறுத்தேன்.

→15

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



## பாலம்

# புதிய பேச்சுவார்த்தைக்கு முன்னுரையாக விடுதலை புலிகளுக்கு ஒரு வேண்டுகோள்!

### எமது சகோதரப் பத்திரிகையான "யுக்திய"விலிருந்து நிஷாந்த எழுதுகிறார்

இப்போதெல்லாம் நாட்டின் அரசியல் நிகழ்ச்சிகள் மிகவும் வேகமாக நடைபெறுகின்றன. மாலை ஒலிபரப்பப்படும் செய்திகளுடன் ஒப்பிடுகையில் காலை ஒலிபரப்பப்பட்ட செய்திகள் பழைய செய்திகளாகி விடுகின்றன. அவ்வளவு வேகம்! புதிய அரசாங்கம் பதவிக்கு வந்ததை அடுத்து, பொ.ஐ.மு. தனது தேர்தல் கால வாக்குறுதிகளில் ஒன்றான இனப்பிரச்சினைக்கு தீர்வுகாணும் முயற்சியில் இறங்கியுள்ளதால் கடந்த சில தினங்களாக இந்த நிலைமையே நிலவுகிறது.

யாழ்ப்பாணத்திற்கு தெற்கேயும், கிழக்கிலும் வாழ்கின்ற பெரும்பான்மையான மக்கள், புதிய அரசின் பதவியேற்புக்குப் பிறகான புலிகளின் நடவடிக்கைகள் பொதுவாக நம்பிக்கை தருவதாகவே கருதுகின்றனர். இவ்வாறே, அரசும் புலிகளும் ஒரு உடன்பாட்டுக்கு வருவதன் மூலம் இந்த நாட்டில் யுத்தம் மறைந்து சமாதானம் உதிக்கும் என்ற நம்பிக்கையும் விருப்பமுமே தெற்கிலுள்ள முழு மக்களிடமும் நிலவுகின்றன. இந்த விருப்பங்களை நடைமுறைக்கு கொண்டு வர இருபகுதியினரும் தமது சந்தேகங்களையும் கோபங்களையும் மறந்து ஒருவரோடு ஒருவர் திறந்த மனதுடனும், நம்பிக்கையுடனும் சரியான, மனப்பூர்வமான உணர்திறனுடனும் (INSIGHT) கலந்துரையாட வேண்டும். கோபம் உண்மையை மறைக்கிறது; ஒருவர் முகத்தை நேர்மையான முறையில் நோக்க அனுமதிப்பதில்லை.

பயன்மிக்க கலந்துரையாடலுக்கு, இருதரப்பாரும் இரு அடிப்படையான விடயங்களில் உடன்பாட்டுக்கு வருவது ஒரு முன்நிபந்தனையாகும். அவையாவன:

1. கலந்துரையாடலுடன் சம்பந்தப்பட்ட எல்லா விடயங்களும் உண்மைக்கான பாதையை திறந்துவிடும் தேடலிலிருந்து எழவேண்டும்.
2. கலந்துரையாடல்கள் நம்பிக்கைக்கும், அபிப்பிராயங்களுக்கும் வழிதிறந்து விடுதல் அவசியம் என்பதற்கு உரிய கவனிப்பும், மரியாதையும் கொடுக்கப்பட வேண்டும்.

கலந்துரையாடலில் ஈடுபடும் இரு பகுதியினரும் இவ்விரண்டு வழிப்படுத்தும் கோட்பாடுகளிலும் விஷேட முக்கியத்துவம் தரவேண்டும். வெறும் நம்பிக்கை மட்டுமே ஒரு நல்ல முடிவுக்கான உறுதியான அடித்தளத்தைத் தரப்போவதில்லை. வெறும் நம்பிக்கைகளை மட்டுமே கொண்டு எழுதப்பட்ட பண்டார நாயக்கா - செல்வநாயகம் ஒப்பந்தமும் சரி (26 யூலை 1957), டட்லி சேனநாயக்க- செல்வநாயகம் ஒப்பந்தமும் சரி (மார்ச் 1965), இலங்கை இந்திய ஒப்பந்தமும் சரி (29 யூலை 1987) எல்லாமே இறுதியில் தோல்வியிலேயே முடிவடைந்தன.

தெற்கிலுள்ள மிகப் பெரும்பான்மையான மக்களது அபிப்பிராயத்திற்கு உரிய மதிப்புக் கொடுக்கும் அதே நேரத்தில் நான் ஒரு விடயத்தை இவ்விடத்தில் குறிப்பிடக் கடமைப்பட்டுள்ளேன். அதாவது இன்றைய காலகட்டம் தான், எல்லோரது மனதிலும் உறுத்திக் கொண்டிருக்கும் இனப்பிரச்சினைக்கு ஒரு உறுதியான தீர்வைக் காண்பதற்கான எல்லாவிதமான வாய்ப்பான கருமங்களையும் ஆற்ற வேண்டிய காலகட்டமாகும்; இப்போது வடக்கை வதைத்துக் கொண்டிருக்கும் யுத்தத்தை முடிவுக்கு கொண்டுவர வேண்டும்.

இறுதி ஆய்வில் இலங்கை அரசாங்கத்தினதும் சரி, விடுதலைப் புலிகளதும் சரி இருவரதும் நோக்கங்களும் ஒன்றாகவே இருப்பதாக எனக்குத் தோன்றுகிறது. வேறு வார்த்தைகளில் சொன்னால், நாம் பிரதிநிதித்துவப்படும் மக்களுக்கு பதில் கூறவேண்டிய பொறுப் இருதரப்பினருக்கும் இருக்கின்றது என்ற உண்மை இருவருக்கும் பொதுவானதே. வடக்கிலுள்ள தமிழ் மக்களது ஏகப்பிரதிநிதிகளாக புலிகள் தம்மைக் கூறுகின்ற அதே வேளை சிங்கள மக்களது பாரம்பரியத்தை மட்டுமே பாதுகாக்கின்ற பொறுப்பைக் கொண்ட நிறுவனமாகவே அரசாங்கம் இயங்கி வருகிறது. அரசாங்கம் கொலனித்துவ காலத்துக்கு முன்பும் கூட ஓரளவுக்கு இதே நிலை தான் இருந்தது என்ற போதும் 1956ல், அரசியலமைப்புச் சட்டத்தின் 33வது சரத்து பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டபின் தான் அது தெளிவாக தெரிய ஆரம்பிக்கிறது.

ஆனால் உண்மையில் சட்ட விதிகளினால் உருவாக்கப்பட்டுள்ள உயர்மட்ட அமைப்பான அரசாங்கமானது மக்களது வாழ்க்கையையும் அவர்களது சமூக பழக்கவழக்கங்களையும் ஒழுங்கு செய்வதற்கான சட்டத்தையும் விதிமுறைகளையும் அறிவிக்க வேண்டியதாக உள்ளது. இந்த அடிப்படையில், அரசின் கட்டுப்பாட்டுப் பகுதியில் ஒழுங்கையும் சட்டத்தையும் பேணுவதற்குப் பொறுப்பானவர்களைக் கொண்ட ஒரு அமைப்பாகவே அரசாங்கம் உள்ளது.

ஆகவே, ஒரு அரசினது பிரதான பொறுப்பு என்னவென்றால் தான் எந்தவொரு குறிப்பிட்ட தேசிய இனத்திற்கோ மதக்குழுவிற்கோ மட்டும் சொந்தமான தனிப்பட்ட பிரதிநிதியல்ல என்று நிரூபிப்பது மட்டுமல்ல. தான் எல்லா இனக்குழுக்களதும் பிரதிநிதி என்றும் காட்ட வேண்டும். அரசாங்கங்களின் இப்பாகுபாட்டுத் தன்மை காரணமாக விடுதலைப்புலிகள், ஒரு இனத்தின் குரலையும், அபிலாசைகளையும் பிரதிநிதித்துவப்படுத்தும் ஒரு அமைப்பாக உள்ளனர்.

விடுதலைப் புலிகள் ஒரு பாசிச இயக்கமா இல்லையா என்பது இக் கலந்துரையாடல்களில் விவாதிக்கப்பட வேண்டியளவு முக்கியமான விடயம் என நான் நினைக்கவில்லை. விடுதலைப் புலிகளைப் போலவே பிற தமிழ் இயக்கங்களும் தம்மை அதி தீவிரவாத நடவடிக்கைகளில் ஈடுபடுத்திக் கொண்டவை என்பது குறிப்பிடத்தக்கது.

இவ்வெல்லா இயக்கங்களிலும் விடுதலைப் புலிகளே மிகவும் அதிகளவு பாசிசப் போக்குகளை கொண்டிருந்த இயக்கம் என்பது உண்மைதான். ஆயினும் பிரபாகரனோ அவரது இயக்கமோ இப்படி ஆகிப் போவதற்கான காரணம் என்ன என்பது அவ்வாறே வெளிப்படையானதே. எனவே இது தொடர்பான விவாதத்தை விடுத்து, நல்ல தீர்வை பெறுவதற்கு ஏற்ற விதத்தில் இருதரப்பினரதும் வரலாற்றைப் பற்றிய விழிப்புணர்வுடன் நிதானமாக இரு தரப்பாரும் பேச்சுவார்த்தைகளில் ஈடுபட வேண்டும்.

வழமையான, விளம்பர நடவடிக்கைகளால் - யுத்த நிறுத்தம், பிரதமர் யாழ்ப்பாணம் போதல், பிரபாகரன் கொழும்பு வருதல் போன்ற கதைகளால்- சலிப்படைந்திருக்கும் மக்களை ஏமாற்றிவிட முடியாது. அவர்கள் பயனுள்ளதாக, உருப்படியானதாக ஏதாவது நடக்க வேண்டும் என்று எதிர்பார்க்கிறார்கள்.


சிங்கள மக்கள் மத்தியிலிருந்து நிறைய உதாரணங்களை காட்ட எனக்கு முடியும். ஆனாலும், நான் இப்பத்தியை ஐரோப்பிய நாடொன்றில் அகதியாக வாழும் எனது தமிழ் நண்பரொருவரின் கடிதத்தின் ஒரு பகுதியை மேற்கோள் காட்டி முடிக்க விரும்புகிறேன். அதிலுள்ள செய்தி விடுதலைப் புலிகள் தலைவர் பிரபாகரனும் பிற அரசியல் வாதிகளதும் காதுகளில் விழும் என்று நம்புகின்றேன்.

''இலங்கையில் எல்லாமே வேகமாக மாறிக் கொண்டிருக்கின்றன. எனது பயம் என்னவென்றால், இதே வேகத்தில், எல்லாம் தலைகீழாக மாறி பழைய இடத்துக்கு வந்து விடக்கூடாது என்பதுதான். அப்படி ஒன்று நடந்தால் என்ன நடக்கும்? நானும், என்னோடு இங்கு அகதிகளாக வாழ்கின்ற மற்றையோரும் எமது நாட்டுக்கு திரும்பி வர விரும்ப மாட்டோம். அப்படி வந்தோமானால், அழிவும், கொலைகளும் நிறைந்த ஒரு சூழலுள் நாம் வீழ்த்தப்பட்டவர்களாவோம். 1956ல் இருந்து இந்தப் பயங்கரத்தை நான் அனுபவித்திருக்கிறேன். எனது வாழ்நாளின் இறுதிக் காலத்தை நான் அடிமை போல வாழ்ந்து கழிக்க விரும்பவில்லை. பேசப்போகும் இரு தரப்பாரது கலந்துரையாடல்களும் எமது உணர்வுகளையும் புரிந்து கொண்டு பேசப்படும் கலந்துரையாடல்களாக அமைய வேண்டுமென்றே விரும்புகின்றேன்''

**நிஷாந்த**

# நாடோடிகள்

('வானமே எல்லை' கவிதைப் போட்டியில் மூன்றாம் இடத்தைப் பெற்றுக் கொண்ட கவிதை.)



சிகரெட்டின் புகைவளையங்கள்
அவனது படுக்கையிலிருந்து, மேசையிலிருந்து, அறையிலிருந்து
அவனைச் சுற்றிச் சுற்றி வெளியேறின.
யன்னலைத்தாண்டி கொய்யா மரத்தையும் கிளிசேரிரா மரத்தை
யும் தாண்டி
மப்புக் கொண்ட காலையில்
குடிமனைகளின் ஊறிய கருஞ்சிவந்த கூரையையும் கடந்து
அவை போயின.
அவனும் ஊதல்காரர்களும் நம்பினார்கள்
அவை துயரத்தைச் சுமந்த நாடுநகர்
காடு தலங்களைத் தாண்டி விடுவதாக.....
ஆனால் எப்போதாவது
கடற்கரையில் நண்பர்களுடன் கிரிக்கெட் விளையாடுவான்.
அலை வந்து பந்தை நனைக்க
விக்கெட்டுக்களை சரித்துவிட்டுப் போக
மறுபடியும் நட்டு
இருண்ட பிறகு பந்து தொலைந்து போகும் வரையும்
கடற்கரை ஒழுங்கையால் நண்பர்களுடன் திரும்புவான்.
அதுபோல தொடர்ந்து இருக்க முடியவில்லை
கவிதைகள்செத்துக் கொண்டு போகிறது
தற்கொலையைப் பற்றியும்
சஞ்சலம், கிலேசம், மன அழுத்தம்
இவை பற்றியும் கவிதையில் வந்தால்
அவன் கவிஞனாக இருக்க விரும்பவில்லை.
தண்டவாளத்தில் தலையை வைத்து
குருதி தரித்து மரித்துப் போவான்
நெடுவான் பறந்தும் திரவியம் தேடப் போயினர் நண்பர்
அவன் இங்கிருப்பதா? பரதேசம் போவதா?
வடநாட்டிற்குப் போவதா?



- நட்சத்திரன் செவ்விந்தியன்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

### 0 பேச்சுக்கு முயற்சி
### 0 தாக்குதலின் முன்னேற்றம்

# நம்பிக்கையில் ஒரு கேள்வி

நாசமறுப்பான்

மன்னார் கடலில் 'சாகர வர்தன' கப்பல் தகர்க்கப்பட்ட சம்பவம் தொடர்பாக பாதுகாப்பு பிரதியமைச்சர் கேர்ணல் ரத்வத்தை தெரிவித்த கருத்துக்கள் பலருடைய கவனத்தையும் ஈர்த்துள்ளன. தாக்கப்பட்ட கப்பல் இலங்கைக் கடற்படையின் மிகப் பெரியதும் சக்தி வாய்ந்ததுமான கப்பல் மட்டுமல்ல, இது புதிய அரசாங்கம் பதவியேற்றதற்குப் பிறகு நடந்த முதலாவது பெரிய தாக்குதலுமாகும். ஆயினும், இத்தாக்குதல் தமது அரசாங்கத்தின் சமாதான முயற்சிகளை பாதிக்கப் போவதில்லை, யுத்த நிறுத்தம் செய்யப்படாத ஒரு சூழலில் இப்படியான தாக்குதல் நடாத்தப்படுவது சாத்தியமே என்று பிரதியமைச்சர் அறிவித்திருந்தார். ஏற்கனவே தாண்டிக்குளம் சோதனைகளைத் தாண்டி பற்றரிகளை எடுத்துச் செல்ல அனுமதிக்குமாறு அவர் ஸ்தலத்தில் வைத்து இராணுவ அதிகாரிகளுக்கு உத்தரவிட்டதன் மூலம் பதவிக்கு வந்த ஒரு மாதத்துக்குள்ளேயே தனக்கென ஒரு பெயரை உருவாக்கிக் கொண்டிருந்தார். இப்போது கப்பல் தாக்குதலின் பின்னான அவரது இந்த அறிவிப்பு இன்னும் ஒரு படி மேலே போய், அவருக்கு ''நிதானமான அணுகுமுறை கொண்டவர்'' என்ற ஒரு பெயரைப் பெற்றுக் கொடுத்துள்ளது.

இதேவேளை பொ.ஐ.மு. அரசாங்கத்தின் அதி உயர் முக்கியதஸ்தர்கள் மூவரில் ஒருவரான தகவல் துறை, சுற்றுலா மற்றும் விமானப் போக்குவரத்து அமைச்சர் தர்மசிறி சேனநாயக்கா (மற்றைய இருவர் பிரதமர் சந்திரிகா; சட்ட நீதித்துறை அமைச்சர் ஜி.எல்.பீரிஸ்) அவர்களின் விடுதலைப்புலிகள் தொடர்பான அறிவிப்பும் முக்கியமான கவனிப்புக்குரிய ஒன்றாக அமைகிறது. ''என்ன விலை கொடுத்தாலும்'' (At any cost) வடக்கு கிழக்குப் பிரச்சினைக்கு ஒரு தீர்வுத் திட்டத்தை அரசு தயாரிக்கத்தான் போகிறது என்றும், விடுதலைப்புலிகளை தாம் ''பயங்கரவாதிகள்'' என முன்னைய அரசு போல முத்திரை குத்தி சமாதானக் கதவுகளை மூடப் போவதில்லை, வேண்டுமானால் தவறாக வழி நடாத்தப்படும் குழுக்கள் என்று அவர்களை அழைக்கலாம் என்றும் தெரிவித்திருந்தார்.

அதாவது, புதிய அரசின் நோக்கமான,(தேர்தல் முடிந்த கையோடு பிரதமர் சந்திரிகா அவர்கள் அறிவித்தது போலவே) சமாதானப் பேச்சுகளை நடாத்துவதன் மூலம் நாட்டில் அமைதியைக் கொண்டு வருவதில் தாம் உறுதியாக உள்ளோம் என்பதே இவ்வறிக்கைகளின் விளக்கமாகும்.

ஆயினும், தேர்தல் முடிந்த காலத்திலிருந்து வேகம் குன்றி, இனப்பிரச்சினைக்கான தீர்வு முயற்சிகளுக்கான நடவடிக்கைகள் சற்றுத் தாமதமடைந்து காணப்படுவதையே கடந்த வார நிகழ்ச்சிகள் காட்டுகின்றன. விடுதலைப் புலிகள் சார்பில் பேச்சுவார்த்தைகளில் கலந்து கொள்பவர்கள் பெயர் விபரங்கள் அறிவிக்கப்பட்ட பின்பும், அரசு சார்பில் யார் கலந்து கொள்வார்கள் என்ற அறிவிப்பு இன்னமும் தெரிவிக்கப்படவில்லை. அரசு தரப்பில் கலந்து கொள்வாரென கருதப்பட்ட முன்னாள் யாழ் அரசாங்க அதிபர் லயனல் பெர்னான்டோ திடீரென இந்தியாவுக்கு ''தனிப்பட்ட'' விஜயம் ஒன்றை மேற்கொண்டு சென்றுள்ளார். லண்டனில் நடைபெறும் மாநாடொன்றுக்கு உத்தியோக பூர்வமாக செல்லவிருந்த யாழ் அரசாங்க அதிபர் மாணிக்கவாசகரை



அங்கு செல்ல வேண்டாம், இன்றைய நிலையில் சமாதானப் பேச்சுகட்கு வசதியாக நீங்கள் இங்கேயே இருப்பது நல்லது எனப் பிரதமர் கேட்டுக் கொண்டிருக்கிறார். ஒன்றுக்கொன்று முரணான இந்த நடவடிக்கைகள் கிளப்பியுள்ள சந்தேகத்திற்கு வலுவூட்டுமாப் போல யாழ் செல்வதாக முதலில் அறிவித்த பிரதமர் தமது பயணத்தை மேற்கொள்ளாமல் விட்டு விட்டமையும் சேர்ந்து கொள்கிறது.

லண்டன் பி.பி.சிக்கு பிரபாகரன் வழங்கிய பேட்டியில் சுமுகமான பேச்சுவார்த்தைக்கு யுத்த நிறுத்தம் ஏன் அவசியம் என்று விளக்கியிருந்தார். கொழும்பிலுள்ள ஸ்திரமற்ற அரசு நிலைகாரணமாக (ஆயுதப் படை இன்னமும் ஜனாதிபதியிடமே இருப்பதால்) பேச்சுவார்த்தைக்காக தாம் கொழும்பு வருவது பாதுகாப்பற்றது என்று பாலசிங்கம் அறிவித்திருந்தார். அவர் மேலும் தனது பேட்டியில், தமிழ் பிரதேசங்களிலான அரசியல் நிர்வாக விடயங்கள், இந்திய - இலங்கை ஒப்பந்தத்தில் வழங்கப்பட்டதை விட அதிகமாக இருப்பது அவசியமெனவும் வலியுறுத்தியிருந்தார். ஆயினும் பிரபாகரனோ, அன்ரன் பாலசிங்கமோ சந்திரிகா அரசுடன் சமாதானப் பேச்சுகளை நடாத்துவதன் மூலம் ஒரு சுமுகமான சூழலை உருவாக்க முடியாது என்ற சந்தேகத்தை வெளியிடவில்லை; மாறாக நம்பிக்கையையே தெரிவித்திருக்கிறார்கள். அதேவேளை மன்னாரில் ஒரு பாரிய தாக்குதலை வெற்றிகரமாக நடாத்தியும் இருக்கிறார்கள்.

தமிழ்ப் போராளிகளை பயங்கரவாதிகளாக வர்ணித்த இலங்கை - இந்திய ஒப்பந்த அடிப்படையில் தாம் பேசப் போவதில்லை என்பதில் இருதரப்பாருமே தெளிவாக இருக்கின்றார்கள். (லயனல் பெர்ணான்டோவின் இந்திய விஜயத்துக்கும் இதற்கும் ஏதாவது தொடர்பு இருக்குமோ என்று சந்தேகப்படுவதில் நியாயமில்லாமல் இல்லை)

ஆக, மொத்தத்தில் இருதரப்பிலும் பலத்த எதிர்பார்ப்பும் நம்பிக்கைகளும் வெளியிடப்படுகின்றன. அதே வேளை செயல்களில் ஆரம்ப வேகம் குன்றிப் போய் விட்டிருக்கின்றதாக தோன்றுகின்றது; அல்லது அதற்கு நெருக்கடி தரக்கூடிய விடயங்கள் நடக்கின்றன.

கடந்த வாரப் பத்திரிகைகள் எல்லாம் இந்த விடயம் தொடர்பாக வெளிப்படுத்தியிருந்த கருத்துக்களை தொகுத்தால் இரண்டு விடயங்கள் தெளிவாகின்றன.

1. புலிகள் யுத்த நிறுத்தத்தை வலியுறுத்துகிறார்கள்.
2. இராணுவமும், அரசுத் தரப்பில் சிலரும், ஜனாதிபதியும் அது ஆபத்தானதென கருதுகின்றனர்.

ஒரு யுத்த நிறுத்தக் காலம் இரு தரப்பாருக்கும் சற்று அவகாசத்தைக் கொடுக்கும் என்பதும் இராணுவரீதியில் தம்மைத் தயார் செய்து கொள்ள இருதரப்பாருக்கும் அது வாய்ப்பானதே என்பதும், குறிப்பாக புலிகளுக்கு அது விஷேச வாய்ப்புகளைத் தந்துவிடும் என்பதுவும் உண்மை தான். ஆனால் யுத்தத்திற்கு ஏற்ற ஆயுதம் பயிற்சி உணவுப் பொருள் சேமிப்பு, திட்டமிடல் போன்ற விடயங்களை மட்டுமே கருதுகின்றவர்கள் இந்த யுத்த நிறுத்தம் புலிகளுக்கே சாதகமானதென்றும் கருதுவதில் வியப்பில்லை. உண்மையில் யுத்த நிறுத்தக் காலத்தில் நடக்கப் போகின்ற சமாதானப் பேச்சு முயற்சிகளே அதை விடச் சக்தி வாய்ந்தவை. அப்பேச்சினால் அரசியல்ரீதியாக எடுக்கப்பட்ட முடிவுகளைப் பொறுத்து இந்த தயார் படுத்தல்கள் எந்தவித அர்த்தமும் அற்றவையாகக் கூடப் போய்விடலாம்.

இராணுவ ரீதியிலான பலம் பலவீனம் மட்டுமல்ல ஒரு யுத்தத்தின் வெற்றியை தீர்மானிப்பவை- அவற்றுக்கு கணிசமான பங்கு இருந்த போதும். பரந்து பட்ட மக்களின் உணர்வு அல்லது ஆதரவு எந்தப் பக்கம் இருக்கிறது என்பதே பிரதானமான விடயமாகும். கடந்த அரசு காலத்தில் மக்களது உணர்வு நிச்சயமாக யுத்தத்திற்கு எதிரானதாகவே இருந்தது. குறிப்பாக தமிழ் மக்களைப் பொறுத்தவரை அவர்கள் இந்த யுத்தத்தை வெறுத்தார்கள்; நிராகரித்தார்கள். ஆனால் நான் இப்படி எழுதும் போது அவர்கள், புலிகள் ஆயுதங்களைப் போட்டுவிட்டு சரணடைய வேண்டுமென விரும்பினார்கள் என்று சொல்வதாக எடுத்துக் கொள்ளக்கூடாது. அவர்கள் யுத்தத்தை விரும்பவில்லை; அமைதியையும் சமாதானத்தையுமே விரும்பினார்கள்; சாவையும் அழிவையும் விரும்பவில்லை; நிம்மதியையும் கௌரவத்தையும் விரும்பினார்கள்; ஆனால் தாம் விரும்பியதை சரணாகதி மூலம் அவர்கள் பெற விரும்புவார்கள் என்று முன்னைய அரசு நம்பியது; புலிகளை ஆயுதங்களைப் போடுமாறு மக்களை நிர்ப்பந்திப்பார்கள் என்று நம்பி மக்கள் மீது பொருளாதாரத் தடையையும் விதித்தது. ஆனால் அரசு எதிர்பார்த்ததற்கு எதிர்மாறான பலனே ஏற்பட்டது. மக்கள் புலிகளை எதிர்க்கவில்லை- அப்படி யாராவது எதிர்த்தார்கள் என்றால் அது புலிகளின் பிற ஜனநாயக மறுப்பு நடவடிக்கைக்கான எதிர்ப்பாக இருந்ததேயன்றி இலங்கை அரசுடனான யுத்தத்திற்கு எதிரான எதிர்ப்பாக இருக்கவில்லை.

எனவே அரசின் நோக்கம் வெற்றி பெறவில்லை. அரசுக்கு புலிகளை அந்நியப்படுத்துவது, அழிப்பது மட்டுமே நோக்கமாக இருக்கவில்லை. தமிழ் மக்களது அரசியல் உரிமையையும் சேர்த்து நசுக்குவது நோக்கமாக இருந்தது. சரியாகச் சொல்வதானால் புலிகளை நசுக்கி விட்டால் அதைச் சாதித்து விடலாம் என்று முன்னைய அரசு கருதியது.

முன்னாள் ஜனாதிபதியுடனான பேச்சுவார்த்தையின் பின் திடீரென யுத்தம் வெடித்த போது ஏன் யுத்தம் தொடங்கியது என்பதை வெளிப்படையாக முன்வைக்காததே புலிகள் அன்று விட்ட மாபெரும் தவறாக இருந்தது. நிபந்தனையற்ற பேச்சு என்று சந்தோஷப்பட்டுக் கொண்டே இரகசியமாக பேசுவது என்ற பிரேமதாசாவின் நிபந்தனைக்கு அவர்கள் உட்பட்டுப் போனார்கள். இதன் விளைவு ஒரு நாலாண்டு கால அரசியல் நெருக்கடி நிறைந்த யுத்தமாயிற்று.

இப்போது வந்திருப்பது அடுத்த அரசியல் கட்டம்.

இராணுவ பலவீனமே புலிகளை யுத்த நிறுத்தத்துக்கு தூண்டுகிறது என்ற இராணுவவாதிகளது கண்ணோட்டமும் ஜனாதிபதித் தேர்தலே சந்திரிகாவைப் பேச்சுவார்த்தைக்கு தூண்டுகிறது என்கிற அபிப்பிராயமும் முழுமையானவையல்ல- அவற்றில் உண்மைகள் இருக்கக்கூடும் என்ற போதும்!

அதைவிட முக்கியமான உண்மை மக்கள் யுத்தத்தை வெறுக்கிறார்கள்; அமைதியை விரும்புகின்றார்கள் என்பதே. அமைதிக்கும் சமாதானத்துக்குமாக யார் முயற்சி செய்தாலும் அவர்களுக்கு மக்களது ஆதரவு கிடைக்கும் என்பதே.

ஆக, கடந்த நாலு ஆண்டுகால யுத்தத்தை விடவும் நெருக்கடியானதும் கவனமாகச் செயற்பட வேண்டியதும் தான் சமாதானப் பேச்சுவார்த்தை. இப்பேச்சுக்களின் முடிவு இருதரப்பினரதும் அரசியல் எதிர்காலத்தை தீர்மானிக்கப் போகும் ஒன்று. யாதார்த்த அரசியல் நிலைமைகளை வெளிப்படையாக ஆராய்ந்து சமாதானத்திற்கான நிலைமைகளை தோற்றுவிக்க இருதரப்பும் தயாராக இல்லாவிட்டால் தயாராக இல்லா தரப்பு மாபெரும் அரசியல் நெருக்கடியை சந்திக்க நேரிடும் என்பது வெளிப்படை.

''இது யாருடைய அரசு, உங்களதா? அவர்களதா?'' என்று ஜனநாயகவாதிகளை நோக்கி சென் இதழில் கேள்வி எழுப்பியிருந்தேன். எமது ஜனநாயக வாதிகள் கடந்த கால இலங்கை அரசியல் வரலாற்றில் சி.ல.சு.க. ஆட்சி அமைத்த போதெல்லாம் இந்த மயக்கத்துக்குள்ளாகி இருந்தார்கள். இதன் மூலம் நாட்டின் ஜனநாயக இயக்கத்துக்கு ஒரு எதிர்மறை உதாரணமாகவும் விளங்கினார்கள். காலத்துக்கு காலம் தமது ஜனநாயகக் கோரிக்கைகளின் அளவை சுருக்கி வந்துள்ளார்கள். தந்திரோபாயம், வாய்ப்பு, சாத்தியப்பாடு என்ற வார்த்தைகளால் தமது ''வீர வரலாற்றை'' மட்டுப்படுத்திக் கொண்டார்கள்.

இலங்கையில் மாறி வந்த அரசுகள் இவர்களை ஒருபோதும் கணக்கெடுத்ததில்லை. ஆனால் இவர்களைப், பின்பற்றி அவை சில நடவடிக்கைகளை செய்துதான் வந்திருக்கின்றன.

எப்படியோ இம்முறையாவது ஜனநாயகவாதிகளால் பெரிதும் ஆதரிக்கப்படுகின்ற இந்த அரசு நமது ஜனநாயகவாதிகளைப் பின்பற்றாமல் இருக்க வேண்டும் என்று எதிர்பார்ப்போம்! ஏனென்றால் நமது

→15

www.tamilarangam.net
தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



புதிய தேடல் ஒன்றினை நோக்கி...

# கொள்கரி?

— அரங்க அளிக்கை தொடர்பான குறிப்பு :

—சி.அரங்கநாதன் எம்.ஏ.



அரங்காடிகள் அமைப்பினால் கடந்த 05.08.94 அன்று கொழும்பு மிலாகிரிய மண்டபத்தில் மேடையேற்றிய கொள்கரி? எனும் அரங்க அளிக்கை தொடர்பான சில குறிப்புகள்:

கிராமம் ஒன்றில் நீண்ட காலமாக மழை இல்லை. கொடிய பஞ்சம் நிலவுகிறது. அக்கிராமத்தவரிடம் 'ராசாத்தி' என்கிற பசு சிறு வயதிலிருந்தே வளர்ந்து வருகிறது. அப்பசுவே தன் பாலால் அம்மக்களை ஊட்டி வளர்க்கிறது. மழை பெய்ய வேண்டுமெனில், நீண்ட தூரத்திலுள்ள கோயிலில் அப்பசுவைப் பலியிட வேண்டும் என ஒரு சாமியார் கூறுகிறார். அம்மக்கள் பசுவைப் பலியிடக் கொண்டு செல்கின்றனர். இடையில் அவ்வூர்ப் பெரியவர், பஞ்ச காலத்திலும் நெல்லை மக்களுக்கு வழங்காமல் பதுக்கி வைத்துள்ளார். இம்மக்கள் அதனை அறியாமல் அப்பெரியவரிடம் தமக்கு நெல் வழங்கும் படி கேட்கின்றனர். அப்பெரியவர் மறுத்து விடுகிறார்.

இவர்களது பயணம் தொடர்ந்தது. கோயிலை இன்னும் சென்றடையவில்லை. இடையில் பசி கொடூரமாக இருந்தது. ஒருவர் கூறுகிறார் 'பசுவைக் கோயிலில் கொண்டு போய் வெட்டி அதன் இறைச்சியை காக்கைகளுக்கும், பருந்துகளுக்கும் வீசுவதிலும் பார்க்க நாங்களே இங்கு வெட்டிச் சாப்பிடுவோம் என்று ' இது தொடர்பாகப் பல் வேறு கருத்துக்கள் எழுகின்றன. ஆயினும், பசு வெட்டிக் கொல்லப்பட்டு இறைச்சியைச் சமைத்துச் சாப்பிடுகிறார்கள்.

இத்துடன் நாடகம் முடிகிறது. கோயிலுக்குச் சென்று பசு பலியிடப் படவில்லை. பின்னர் மழை பெய்ததா? இல்லை ( அல்லது தெரியாது) இடையில் பசுவைக் கொன்றது சரியா? இலக்கு முக்கியமா? பசி முக்கியமா? இலக்கு அடையப் பட்டதா?

நிறைய நிறையக் கேள்விகள். இந் நாடகக் கலைஞர்கள் கேள்விகள் யாவற்றையும் பார்வையாளர்களிடையே விட்டு விட்டனர்.

நூறு நிமிடத்தாலான இந்நாடகத்தின் கதை ஏற்கனவே கூறியது போல தெளிவானது அல்ல. நாடகம் முழுமையாக நோக்குகிற போது அதன் உள்ளடக்கம் பார்வையாளர்களுக்கு தெளிவாக விளங்கியிருக்க முடியாது. ஆனால் இக் கதையை விளங்கிக் கொள்ளல் தான் நாடகத்தின் பிரதான நோக்கமல்ல.

நாடகம் குறிப்பாக இன்னொரு செய்தியைச் சொல்ல வந்திருக்கிறது. அது மூடுண்ட மறைபொருளாகவே தொடக்கத்திலிருந்து முடிவு வரையும் வெளிப்படுகிறது. மழை, ராசாத்தி, பசி, பெரியவர், இலக்கு பயணம் யாவும் குறியீடுகளாகி வேறு பொருளைச் சுட்டி நிற்கின்றன. அப்பொருள் என்ன? என்பதே பார்வையாளரைச் சூழ்ந்து நிற்கிற கேள்விகள். இவ்வாறான நாடகத்தில் மறைபொருளை மிக இலகுவாக்கி ஒன்றும் ஒன்றும் இரண்டு என்கிற மாதிரி பார்வையாளர்களுக்குக் கொடுத்து விட முடியாது. பார்வையாளர்கள் புத்திசாலிகள் எனும் எடுகோளிலிருந்தே இந்நாடகத்தை தயாரிக்க முடியும். பார்வையாளரது பார்வைக்கோணத்தில் இருந்து இதனை எப்படிப் புரிகிறாரோ அதுவே நாடகம் 'அ' விலிருந்து 'ஃ' வரை முழுமையாகப் புரிந்து கொள்ள முடியாவிடினும், அதன் பெரும் பாகத்தையாவது பார்வையாளர்கள் புரிந்து கொள்ள முடியும்.

ஆனால் இங்கு குழப்பம் என்னவென்றால், நாடகத்தை எந்தக் கோணத்திலிருந்து பார்த்தாலும் விடை சுலபமாக அவிழுவதில்லை. அது இந்நாடகத்தின் தோல்வியோ என ஐயுற வேண்டி உள்ளது.

மழை என்பது என்ன? அதுவே இலக்கு இலக்கினை விடுதலை என எடுத்துக் கொள்ளலாம். (விடுதலை என்பது தமிழீழ விடுதலையோ, நாட்டினது விடுதலையோ எதுவோ அதிகாரத்திலிருந்து விடுவித்துக் கொள்ளல்) இவ் விடுதலைக்காகத் தியாகம் செய்யப்படல் வேண்டும். இங்கு தியாகம் என்பது இருவழிகளில் செலுத்தப்படுகிறது. இலக்கிற்கான பயணம் என்பது ஒன்றாகவும், ராசாத்தியைப் (பசு) பலி கொடுத்தல் என்பது மற்றதாகவும் உள்ளது. அதாவது தியாகம் என்பது அதிக உழைப்பையும் தேவைப்படுகின்ற போது உயிரையும் வேண்டி நிற்கிறது. பெரியவர் என்பது பிற்போக்கான அதிகாரத்தின் சின்னமாக நிற்கிறார். இடையில் பைத்தியக்காரன் வருகிறான். அவன் இம் மக்களுக்கு விடுதலை பெற்றுத் தருவதாகக் கூறுகிறான். ஆனால் பெரியவரிடம் அதிகாரத்தின் முன் அவன் அஞ்சி ஒடுங்குகிறான். ஒடித்தப்புகிறான்.

இடையில் இலக்கு பற்றிய பிரச்சினையில்லாத ஒரு சிலரின் அவசர நாட்டம் காரணமாக இலக்கை அடையுமுன்னர் பசு கொல்லப்படுகிறது. அதாவது உயிர்த் தியாகம் செய்யப்பட்டிருக்கிறது. வீணாக இத்தியாகத்தால் எப்பலனும் ஏற்படப் போவதில்லை. ஏற்படவுமில்லை.

நாடகம் முடிகிறபோது ஒருவர் கூறுகிறார். மற்றவர்கள் திருப்பிக் கூறுகிறார்கள் ''ஆறெண்டாலும் இந்த நிலைமையிலை இருந்தால் இதைத் தான் செய்திருப்பினம்'' இன்னொருவர் கூறுகிறார் '' இல்லை, நாங்கள் செய்யமாட்டோம்'' இவ்வாறு இவர்கள் ஒருகையால் கண்ணை மூடியபடியும், மறுகையால் மனச்சாட்சியை அடக்கியபடியும் கூறுகிறார்கள்.

பசு கொல்லப்பட்டு விட்டது. தன் இலக்கை அடையமுன், விளைவு கிடைக்குமுன் பசு கொல்லப்பட்டு விட்டது. இது சரியா? நியாயமானதா? எப்போதோ பெய்யப் போகிற மழையா? அல்லது அந்நேரத்துப் பசியா? எது முக்கியம்?

இது கொலை. அப்படியாயின், கோயிலில் கொண்டு போய் பலியிடப்பட்டிருந்தால் அது கொலை இல்லையா? அங்கு கொல்லப் பட்டிருந்தால் இலக்கு அடையப்பட்டிருக்கலாம் எனும் விளைவு உண்டு. ஆனால் அது எந்தளவுக்குச் சாத்தியம்? முன்னர் கேட்ட கேள்வி தான் மீண்டும் எப்போதோ பெய்யப் போகிற மழையா? அல்லது அந்நேரத்துப் பசியா? எது முக்கியம்?

அரங்கக் கலைஞர்கள் ஒன்றுக்கும் பதில் சொல்கிறார்கள் இல்லை. வினாக்களைப் பார்வையாளர்களிடமே திருப்பி விடுகிறார்கள். பார்வையாளர்கள் வினாக்களுக்கான விடையைக் கொடுக்கிற அளவு பயிற்றப்பட்டவர்களாக இல்லை. அல்லது வினாக்களையே எதிர் கொள்ளத் தயாராக இல்லை. அந்த வகையில் அரங்க அளிக்கை என்கிற அளவில் தோல்வி என்று கூற முடியாவிடினும் இலக்குப் பார்வையாளர்களை (target audience) இவ்வளிக்கை கொண்டிருக்கத் தவறி விடுகிறதோ எனும் கேள்வி எழாமலுமில்லை.

மேற்கூறிய கதைப்போக்கிலிருந்து இவ்வளிக்கை எதனைக் கூற வந்துள்ளது என்பதனை ஊகித்து விடலாம். ஈழத்துத் தமிழ்த் தேசிய விடுதலைப் போராட்ட வரலாற்றை ஊன்றிக் கவனிப்பவர்களுக்கும், இந்நாடகத்தை அரங்க அனுபவமாகப் பகிர்ந்து கொண்டவர்களுக்கும் அது ஒன்றும் கடினமான காரியமல்ல. இக்கட்டான (Critical) அரசியல் கருத்தைக் கொண்டுள்ள அரங்க அளிக்கைகள் அரசினது தணிக்கையை மீறி பார்வையாளரைச் சென்றடைய வேண்டுமாயின், மறைபொருளை, சூசகமாக, குறியீட்டுப் பாங்காகத் தனது கருத்துக்களைக் கொண்டிருத்தல் அவசியம்.

ஆனால், அரசியல், அரங்க நிகழ்வுகளில் ஆர்வம் கொண்டோர்க்கும் ஒன்றும் புலப்படாத அளவு மறைபொருளாக அமைய வேண்டுமா? எனும் வினா எழுகிறது. மறைபொருள் குறியீட்டுப் பாங்கானது. ஆனால் ஒரு குறியீடு எப்போதும் ஒருபொருளை அல்லது அப்பொருள் சார்ந்துள்ளவற்றையே குறியிட்டு நிற்கும். இங்கு எதைக் குறித்து நிற்கின்றது என குறியீட்டை நோக்கும் போது குழப்பம் தான் எஞ்சுகிறது. உதாரணமாக, ஒருவன் பசுவைக் கொல்கிறான். அவன் பசுவைக் கொல்வதற்குப் பலர் தூண்டியாக நிற்கின்றனர். அவன் சூழலின் நிர்ப்பந்தத்தால் செய்த கொலை அது. சரி, அந்த 'ஒருவன்' யார்? எதன் குறியீடு? மூளையைப் போட்டுத் தூண்டித் துருவி அலசினாலும் ஒன்றும் வெளிப்படுகிறதில்லை. அவன் ஒரு அமைப்பா? அல்லது அவ்வமைப்பின் தனி நபரா?

இது மாத்திரமல்ல. வேறு சில குறியீடுகளிலும் இத்தகைய குழப்பம் எஞ்சுகிறது. இடையில் வாளுடன் வந்த பைத்தியக்காரன் யார்? எதன் குறியீடு? முப்பரிமாணப் பொருள் போல பல பரிமாணங்களைக் காட்டி நிற்கிறது பைத்தியக்காரன் பாத்திரம். பெரியவர் பாத்திரம் தெளிவாக விளக்கம் கொடுத்த போதிலும் இடையிடை மயக்கத்தையும் கொடுத்து நிற்கிறது. '' என்னை அண்டிப் படருங்கோ. தனியப் படர வெளிக்கிட்டியளோ? ...'' எனப் பெரியவர் பாத்திரம் அதட்டுகிற போது தெட்டெனத் தெளிவானாலும், '' உங்களைச் சாக விடமாட்டேன் நீங்கள் இருந்தால் தான் உங்களுக்கை ஒளிக்கலாம்'' எனப் பேசுகிற போது அது நகர்ப்புறக் கொரில்லாவை ஞாபகமூட்டுகிறது. இன்னுஞ் சில அவ்வாறே.

குறியீடு தெளிவற்றிருக்கலாம். அல்லது பார்வையாளர்களுக்கு விளங்காமற் போகலாம். ஆனால் ஒரு குறியீடு இரு பரிமாணம், முப்பரிமாணத்தைக் கொண்டமையக் கூடாது. அது அரங்கை அளிக்கையை தோல்வியை நோக்கி நகர்த்தி விடும். ஒரு குறியீடு எப்போதும் ஒன்றையே சுட்டி நிற்க வேண்டும். இது முக்கியமானது என்றும் கருதுகிறேன்.

இவ்வாறான வினாக்களை, குறைகளைக் கூறுவதனால், இவ்வரங்க அளிக்கை தோல்வி என்று ஆகிவிடுமா? அதுதான் இல்லை. 'கொள்கரி' நாடகத்தையிட்டு அரங்காடிகள் பெருமைப்படுவதற்கு நிறைய சந்தர்ப்பம் உண்டு. கொழும்பு மாநகரம். இத்தகைய பரிசோதனை முயற்சியை இது வரை கண்டிருக்க முடியாது. இன்றைய காலங்களில் தாசீசியஸ், சுந்தரலிங்கம், பாலேந்திரா, சுபைர் ஹமீட், மௌனகுரு போன்றோரின் அரங்க முயற்சிகள் பரிசோதனை முயற்சியாக அமைந்த போதிலும் அவை ஒன்றுடன் ஒன்று தொடர்பு பட்டனவாக அமைந்தன. இவர்களது பரிசோதனை முயற்சிகள் வெவ்வேறு பரிமாணங்களைக் கொண்டிருந்த போதும் ஒன்றிலிருந்து கிளைத்தவையாகவும் கூட அதனைக் கொள்ள முடியும். இங்கு அரங்காடிகளுக்கு இது புதிய பரிசோதனை முயற்சியாக அமைந்து வெற்றியைக் கொடுக்கிறது. கொழும்பு மாநகருக்கு இந்நாடகம் அதிர்ச்சி, அரங்காடிகள் பெருமைப்படுவதற்கு இது ஒரு சந்தர்ப்பம்.

இதுவரையான அரங்காடிகளின் அரங்க அளிக்கைகள் ( இப்போதைக்கேதுவழி, அபசரம், பொறுத்தது போதும், முயலார் முயல்கிறார், கோடை) யாவும் ஏற்கனவே மேடையிடப்பட்டவை. அவ்வகையிலும் அரங்காடிகளின் முதலாவது படைப்பாக இதனைக் கொள்ளலாம்.

ஓரிருவர் தவிர அனைவரும் இவ்வரங்க அளிக்கையின் சிறப்புக்கு வலு சேர்த்துள்ளார்கள். சிற்சில பிசிறல்களும் உண்டு. வசனத்தைக் கோரலாகக் கூறுகிறபோது வசனம் தெளிவாகப் பார்வையாளர்களைச் சென்றடைய வில்லை. பயிற்சிப் பட்டறையில் (drama and theatre work shop) முகிழ்ந்த பரிசோதனை முயற்சி இதுவென அரங்காடிகள் அறிவித்த போதிலும் 'உடல்மொழி' (body language) பூரணமானதாக வில்லை. நடிகர்கள் பெரும்பாலானோரின் ஈர்க்குச்சி போன்ற உடல் அதற்கு வளைந்து கொடுத்திருக்கக் கூடியது எனினும் அதில் அவ்வளவு கவனம் செலுத்தப்பட வில்லை. ஆனால் நடிகர்கள் நாடகத்தின் இடையிடையே நிறையக் களைத்திருந்தார்கள். நடிகர்களிடம் காணப்பட்ட இன்னொரு குறைபாடு பார்வையாளர்களுடன் நேரடியாக உரையாடுவது போல தமது சொல்லாடலை (dialogue) நிகழ்த்தியது. தம்மை ஒரு பாத்திரமாக அவர்கள் கருதவில்லை. பெரியவர், பைத்தியக்காரன், பசு இம்மூவரையும் தவிர மற்றையோர் அவ்வாறே அமைந்தனர். சில சந்தர்ப்பங்களில் நெறியாளர் அதனைத் தான் நடிகர்களிடம் எதிர்பார்த்திருந்தாரோ தெரியாது.

இவ்வரங்கு புதிதளித்தல் (improvization) என்கிற அளவிலும் தோல்வி அல்ல எனக் கூறலாம். நடிகர்கள் இன்ன பாத்திரங்கள் எனச் சுட்டிப்பாகக் கூற முடிய வில்லை. ஒரு கருத்தை முன்வைக்கிற நடிகர் ஐந்து நிமிடத்தின் பின் அதே கருத்தை மறுத்து இன்னொரு பாத்திரமாகுவர். இது குழப்பமாகக் கூட இல்லை. நடிகர் எனத் தனிநபராக நோக்காது கலைஞர்கள் எனக் குழுவாகவே இதனை நோக்க முடிந்தது. சொல்லாடலும் (dialogue) கலைஞர்களின் சொந்த ஆக்கமாக இருந்தது. இதுகலைஞர்களையும் பார்வையாளர்களையும் சுதந்திர உணர்வுடன் ஒன்றிப் போக வைத்தது. இது தளை நீக்கத்துக்கான அரங்காகக் கூட (theatre for Liberation) மாறலாம். இசை, ஒளி, இன்னாவித அம்சங்களிலும் இன்னும் கவனம் செலுத்தலாம். பெண் கலைஞர்கள் அரங்காடிகளுக்கு கிடைக்காமலா போய் விட்டார்கள்?

கொள்கரி? அரங்காடிகள் மேலும் ஒரு வெற்றியைச் சமைத்திருக்கிறார்கள். (ஒரு சிக்கலான அரசியல் பிரச்சினையை அரங்காக்கியதன் மூலம்)

www.tamilarangam.net



## பேச்சுக்கு முயற்சி...

ஜனநாயகவாதிகள் வெறுமனே சொல்பவர்கள்; செய்பவர்கள் அல்ல! இங்குள்ள அரசை ஆதரிக்கும் பெரும்பாலான ஜனநாயகவாதிகள் தாமே மக்களது அரசியல் உரிமைக்கான பிரதிநிதிகள் என்று மனசார நம்புபவர்கள். இதனால் தாம் செய்பவையெல்லாம் மக்களது நலனின் பாற்பட்டவையென்று நம்புபவர்கள். ஆகவே தமது நடவடிக்கைகள் எவையும் பரிசீலிக்கப்பட வேண்டியவை என்றோ பிற சமூக வர்க்கங்கள் எப்படி இவற்றை நோக்குமென்று ஆராயவோ தேவையில்லை என்று கருதி விடுகின்றனர். மாபெரும் புரட்சி நடக்கப்போவதாக கனவு காண்கின்றனர். அதற்காக வாய் கிழியக் கத்துகின்றனர். கத்தியபடியே ஒரு அரசியல் நெருக்கடியை ஏற்படுத்த முயல்கின்றனர்.

இவற்றின் மூலமாக தாம் சொன்னவற்றை செயலில் நடாத்திக் காட்ட வேண்டிய பரிதாபமான நிலைக்கு தங்களைக் கொண்டு வந்து சேர்த்த பிறகு அதைத் தெளிவற்ற உறுதியற்ற முறையிலேயே செய்கிறார்கள். அதிலும் குறிக்கோளை நிறைவேற்றக் கூடிய நிகழ்ச்சியான வழிமுறைகளை ஒதுக்கி விட்டு தாங்கள் தோற்றுப் போவதற்கான சாக்குப் போக்குகளை கண்டுபிடிக்க முயன்று கொண்டே செயற்படுகிறார்கள். அவர்களது முழக்கங்கள் எல்லாம் செயலில் செய்து காட்டப்பட வேண்டிய தருணத்தில் வெறும் முணுமுணுப்புகளாகி விடுகின்றன.

''நாட்டில் சமாதானம் நிலவ அரசியல் தீர்வு வேண்டும்'' என்று அறிவித்த புதிய அரசிடம் இந்தக் கணம் வரை எந்தத் தீர்வும் கையிலில்லை. பேச்சுவார்த்தை, சமாதான முயற்சிகளின் போதும் இதே நிலையைத்தான் அது சொல்லப்போகிறதா என்பது தெரியவில்லை.

காலத்தைக் கடத்துவதற்காகவே பேச்சுவார்த்தைக்கு முயல்வதாக ஜனாதிபதித் தேர்தல், ஒரு ஸ்திர ஆட்சி என்பவற்றுக்காகவே அது பேச முயல்வதாக அதற்குப் பிறகு பேச்சுவார்த்தையை முறியடிக்க சாக்குப் போக்கு காணவே அது முயலும் என்பதாக நிகழ்ச்சிகள் மாறிப் போகாமல் இருக்க வேண்டுமானால் புதிய அரசு தான் விரும்புவதாகக் கூறும் விடயங்களைச் சாதிக்க நிச்சயமான வழிமுறைகளை கடைப்பிடிக்க வேண்டும். அதற்கு ஆதரவாக பரந்து பட்ட மக்களது ஆதரவைத் திரட்ட வேண்டும்.

பண்டா - செல்வா ஒப்பந்தம், டட்லி - செல்வா ஒப்பந்தம், இந்திய - இலங்கை ஒப்பந்தம் என்று ஒப்பந்தங்கள் பயனற்று தோல்வியடைந்து போனதற்கு ஒரு வரலாறே உண்டு. இந்த ஒப்பந்தங்களை உருவாக்கியவர்கள் அவை நடைமுறையில் தோல்வியடைவதைப் பார்த்து திருப்திப் பட்டுக் கொண்டார்கள்- அவை தம்மையும் மீறி நடப்பதாக கூறிக்கொண்டே! ஒப்பந்தங்களை நடைமுறைப்படுத்த எவைகளையெல்லாம் செய்ய வேண்டுமோ அவற்றை ஒதுக்கி வைத்து விட்டு அது தோல்வியடைவதற்கான செயல்களிலேயே ஈடுபட்டார்கள்- நமது ஜனநாயக வாதிகளைப் பின்பற்றினார்கள்.

சரியாகச் சொல்வதானால் தாம் செய்தவற்றை ஜனநாயகவாதிகள் நம்பக் கூடிய விதத்தில் அவர்களது இயல்புக்கு பொருத்தமான விதத்தில் செய்து காட்டினார்கள்.

சந்திரிகா அரசு எப்படி செயற்படப் போகிறது? அது எப்படி செயற்படும் என்பதற்கு இனிவரவுள்ள ஒரு சில மாதங்கள் தெளிவான பதிலை சொல்லிவிடும்!

## அம்பாறை...

உள்ளது. மற்றவர்களுக்கு வாய் வீச்சு மட்டுமே உள்ளது என்பது இங்குள்ள சிலரின் கருத்து.

''இவ்வளவு காலமும் தரகர், முகவர் காணியில் நடத்தி வந்த அரசியலையே இன்றைய தமிழ், முஸ்லீம் மக்களின் தலைமைகளும் பின்பற்றுகின்றன.....''

''கிழக்கின் நிலைமைகளுக்கு புலிகளின் தலைமையும் ஒரு காரணம். ஏனெனில் கிழக்கின் புலிகளது தலைமைகள் உணர்ச்சிவசப்படாமலும், சந்தர்ப்பத்திற்கு ஏற்ப மாறாமலும் இருந்திருந்தால், பல நிலைமைகளை சுமூகமாகத் தீர்த்திருக்கலாம்.....''

''சிங்களக் குடியேற்றம் எப்படி நடைபெறுகின்றது என்று வெளிப்படையாகச் சில நேரம் தெரியாதிருக்கின்றது. ஆனால் ஆண்டுதோறும் சிங்கள மக்களின் எண்ணிக்கை மட்டும் அதிகரித்துக் கொண்டு போகின்றது.....'' அங்குள்ள சிலர் தயக்கத்துடன் முணுமுணுத்த வார்த்தைகள் இது.

### பாதிக்கப்பட்ட பிரதேச மல்ல:

இம் மாவட்டமானது அமைச்சர் தயாரத்னவின் முயற்சியால், புனர்வாழ்வு புனரமைப்பு அமைச்சினால் பாதிக்கப்பட் பிரதேசமாக ஏற்றுக் கொள்ளப்படவில்லை. அதனால் மற்ற வடக்கு கிழக்கு மாகாணங்களைப் போன்றல்லாது இங்கு அரசசார்பற்ற நிறுவனங்கள் எந்த உதவியையும் செய்ய முன்வருவதில்லை.

அமைச்சருக்கோ, தான் அமைச்சராக இருக்கும் பிரதேசத்தை பாதிக்கப்பட்ட பிரதேசமாக எப்படி ஏற்றுக் கொள்வது என்ற கௌரவப் பிரச்சினை

மக்களுக்கோ, நிவாரணம் கிடைக்காதா என்ற ஏக்கம்!

## சிலுவை வீடு..

அடம் பிடித்தார்கள். நான் மறு அடம் பிடித்தேன். அவர்கள் தற்காலிகமாக என்னை விட்டுவிட்டார்கள்.

எனது மீசை தனக்கு வெறுப்பூட்டுகிறது என்று முதியவரின் மூத்தமகள் என்னிடம் சொல்ல, அதுபற்றிச் செய்வதற்கு. எதுவுமில்லை என்று நான் பதில்கூற, இதை அவதானித்த முதியவர் தனது நீண்ட பொன்னிறத் தாடியை வருடியபடி, ''நீ கடுமையான இதயத்தைக் கொண்டிருத்தலாகாது'' என்று எச்சரிக்கையாகவோ அல்லது அறிவுரையாகவோ எனக்குச் சொன்னார்.

நான் இப்போது அணிந்து திரியும் காலணி அவர்கள் அன்பளிப்புச் செய்தது என்பதை நான் நினைவில் வைத்திருப்பதில்லையென முதியவரின் இன்னொரு மகள் குற்றஞ் சாட்டினாள்

சில நாட்களின் பின்னர் எனது இடதுகையில் ஆழமான வெட்டுக்காயம் ஒன்று இருப்பதை அவதானித்தேன். அது எவ்வாறு ஏற்பட்டது என்பதை ஊகிப்பது கஷ்டமாக இருந்தது.

அந்த மர்மமான சம்பவத்தின் பின்னர் எனது குரல் தேய்ந்தும், உயரம் குறைந்து செல்கிறதுமான விநோதமான அனுபவம் ஒன்று எனக்கு ஏற்படலாயிற்று. எனது குரல் எனக்கே அபூர்வமாகத்தான் கேட்டது.

எனது உயரம் குறைந்துகொண்டே போவதை தடுத்து நிறுத்தும் உபாயத்தை தேடியலைவதே என் வேலையாயிற்று. புல், பூண்டுகளின் உயரத்திற்கு குறைந்துபோய் விடுவேனோ என்ற பயம் மனதில் குடிகொண்டிருக்க, அவ்வீட்டில் நான் அச்சத்துடன் உலாவி வந்தேன்.

முதியவரிடமோ அல்லது மற்றவர்களிடமோ என்னால் குறிப்பான எந்த மாறுதலையும் அவதானிக்க முடியவில்லை. ஆனால் அவர்களுக்கு என்னில் கரிசனை உண்டு என்பதுபோல் பாவனை செய்தார்கள்.

பெரிய படிக்கட்டுகளில் அவர்கள் என்னை கைதூக்கி ஏற்றிவிட்டார்கள். சில வேளைகளில், குறிப்பிட்ட படிக்கட்டுகளில் என்னால் தனியாக ஏறமுடிகிறதா என்று விஷமத்துடன் பார்த்துக் கொண்டு நின்றார்கள். நான் கதைக்கும் போது காதை என் வாயருகே வைத்து உன்னிப்பாக்க் கேட்டார்கள். எனக்கு தாங்கள் மிகவும் உதவுவதாக நினைத்து திருப்தியும் சந்தோஷமும் அடைந்தார்கள்.

என்னால் இனிப்பாட முடியுமென்றும், நாடகங்களில் நடிக்க முடியுமென்றும் நான் நம்பவேண்டுமென்று அறிவுரை சொன்னார்கள். எனது குழப்பம் அதிகரித்ததேயன்றி தெளிவதாக இல்லை.

ஒருமுறை, நான் அவ்வீட்டின் பிரதான கதவருகே சென்ற போது, அங்கு முதியவர் நின்று கொண்டிருந்தார். அவர் என்னைப்பார்த்து மர்மச் சிரிப்பொன்றை உதிர்த்தார். இரண்டு விழிகளையும் எட்டுத்திசைகளிலும் உருட்டினார். பின்னர், உதட்டில் சிரிப்பு மாறாதிருக்க கண்சிமிட்டியவாறு என்னையும், நான் கடந்து வந்த மதிற்பகுதியையும் மாறி மாறிப் பார்த்தார். எனக்கு ஏதோ புரியத்தொடங்கியது.

என் பயணத்தைத் தொடரக் காரணமாயிருந்த அந்த அடையாளந் தெரியாத அவசியமும், இனம் புரியாத உந்துதலும் மீண்டும் என் நெஞ்சில் எழுந்து என்னை உள்ளே தள்ள, நான் ஓடிச்சென்று என் படுக்கையில் விழுந்து, போர்வையால் என்னை மூடிக் கொண்டேன். பயமும், திகிலும் என்னைச் சூழ்ந்து கொண்டன. உடம்பெங்கும் வியர்வை பெருகுவதை இறுதியாக அவதானித்தேன். பின்னர் உறங்கிப் போய்விட்டேன்.

அடுத்தநாட்காலையில் முதியவரின் அந்த விஷமக்காரச் சிறுமி ஒரு சித்திரத்தைக் கொண்டு வந்து என்னிடம் நீட்டினாள். அதில் வெளவால் ஒன்று வரையப்பட்டிருந்தது.

'கடந்த இதழில் ஜனநாயக சக்திகளின் ஒருங்கிணைவே இன்றைய தேவை' என்ற தலைப்பிலான கட்டுரையின் இறுதிப்பகுதி தவறுதலாக விடுபட்டு விட்டது. இத்தவறினால் ஏற்பட்ட அசௌகரியங்களுக்காக கட்டுரையாளர் ச.பாலகிருஷ்ணன் அவர்களிடமும், வாசகர்களிடமும் மன்னிப்புக் கோருகிறோம். விடுபட்ட இறுதிப்பகுதி இங்கே பிரசுரமாகிறது'.ஆ-ர்

## ஜனநாயக சக்திகளின் ஒருங்கிணைவே இன்றைய தேவை!

### தேர்தலுக்கு பிந்திய நடைமுறைகள்

இதுவரை காலமும் கட்சி அரசியலுடன் தம்மை இனம்காட்டிக் கொள்ளாத இந்நாட்டின் புத்தி ஜீவிகள், எழுத்தாளர்கள், கலைஞர்கள், தொழிற்துறை நிபுணர்கள் போன்ற பலதரப்பட்ட மக்கள் பிரிவினர் ஐ.தே.கட்சியை தோல்வியுறச் செய்வதற்கே பொ.ஜ.ஐ.முன்னணியை சார்ந்து செயற்பட்டனர். பொ.ஜ.ஐ.முன்னணியுடைய தாராள ஜனநாயகம் சார்ந்த நிலைப்பாடும் ஜனநாயகத்தை மீள்விப்பதற்கான உறுதிமொழியுமே இவர்களின் இப்பங்களிப்பிற்கு காரணமாக அமைந்தது. பொ.ஜ.ஐ.முன்னணி தேர்தல் காலங்களில் கூறியது போலவே ஆட்சிக்கு தெரிவாகிய பின்பும் யுத்தத்தை நிறுத்துவது உட்பட சகல ஜனநாயக விரோத நடைமுறைகளையும் முறியடித்து இந்நாட்டில் ஜனநாயக ஆட்சியையும் சமாதானத்தையும் நிலைநாட்டப் பாடுபடப்போவதாக தொடர்ந்தும் வாக்குறுதி அளித்து அவற்றுக்கான ஆக்க பூர்வமான நடைமுறைகளில் இறங்கி இருப்பதையும் காணக்கூடியதாக இருக்கின்றது. இலங்கையில் மறுக்கப்பட்டு வந்த இன சமத்துவத்தையும் சிறுபான்மையினர் சுய கௌரவத்தையும் மீண்டும் நிலைநாட்டவும் ஜனநாயக ரீதியான ஆட்சியை நிலைநாட்டவும் மேற்கொள்ளப்பட வேண்டிய நடவடிக்கைகள் இலங்கையின் இரு பிரதான கட்சி அரசியலோடு சார்ந்துள்ள ஒரு விடயமாகும். மேற்கூறிய பிரச்சினைகளுக்கு தீர்வு காண வேண்டிய நடைமுறைகளை முன்னெடுத்து செல்வதற்கான ஒரு மூன்றாவது மாற்று சக்தி இலங்கையின் அரசியலில் இல்லாமையினால் இந்த இரு கட்சிகளில் எது சிறந்தது என ஒப்பீட்டு ரீதியாக தெரிவு செய்து ஆதரவை வழங்க வேண்டிய நிலைமை அரசியல் கட்சி சாராத ஜனநாயக சக்திகளுக்கு ஏற்பட்டுள்ளது.

இலங்கையின் சமகால அரசியலை நாம் நோக்கும் பொழுது ஜனநாயகத்துக்கான கடமைப்பாட்டை வலியுறுத்தி நிற்கின்ற பொ.ஜ.ஐ.முன்னணியை ஆதரித்து பலப்படுத்தி ஜனநாயகம் தொடர்பாக அவர்கள் முன்வைத்த வாக்குறுதிகளை செயற்படுத்துவதற்கு தேவையான அரசியல் சூழ்நிலைகளை ஏற்படுத்துவதும், அத்தகைய நடைமுறைகளுக்கு எதிராக செயற்படக் கூடிய இனவாத பிற்போக்குவாத, சந்தர்ப்பவாத சக்திகளின் செயற்பாடுகளை இனம் கண்டு முறியடிப்பதற்குமான பலமான சக்தியாக இலங்கை சமூகத்தின் பல பிரிவுகளிலும் காணப்படுகின்ற ஜனநாயக சக்திகள் ஒருங்கிணைந்த பலமான மக்கள் இயக்கம் ஒனறை ஏற்படுத்துவது தாமதிக்க முடியாத உடனடித்தேவையாகும்.

சபாலகிருஷ்ணன்

## ஸ்ரீபாத...

1) பெருந் தோட்ட தமிழ் பாடசாலைகளுக்கு உடனடியாக் ஆசிரியர்கள் நியமிக்கப்பட வேண்டும். அல்லது அப்பகுதி வாரியாகவுள்ள பாடசாலைகளுக்கு அவ்வவ்பகுதியில் உள்ள கல்வித் தகைமைப் பெற்றவர்களை தெரிவு செய்து ஆசிரியர்களாக நியமித்து பாடசாலைகளில் நிலவியுள்ள ஆசிரியர் பற்றாக்குறையைப் போக்க துரித நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும்.

2) தற்போது கல்வி கற்கும் ஆசிரியர்களுக்கு ஓர் திட்டத்தின் கீழ் அவர்களின் கல்விசார் தகைமைகளைக் கூட்டுவதற்கு வகை செய்யப்பட வேண்டும்.

3) பாடசாலைகளுக்குத் தேவையான பௌதீக வளங்களை தாமதமின்றி வழங்கி ஊக்குவிக்க வேண்டும்.

4) ஸ்ரீபாத கல்விக் கல்லூரியின் நிர்வாக சீர்கேட்டை சீர் செய்து, இக் கல்லூரி ஸ்தாபிக்கப்பட்டதன் நோக்கத்திற்கேற்ப செயல்பட்டு அதாவது, தொடர்ச்சியாக இக்கல்லூரிக்கு மாணவர்கள் சேர்க்கப்பட்டு, ப்யிற்சி அளிக்கப்பட்டு, அவர்களை ஆசிரியர் சேவையில் ஈடுபடுத்தி, மலையகத்தில் நிலவியுள்ள ஆசிரியர் பற்றாக்குறையை போக்க ஒத்துழைப்பு நல்க வகை செய்யப்பட வேண்டும்.

மேற்குறிப்பிட்ட நடவடிக்கைகளுக்கு அமைய செயல்படுவதன் மூலம் பெருந் தோட்டப் பாடசாலைகளில் நிலவியுள்ள ஆசிரியர் பற்றாக்குறை முழுமையாக தீர்க்கப்படா விட்டாலும், ஆசிரியர்கள் தெரிவில் ஏற்படும் தட்டுப்பாட்டையும், கல்வி போதிப்பதில் ஏற்படும் கால தாமதத்தையும் தவிர்க்கவும் குறிப்பிட்ட நடவடிக்கைகள் பேருதவியாக அமையும்.

ஆகவே இத்தகைய நடவடிக்கைகளை மேற்கொள்வதன் மூலம் மத்திய மாகாணத்தில் மாத்திரமல்ல, பெருந் தோட்டத்தைச் சேர்ந்த சகல பாடசாலைகளிலும் நிலவியுள்ள ஆசிரியர் பற்றாக்குறையைப் போக்க முடியும். இதற்கு அந்தந்த பகுதி பிரதேச - மாகாணசபைகள் மூலமாக நடவடிக்கைகளை மேற்கொள்ள முன்வர வேண்டும். இல்லையேல், மலையக தமிழ் பாடசாலைகளின் கல்வி முன்னேற்றம் வீழ்ச்சியடையும் அபாய நிலையை தடுக்க முடியாமல் போய்விடும்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

## பொகவந்தலாவ வேலைநிறுத்தம் :

# காலை வாரும் தொழிற்சங்கங்கள்?

''நாங்க ஸ்டிரைக் செய்யச் சொன்னமா? வேற எங்கயாவது போய் பேசுங்க. வயிறு காஞ்சா தெரியும்டா, வயிற தடவிக்கிட்டு வீட்டுல இருந்து பாருங்க தெரியும்'' இவ்வாறு இ.தொ.கா தொழிற் சங்க பிரதிநிதி, கோர்கஸ் வோல்ட் தோட்டத் தொழிலாளர்களின் வேலைநிறுத்த போராட்டத்தில் ஈடுபட்ட தொழிலாளர்களுக்கு கூறி வேலை நிறுத்தத்தை கைவிடுமாறு நிர்ப்பந்தித்துள்ளார்.

பொகவந்தலாவ 'கோர்கஸ் வோல்ட்' (லெட்சுமி தோட்டம்) தோட்டத்தில் 2500க்கும் மேற்பட்ட தொழிலாளர்கள் தங்கள் கோரிக்கைகளுக்காக வேலைநிறுத்த போராட்டத்தை நடத்திய போது மேற்படி சம்பவம் நடைபெற்றது.

நீண்ட காலமாக தொழிலாளர்களால் முன்வைக்கப்பட்டு தீர்க்கப்படாத 23 அம்ச கோரிக்கைகளை முன்வைத்தே இவ்வேலை நிறுத்தம் நடந்தது.

வேலைப்பளு அதிகரிப்பு, சம்பளக் குறைவு, கொடுப்பனவுகள் இழுத்தடிப்பு என்பனவே பிரதானமான கோரிக்கையாக அடங்கியிருந்தன. இது தொடர்பாக முதலில் செப்டம்பர் 5ம் திகதி இத் தொழிலாளர்கள் வேலை நிறுத்தம் செய்ய தொடங்கினர். அதற்கிடையில் செப்டம்பர் 7ம் திகதி ஹட்டன் தொழில் ஆணையாளர் முன்னிலையில் நிர்வாகமும் தொழிற்சங்கங்களும் பேச்சுவார்த்தை நடத்துவதாகக் கூறி ஆசுவாசப்படுத்தினர். ஆனால் அப்பேச்சுவார்த்தை தோல்வி கண்டதையடுத்து செப்.12 ஆம் திகதிக்கு இன்னொரு பேச்சுவார்தை ஏற்பாடாகியிருந்தது. அதுவும் தோல்வி கண்டது. தொழிற்சங்கங்களோ மௌனமாக இருக்கத் தொடங்கின. வேறு வழியின்றி தொழிலாளர்கள் தாங்களே ஒன்றுபட்டு வேலை நிறுத்தத்தில் ஈடுபடத் துணிந்தனர். இந்த வேலை நிறுத்தத்தை பெண்கள் முன்னணியில் நின்று நடத்தியது குறிப்பிடத்தக்கது.

செப்.12ம் திகதி பேச்சுவார்த்தை முறிந்தவுடனேயே பெண்கள் தலைமையிலான அணி ஒன்று (து.லட்சுமி, செபமாலை பூபதி, தனலட்சுமி, கனகேஸ்வரி, காளியம்மா ஆகியோர் தலைமையில்) தேயிலை தோழிற்சாலைக்கு விரைந்து அங்கிருந்த 22,000 கிலோ பச்சைக் கொழுந்தை பதப்படுத்த விடாமல் தடுக்கத் தொடங்கினர். இரவு பகலாக மூன்று நாட்கள் இதனைத் தடுத்து வைத்திருந்தனர்.

செப்.13 ஆம் திகதியிலிருந்து லட்சுமி தோட்டத்தின் ஐந்து டிவிஷன்களை சேர்ந்த 2500க்கும் மேற்பட்ட தொழிலாளர்கள் வேலை நிறுத்தத்தில் இறங்கினர். இதனைத் தொடர்ந்து மீண்டும் செப்.14ஆம் திகதி தொழில் ஆணையாளர் முன்னிலையில் பேச்சுவார்த்தையொன்று நடத்தப்பட்ட போதும் நிர்வாகம் ஒரு சொட்டு தானும் உடன்பாடில்லாமல் போகவே வேலை நிறுத்தம் தொடர்ந்தது. தொழிற்சங்கங்களோ தொழிலாளர்கள் மீது பாய்ந்தன. வேலை நிறுத்தத்துக்கு அவர்கள் ஒத்துழைக்க பின்வாங்கினர். உடனேயே ஏனைய தொழிலாளர்கள் வேலை நிறுத்தத்துக்கு தலைமை தாங்குவதற்கு து.லட்சுமி(45) என்பவரை தலைவியாகத் தெரிவு செய்து அவர் தலைமையில் வேலைநிறுத்தப் போராட்டத்தினை தொடர்ந்தனர்.

எதிர்பாராதவிதமாக செப்.14ம் திகதி இரவு 7.00 மணிக்கு தோட்ட உதவி அத்தியட்சகர்கள் மூன்று பேர் தொழிலாளர்களிடம் அகப்படவே, பெண்கள் மற்றும் இளைஞர்கள் அவர்களை கொண்டு போய் தோட்ட தொழிலாளர்களின் அறையையொத்த 8X8அடி காம்பரா ஒன்றில் அடைத்தனர். இரவு முழுதும் அவ்வறைக்கு வெளியில் ஆண், பெண், இளைஞர்கள் என்போர் தீ மூட்டி குளிர் காய்ந்த வண்ணம் காவல் இருந்தார்கள். இரவு 10.30 முதல் விடிய 5.00 மணி வரை பொகவந்தலால, நோர்வூட் பிரிவுகளைச் சேர்ந்த பொலிசார் மாறி மாறி வந்து 'கேரோ' செய்யப்பட்டுள்ள உதவி அத்தியட்சகர்களை மீட்க முயன்றபோதும் தொழிலாளர்கள் அவர்களை நெருங்க கூட விடவில்லை.

இவ்வேலை நிறுத்தத்துக்கு ஆதரவளிக்க முன்வராத இ.தொ.கா. பிரதேச சபைத் தலைவர் ஜெகதீஸ்வரன் 15ம் திகதிஅதிகாலை 5.15க்கு உதவி அத்தியட்சகர்களை விடுவிப்பதற்காக பொலிசாருடன் வந்த போது தொழிலாளர்கள் கூச்சல் போட்டு விரட்டிவிட்டனர்.

அதைத் தொடர்ந்து மு.பகல் 11 மணியளவில் இ.தொ.கா ஹட்டன்



மாவட்ட பிரதிநிதி ஜெயராமன், நுவரெலிய பகுதி பொலிஸ் பிரிவுகளை சேர்ந்த பொலிஸ் கோஷ்டியுடன் வந்து அவர்களை விடுவிக்க முயன்றார். தொழிலாளர்கள் பெருமளவில் திரண்டு கூச்சல் போடவே, பொலிஸ் பின்வாங்கியதுடன் சமரசமாக பேசினர். தொழிலாளர்களோ ''எங்களது கோரிக்கைக்கு, பதில் தருவதற்காக தோட்டத்தை நிர்வகிக்கும் மடுல்சிம பிளான்டேசன் லிமிடட்டின் அதிகாரி லலித் ஒபேசேகராவை எங்களுடன் கதைக்க அனுப்புங்கள் என்று முன்வைத்த கோரிக்கைக்கு பொலிஸ் உதவி அத்தியட்சகர் உடன்பட்டதன் பின் பி.ப 2.00 மணிக்கு உதவி அத்தியட்சகர்கள் விடுவிக்கப்பட்டனர்.

இதற்கிடையில் தொழிலாளர்கள் மிகவும் தீவிரமாகவும் இருப்பதைக் கண்ட நிர்வாகம் தொழிற்சாலையில் இருக்கின்ற 'கொழுந்து' அனைத்தையும் இடம்மாற்ற முயன்றபோது, அச்சேதி கிடைத்த தொழிலாளர்களில் 300 பேரைக் கொண்ட இளைஞர் குழுவொன்று இரவு 12.00 மணியளவில் 'கெகல் கம ஒயா' எனும் ஆற்றினை நீந்தி மறு கரையிலுள்ள 'வெஞ்சர்' தோட்ட தொழிற்சாலையை சூழ்ந்து கொண்டனர். அங்கு வந்த இளைஞர்களின் ஆவேசத்தைக் கண்ட நிர்வாகம் 'கொழுந்தை அப்புறப்படுத்த மாட்டோம்' என்ற உத்தரவாதத்தின் பின் விடிய 4.30க்கு இளைஞர்கள் திரும்பி விட்டனர்.

இப்படியாக இறுதியில் செப்.21 ஆம் திகதி அட்டன் தொழில் நீதி மன்றத்தில் நடந்த பேச்சுவார்த்தையை அடுத்து வேலைநிறுத்தம் கைவிடப்பட்டது.

ஆனால் தொழிலாளர்களின் பூரண கோரிக்கைகளுக்கும் நிர்வாகம் உடன்படவில்லை. ஒரு சில கோரிக்கைகளே நிறைவேற்றுவதற்கான உத்தரவாத்தை அளித்துள்ளது.

குறிப்பாக பெண் தொழிலாளர்கள் நாளொன்றுக்கு 14 தொடக்கம் 16 கிலோவும் ஞாயிறு போயா தினங்களில் 22 கிலோவும் வரையான நிறையுள்ள கொழுந்து பறிக்க நிர்பந்திக்கப்படுகின்றனர். ஆனால் நாளொன்றுக்கு 12 கிலோவே ஒருவரால் பறிக்க முடியும். இருப்பினும் சாதாரண நாட்களில் 12 முதல் 14 கிலோவும் ஞாயிறு, போயா தினங்களில் 16 கிலோவும் பறித்து தருவதாக பெண் தொழிலாளர்கள் ஒப்புக்கொண்டார்கள். ஆயினும் இது பற்றிய தொழில் ஆணைக்குழுவின் விசாரணை பின்போடப்பட்டுள்ளது.

தவிரவும், ஒரு ஹெக்டேர் கவ்வாத்து வெட்டுவதற்கு 35 பேரால் முடியாது. இது பல தோட்டங்களில் உள்ள முக்கிய பிரச்சினை. இப்பிரச்சினையைத் தீர்ப்பதற்கு தொழிலாளர்களை இரண்டு மடங்காக அதிகரிக்கும் படி விடுக்கப்பட்ட கோரிக்கைக்கும் நிர்வாகம் இணங்கவில்லை.

இப்படியான பல கோரிக்கைகள் கிடப்பில் போடப்பட்டுள்ளன.

எனவே எந்நேரமும் இன்னொரு போராட்டம் எழலாம் என்ற நிலையே நிலவுகிறது. ''இம்முறை தாங்கள் ஆயத்தமாகவே உள்ளோம் என்பதை நிரூபித்து காட்டிய தொழிலாளர்கள் மீண்டும் ஒரு முறைதானும் ஏமாற்றப்பட்டால் நிச்சயமாக இதைவிட அதிகமாக தங்கள் பலத்தை காட்ட தயங்க மாட்டார்கள்'' என்று குறிப்பிட்டார் போராட்டத்தில் பங்கு பற்றிய ஒரு பெண் தொழிலாளி.

இப்போராட்டத்தில் பங்கு பற்றிய தொழிலாளர்கள், இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ், ஜனநாயக தொழிலாளர் காங்கிரஸ், அஸீஸ் ஜனநாயக தொழிலாளர் காங்கிரஸ், மலையக மக்கள் முன்னணி, லங்கா தோட்டத் தொழிலாளர் யூனியன், செங்கொடிச் சங்கம், இலங்கைத் தேசியத் தோட்டத் தொழிலாளர் சங்கம், தொழிலாளர் தேசிய சங்கம் ஆகிய தொழிற்சங்கங்களை சார்ந்தவர்களாவர். ஆயினும் இத்தொழிற் சங்கங்களில் எவையும் இப்போராட்டத்திற்கு தலைமை வகிக்கவில்லை என்பதும், தொழிலாளர்கள் தாமாகவே ஒன்றுபட்டு இப்போராட்டத்தில் ஈடுபட்டார்கள் என்பதும் குறிப்பிடத்தக்கதாகும்.

- மலையகத்திலிருந்து
எமது விஷேட நிருபர்



## சுதந்திர இலக்கிய விழா -1994

மூன்றாவது சுதந்திர இலக்கிய விழாவை முன்னிட்டு ஆக்க இலக்கிய படைப்பாளிகளுக்கு விருது வழங்கல். (விருது வழங்கல் இரு பிரிவுகளாக வகுக்கப்பட்டுள்ளன.)

1) 01.01.1993இல் இருந்து 31.12.1993 வரையான காலப்பகுதிகளில் கவிதை, சிறுகதை, நாவல், மொழி பெயர்ப்பு இலக்கியம் ஆகிய துறைகளில் வெளியாகிய நூல்களை விழாத் தெரிவுக்குழுவே சேகரித்து சிறந்தவற்றுக்கு விருது வழங்கல்.

(குறிப்பு:- தவறுகளை தவிர்க்குமுகமாக வெளியீடுகளைப் பற்றிய விபரங்களை அமைப்பு குழுவிற்கு தருமாறு வேண்டப்படுகிறீர்கள்.)

2) சிறுகதை, கவிதைத் துறைகளில் புதிய எழுத்தாளர்களுக்கான போட்டியொன்றை நடாத்தி சிறந்த படைப்புகளுக்கு பரிசு வழங்கல்.

புதிய எழுத்தாளர்களுக்கான போட்டி விதிகள்:

அ) இலங்கை பிரஜையாக இருத்தல் வேண்டும். (வயதெல்லை கிடையாது. வெளிநாட்டில் வதிபவராகவும் இருக்கலாம்)

ஆ) படைப்புகள் புதிதாக ஆக்கப்பட்டனவாகவோ ஏற்கனவே சஞ்சிகைகள், பத்திரிகைகளில் வெளிவந்தனவாகவோ இருக்கலாம்.

இ) சொந்த ஆக்கங்களாக இருத்தல் வேண்டும்.

ஈ) எந்தளவு படைப்புகளாயினும் தனித்தனி விண்ணப்பப் படிவங்களிலேயே இணைத்து அனுப்புதல் வேண்டும். படைப்புகள் தட்டச்சுத்தாளின் ஒரு பக்கத்தில் மட்டும் எழுதப்பட்டு அல்லது தட்டச்சு செய்யப்பட்டனவாக இருத்தல் வேண்டும்.

உ) கடித உறையின் இடதுபுற மேல் மூலையில் போட்டியிடும் துறையும் விடயத்தலைப்பும் குறிப்பிடப்பட வேண்டும்.

ஊ) நடுவர்களின் தீர்ப்பே இறுதியானது.

எ) போட்டி விதிகளுக்கு முரணானவைகளும், முடிவுத் திகதிக்கு முன் கிடைக்காத படைப்புகளும் நிராகரிக்கப்படும்.

ஏ) போட்டி முடிவுத் திகதி 31.10.1994

விண்ணப்பப்படிவங்களுக்கும் மேலும் விபரங்களுக்கும்

அமைப்பு குழு,
சுதந்திர, இலக்கிய விழா -1994
இல 61, பழைய கொட்டாவ வீதி
மிரிஹான
நுகேகொட

தொலைபேசி:811927

சரிநிகர் (இரு வாரங்களுக்கொருமுறை) இதழ்.இல.18/2 அலோசாலை கொழும்பு 03, இனங்களுக்கிடையே நீதிக்கும் சமத்துவத்திற்குமான இயக்கத்தின் சார்பில் வெளியிடுபவர் ச.பாலகிருஷ்ணன். 94.09.27
அச்சுப்பதிவு: 334காலி வீதி இரத்மலானை நவமக அச்சகம்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்